மலர் : 51 இதழ் : 3

தமிழரசு

செப்டம்பர் 2020
விலை ரூ. 20/–

தமிழரசு 1970-2020
பொன்விழா ஆண்டு

செய்தி – மக்கள் தொடர்புத்துறையின் வெளியீடு

மாணாக்கர்களுக்கு கல்விச் செல்வத்தை அளிப்பதோடு, ஒழுக்கம், பண்பு, தன்னம்பிக்கை, விடாமுயற்சி ஆகிய நெறிகளையும் போதித்து அறிவுசார் சமுதாயத்தை உருவாக்க வேண்டும்

செப்டம்பர் 5 – ஆசிரியர் தினம்

"ஆசிரியர் தின" வாழ்த்துச் செய்தி

கல்வியறிவு பெற்ற சமுதாயத்தை உருவாக்கிட வேண்டும் என்ற உயர்ந்த இலட்சியத்தோடு ஆசிரியராய் பணியை தொடங்கி, தனது அயராத உழைப்பால் இந்திய நாட்டின் குடியரசுத் தலைவராக உயர்ந்த தத்துவ மேதை டாக்டர் எஸ்.இராதாகிருஷ்ணன் அவர்களை சிறப்பிக்கும் வகையில் அன்னாரது பிறந்த நாளான செப்டம்பர் திங்கள் 5ஆம் நாள் ஆண்டுதோறும் "ஆசிரியர் தினமாக" கொண்டாடப்பட்டு வருகிறது.

"எண்ணும் எழுத்தும் கண்ணெனத் தகும்" என்ற கொன்றை வேந்தன் பாடலில் ஔவையார், உடலுக்கு கண்கள் எத்தகைய முக்கியத்துவம் வாய்ந்ததோ, அதேபோன்று ஒருவனது வாழ்க்கைக்கு எண்ணும் எழுத்தும் இரண்டு கண்கள் போன்றது என்று கல்வியின் சிறப்பினை போற்றுகிறார். அத்தகைய சிறப்புமிக்க கல்விச் செல்வத்தை மாணாக்கர்களுக்கு போதிக்கும் ஆசிரியப் பெருமக்கள் "எழுத்தறிவித்தவன் இறைவன் ஆவான்" என்று தெய்வநிலைக்கு ஒப்பாக போற்றப்படுகிறார்கள்.

மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் வழியில் செயல்படும் தமிழ்நாடு அரசு, அறப்பணியான ஆசிரியப் பணியினை அர்ப்பணிப்பு உணர்வோடு ஆற்றிவரும் நல்லாசிரியர்களுக்கு "டாக்டர் இராதாகிருஷ்ணன் விருது", சிறந்த முறையில் கணினியை பயன்படுத்தி மாணவர்களுக்கு பயிற்றுவித்தல், கல்வி இணைச் செயல்பாடுகளில் சிறந்து விளங்குதல், குழந்தைகள் சேர்க்கை மற்றும் பள்ளி மேலாண்மையில் சிறந்து விளங்கும் ஆசிரியர்களுக்கு "கனவு ஆசிரியர்" போன்ற சிறப்புமிக்க விருதுகளை வழங்கி, ஆசிரியப் பெருமக்களை கௌரவித்து வருகிறது.

நாட்டின் வருங்கால தூண்களான மாணவச் செல்வங்களுக்கு அழிவில்லா கல்விச் செல்வத்தை அளிப்பதோடு, ஒழுக்கம், பண்பு, தன்னம்பிக்கை, விடாமுயற்சி ஆகிய நெறிகளையும் போதித்து, வளமிக்க அறிவுசார் சமுதாயத்தை உருவாக்கும் அரும்பணியை ஆற்றிவரும் ஆசிரியப் பெருமக்களுக்கு இந்நன்னாளில் எனது உளம்கனிந்த "ஆசிரியர் தின" நல்வாழ்த்துகளை உரித்தாக்கிக் கொள்கிறேன்.

K. பழனிசாமி
தமிழ்நாடு முதலமைச்சர்

தமிழரசு

தமிழ்நாடு அரசு
செய்தி-மக்கள் தொடர்புத் துறையின் வெளியீடு

திருவள்ளுவர் ஆண்டு 2051
சார்வரி வருடம் : ஆவணி – புரட்டாசி
செப்டம்பர் 2020

மலர் : 51 விலை ரூ.20 இதழ் : 3

ஆசிரியர் - வெளியிடுபவர்
முனைவர் **பொ. சங்கர் இ.ஆ.ப.,**
இயக்குநர், செய்தி-மக்கள் தொடர்பு மற்றும் அலுவலால் அரசு கூடுதல் செயலாளர்

நிருவாக ஆசிரியர்
சீ. ராஜன்
துணை இயக்குநர் (வெளியீடுகள்)

முதன்மைப் பொறுப்பாசிரியர்
எஸ். சீதாலட்சுமி
உதவி இயக்குநர்

பொறுப்பாசிரியர்கள்
சு. கமலா
தேச. கலையரசன்
செய்தி-மக்கள் தொடர்பு அலுவலர்கள்

உதவி ஆசிரியர்கள்
ச. மஞ்சுளா
மு. மோகனவல்லி
மு. மணிமேகலை
அ. மதன்

கணினி வடிவமைப்பு
தி. ஜெய்சங்கர்
க.இரா. உமாமகேஸ்வரி

இதழ் உதவியாளர்
நி. ஷீலா

முதுநிலை அச்சுப்பிழைத் திருத்துபவர்
கோ. சந்திரசேகர்

வடிவமைப்பாளர்
கோ. முரளி கிருஷ்ணன்

தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
தமிழரசு அலுவலகம்,
இராஜீவ் காந்தி சாலை,
கானகம், தரமணி, சென்னை–600 113.
தொலைபேசி : 22542221 / 22542224
மின்னஞ்சல் : tamilarasujournal@gmail.com
இணையதளம் : www.tndipr.gov.in

தமிழரசு இதழுக்கு
www.tamilarasu.org என்ற இணையதளத்தில்
சந்தாத் தொகையினை நேரடியாக செலுத்தலாம்.

“முதலமைச்சரின் உதவி மையம் மற்றும் ஒருங்கிணைக்கப்பட்ட குறைதீர்ப்பு மேலாண்மைத் திட்டம்” மூலம் மனுக்கள் உடனடியாக பரிசீலிக்கப்பட்டு, விரைந்து தீர்வு காணப்படுகிறது.

– மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
திரு. **எடப்பாடி கே. பழனிசாமி** அவர்கள்

இந்த இதழில்...

✪ **மாண்புமிகு அம்மாவின் அரசு, பெண்கள் மற்றும் குழந்தைகளை என்றென்றும் அரணாக நின்று காக்கும்**
(தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி எண் 110இன் கீழ் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **எடப்பாடி கே. பழனிசாமி** அவர்களின் அறிக்கை – 16.09.2020)........ 5

✪ **கண்தானம் செய்ய விரும்புவோர்களுக்கு உதவிடும் வகையில், www.hmis.tn.gov.in/eye-donor என்ற இணையதளம் துவக்கம்**
(மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **எடப்பாடி கே. பழனிசாமி** அவர்கள் 07.09.2020 அன்று தலைமைச் செயலகத்தில், பொதுமக்கள் பயன்பெறும் வகையில் இணையதளத்தை துவக்கி வைத்தார்கள்)........18

✪ **நாகப்பட்டினம் மாவட்டத்தில் ரூ.1,000 கோடி மதிப்பீட்டில் உணவுப் பூங்கா உருவாக்கப்படும்**
(மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **எடப்பாடி கே. பழனிசாமி** அவர்கள் தலைமையில் 27.08.2020 அன்று நாகப்பட்டினம் மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலகத்தில், மாவட்ட வளர்ச்சித் திட்டப் பணிகள் மற்றும் கொரோனா நோய்த் தடுப்புப் பணிகள் குறித்து நடைபெற்ற ஆய்வுக் கூட்டத்தில் ஆற்றிய உரையிலிருந்து)........33

✪ **விவசாயிகளின் நலனை கருத்தில் கொண்டு, அரசு விவசாயிகளுக்கு தேவையான பயிர்க் கடன்களை வழங்கி வருகிறது**
(மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **எடப்பாடி கே. பழனிசாமி** அவர்கள் தலைமையில் 20.08.2020 அன்று தருமபுரி மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலகத்தில், மாவட்ட வளர்ச்சித் திட்டப் பணிகள் மற்றும் கொரோனா நோய்த் தடுப்புப் பணிகள் குறித்த ஆய்வுக் கூட்டத்தில் ஆற்றிய உரையிலிருந்து)........65

முதலாம் பக்க அட்டை

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
திரு. **எடப்பாடி கே. பழனிசாமி** அவர்கள் 28.08.2020 அன்று
திருவாரூரிலிருந்து, தஞ்சாவூர் செல்லும் வழியில்,
திருவாரூர் மாவட்டம், கோயில்வெண்ணி அருகே
ஆதனூர் கிராமத்தில் சாலையோர நெல் வயலில்,
களை பறித்துக் கொண்டிருந்த விவசாய பெண்களிடம்,
முகக்கவசங்களை வழங்கி கலந்துரையாடினார்கள்.

மாண்புமிகு அம்மாவின் அரசு, பெண்கள் மற்றும் குழந்தைகளை என்றென்றும் அரணாக நின்று காக்கும்

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
விதி எண் 110இன் கீழ்
மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
திரு. **எடப்பாடி கே. பழனிசாமி** அவர்களின்
அறிக்கை – 16.09.2020

பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கான உரிமைகளையும், பாதுகாப்பினையும் உறுதி செய்தல்

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே!

பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கான நலம் பேணி, அவர்களின் உரிமைகளையும், பாதுகாப்பினையும் உறுதிபடுத்த பல்வேறு முன்னோடித் திட்டங்கள் தீட்டி, செயல்படுத்தியவர் மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்கள்.

- தமிழ்நாட்டில் உள்ள மாவட்டங்களில் பாலின விகித மேம்பாட்டினை உறுதி செய்வதற்காக பெண் குழந்தை பாதுகாப்புத் திட்டம்.
- பெண் சிசுக்கொலையை ஒழிக்க, தொட்டில் குழந்தைத் திட்டம்.
- பெண்கள் உயர்கல்வி கற்க ஊக்குவிக்கவும், ஏழ்மை நிலையிலுள்ள பெற்றோர்களின் மகள்கள் மற்றும் ஆதரவற்ற பெண்களின் திருமணத்திற்காக உதவித் தொகையுடன் தாலிக்குத் தங்கம் வழங்கும் திட்டம்.
- ஆதரவற்ற மற்றும் கணவனால் கைவிடப்பட்ட பெண்கள் பாதுகாப்புடன் தங்குவதற்கு அரசு சேவை இல்லங்கள்.
- பணிபுரியும் மகளிர் இரு சக்கர வாகனம் வாங்குவதற்கு மானியம் வழங்கும் அம்மா இருசக்கர வாகனத் திட்டம்,

ஆகிய வரலாற்றுச் சிறப்பு மிக்கத் திட்டங்கள் சிறப்பாக செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

- பெண்களின் உரிமைகளை பாதுகாக்கும் வகையிலும், பெண்களுக்கு எதிரான வன்கொடுமைகளை ஒழித்திடும் வகையிலும், முன்னோடியாக, 1992ஆம் ஆண்டில் அனைத்து மகளிர் காவல் நிலையங்கள் மாண்புமிகு அம்மா அவர்களால் தொடங்கப்பட்டது. பெண்களுக்கு எதிரான குற்றங்கள் குறித்த வழக்குகளை விசாரிக்க ஒவ்வொரு மாவட்டத்திலும் மகளிர் விரைவு நீதிமன்றங்களை அமைக்கவும் மாண்புமிகு அம்மா அவர்கள் உத்தரவிட்டார்கள்.
- இந்தியாவிலேயே முதன்முதலாக பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கெதிரான குற்றத்தடுப்பு பிரிவு (Crime Against Women and Children Unit) ஒரு முன்னோடித் திட்டமாக 06.03.2019 முதல் தமிழ்நாட்டில் மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் அரசால் உருவாக்கப்பட்டு, சிறந்த முறையில் செயல்பட்டு வருகிறது.
- பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கெதிரான குற்றங்கள் நடைபெறாமல் தடுத்து, உடனடியாக நடவடிக்கைகள் மேற்கொள்ளும் நோக்கத்திற்காக, பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கெதிரான குற்றங்களை விசாரிக்கும் கண்காணிப்புப் பிரிவு (IUCAW), சிறப்பு சிறார் காவல் பிரிவு (SJU), வரதட்சணை தடுப்புப் பிரிவு, குழந்தைக் கடத்தல் தடுப்புப் பிரிவு (ACTU), ஆகிய அலகுகள் உருவாக்கப்பட்டு செயல்பட்டு வருகின்றன.
- சென்னை பெருநகர காவல் எல்லைக்குட்பட்ட 35 அனைத்து காவல் நிலையங்களுக்கும் நவீன வசதிகள் பொருத்திய ஊர்திகள், நிர்பயா நிதியின் கீழ் வழங்கப்பட்ட அம்மா ரோந்து வாகனம் மூலம் ரோந்துப் பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது. அவற்றின் வாயிலாக பெண்களுக்கும் குழந்தைகளுக்கும் எதிரான குற்றச் செயல்கள் தடுக்கப்பட்டு வருவதுடன், அவர்கள் போதை பொருட்களுக்கு அடிமையாதல் மற்றும் குழந்தை திருமணம் ஆகியவற்றை தடுக்க விழிப்புணர்வு பிரச்சாரமும் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

- பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கு எதிரான குற்றச் செயல்களில் தொடர்ந்து ஈடுபடுபவர்கள் குண்டர்கள் தடுப்புச் சட்டத்தின் கீழ் (Goondas Act) கைது செய்யப்பட்டு வருகிறார்கள்.
- அதுமட்டுமின்றி, பெண்கள் மற்றும் குழந்தைகளின் பாதுகாப்பினை உறுதி செய்வதற்காக காவலன் செயலி, மகளிர் உதவி எண் 181, குழந்தைகளுக்கான உதவி எண் 1098 போன்றவையும் சிறப்பாக செயல்படுத்தப்பட்டு, குற்றங்கள் வெகுவாக தடுக்கப்பட்டுள்ளன.
- **பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கான பாதுகாப்பினை மேலும் உறுதி செய்வதற்கு மாண்புமிகு அம்மாவின் அரசு, 1860ஆம் ஆண்டைய இந்திய தண்டனைச் சட்டத்தில் பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கு எதிரான குற்றங்களுக்கான தண்டனையை மேலும் கடுமையாக்கிட மத்திய அரசின் அனுமதி பெற்று கீழ்க்கண்ட சட்டத் திருத்தங்களை கொண்டு வர நடவடிக்கை எடுக்கும்.**
  - ★ **பிரிவு 304–Bஇல் வரதட்சணை தொடர்பான மரணங்களுக்கு தற்போது வழங்கப்படும் குறைந்தபட்சம் ஏழு ஆண்டுகள் சிறை தண்டனையை, குறைந்தபட்சம் பத்து ஆண்டுகள் தண்டனையாக வழங்குதல்,**
  - ★ **பிரிவு 354–Bஇல் குற்ற நோக்கத்துடன் (பெண்களின் ஆடைகளை களைதல்) செயல்படுவதற்கு தற்போது வழங்கப்படும் குறைந்தபட்சம் மூன்று ஆண்டுகள் சிறை தண்டனையை, குறைந்தபட்சம் ஐந்து ஆண்டுகளாகவும், அதிகபட்சமாக வழங்கப்படும் 7 ஆண்டுகள் சிறை தண்டனையை கடுமையாக்கி பத்தாண்டுகளாகவும் வழங்குதல்,**
  - ★ **பிரிவு 354–Dஇல் தவறான குற்ற நோக்கத்துடன் பெண்களை பின்தொடர்ந்தால், இரண்டாம் முறையும், தொடர்ந்தும் குற்றமிழைத்தால் தற்போது வழங்கப்படும் ஐந்தாண்டுகள் வரையான சிறை தண்டனையை, அதிகபட்சமாக ஏழு ஆண்டுகளாக்கவும்,**
  - ★ **பிரிவு 372இல் பாலியல் தொழிலுக்காக 18 வயதுக்குட்பட்ட நபர்களை விற்பனை செய்தல் மற்றும் பிரிவு 373இல் பாலியல் தொழிலுக்காக 18 வயதுக்குட்பட்ட நபர்களை விலைக்கு வாங்குதல், தற்போது வழங்கப்படும் அதிகபட்சமான பத்தாண்டுகள் வரையிலான சிறை தண்டனைக்கு பதிலாக, குறைந்தபட்சம் ஏழு ஆண்டுகள் சிறை தண்டனையும், அதிகபட்சம் ஆயுள் தண்டனையும் வழங்குவதற்கு மத்திய அரசுக்கு பரிந்துரை செய்யப்படும்.**

மாண்புமிகு அம்மாவின் அரசு பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கு என்றென்றும் அரணாக தொடர்ந்து நின்று அவர்களை காக்கும் என உறுதிபட தெரிவித்துக் கொள்கிறேன்.

திருவள்ளுவர் பல்கலைக்கழகத்தை இரண்டாகப் பிரித்து, விழுப்புரத்தைத் தலைமையிடமாகக் கொண்ட ஒரு புதிய பல்கலைக்கழகம் உருவாக்கப்படும்

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி எண் 110இன் கீழ்
மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
திரு. **எடப்பாடி கே. பழனிசாமி** அவர்களின்
அறிக்கை – 16.09.2020

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்கள் வழியில் செயல்படும் அம்மாவின் அரசும் பல உயர்கல்வி நிறுவனங்களை தொடர்ந்து உருவாக்கியும், பல உயர் கல்வி நிறுவனங்களின் கட்டமைப்புகளை மேம்படுத்தியும் வருகிறது. இதன் காரணமாக, தமிழ்நாட்டின் கிராமப்புறங்கள் மற்றும் மூலைமுடுக்கில் உள்ள ஏழை, எளிய மாணாக்கர்களின் உயர்கல்வி கனவு நனவானது. இதன் காரணமாகத்தான் அகில இந்திய அளவில் 26.3 விழுக்காடு என இருக்கும் மாணவர் சேர்க்கை விகிதம், தமிழ்நாட்டில் மிக அதிகமாக, அதாவது 49 விழுக்காடு என்ற அளவில் உள்ளது என்பதை பெருமையுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு சட்டத்துறை அமைச்சர் அவர்களின் கோரிக்கை மற்றும் விழுப்புரம் பொது மக்களின் நீண்ட நாள் கோரிக்கையினை ஏற்று, திருவள்ளுவர் பல்கலைக்கழகத்தை இரண்டாகப் பிரித்து, விழுப்புரத்தைத் தலைமையிடமாகக் கொண்ட ஒரு புதிய பல்கலைக்கழகம் உருவாக்கப்படும். இப்பல்கலைக்கழகம் நடப்பாண்டிலேயே செயல்பட துவங்கும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

முதலமைச்சரின் உதவி மையம் மற்றும் ஒருங்கிணைக்கப்பட்ட குறைதீர்ப்பு மேலாண்மைத் திட்டம்

Integrated & Inclusive Public Grievance CM Helpline Management System (IIPGCMS)

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
விதி எண் 110இன் கீழ்
மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
திரு. **எடப்பாடி கே. பழனிசாமி** அவர்களின்
அறிக்கை – 15.09.2020

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

தற்போது வெவ்வேறு அரசுத் துறைகள் தங்களுக்கென, தனித்தனியே துறைவாரியான மக்கள் குறைதீர்ப்பு மையங்கள் மற்றும் இணையதளங்களை உருவாக்கி செயல்படுத்தி வருகின்றன. மாவட்ட அளவில் திங்கள்கிழமைதோறும் பொது மக்கள் குறைதீர்க்கும் நாள், மாதாந்திர மனுநீதி நாள், விவசாயிகள் மற்றும் மீனவர்கள் குறைதீர்க்கும் நாள், அம்மா திட்ட குறைதீர்க்கும் நாள், ஓய்வூதியதாரர்கள் குறைதீர்க்கும் நாள் போன்றவையும், மாநில அளவில் முதலமைச்சரின் தனிப்பிரிவு, அம்மா அழைப்பு மையம் போன்ற அமைப்புகளிலும் மனுக்கள் பெறப்பட்டு, தீர்வுகள் காணப்படுகின்றன. இதனால், ஒரே நபர் பல்வேறு இடங்களில் மனுக்களை அளிக்கும் சூழல் ஏற்படுகிறது.

ஒரே கோரிக்கை மனு மாவட்ட அளவிலும் மாநில அளவிலும் வழங்கப்படுவதையும் காண முடிகிறது.எனவே, தமிழ்நாடு அரசுத் துறைகளின் கீழ் செயல்படும் எல்லாக் குறைதீர்ப்பு அமைப்புகளையும் ஒருங்கிணைத்து, குறைகள் விரைந்து களையப்படுவதைக் கண்காணிக்க ஒரு சிறப்பான அமைப்பு முறை தேவைப்படுகிறது. எனவே, பொதுமக்களின் குறைகளை உடனுக்குடன் பதிவு செய்து, அவற்றிற்குத் தீர்வு காண, ஒரு குறைதீர்ப்பு மேலாண்மைத் திட்டம் அமைப்பதன் அவசியத்தை உணர்ந்து, **“முதலமைச்சரின் உதவி மையம் மற்றும் ஒருங்கிணைக்கப்பட்ட குறைதீர்ப்பு மேலாண்மைத் திட்டம்”** ஒன்றை அரசு செயல்படுத்த உள்ளது.

இத்திட்டம் முதற்கட்டமாக தகவல் தொழில் நுட்பத் துறையின் மூலம் 12.78 கோடி ரூபாய் செலவில் நடைமுறைப்படுத்தப்படும். முதற்கட்டமாக 100 இருக்கைகள் கொண்ட உதவி மையமாக செயல்பட இருக்கும் இம்மையம், தேவைக்கேற்ப விரிவாக்கம் செய்யப்படும். குறைதீர்க்கும் முகாம்களிலோ இணைய தளத்திலோ அல்லது அரசு அலுவலர்களோ குறை தீர்க்கும் மனுக்களைப் பெறும்போது வேலைவாய்ப்பு கோரி பெறப்படும் மனுக்களே அதிகமாக உள்ளன. இதனைக் கருத்தில் கொண்டு, இந்த மையங்களில் பெறப்படும் அம்மனுக்கள் சம்பந்தப்பட்ட துறைகள் மூலம் உடனுக்குடன் பரிசீலிக்கப்பட்டு, தேவைப்படின் மனுதாரர்களுக்கு திறன் மேம்பாட்டுப் பயிற்சியும் அளிக்கப்பட்டு, உரிய வேலைவாய்ப்பு வழங்க நடவடிக்கை எடுக்கப்படும்.

இத்திட்டத்தின் மூலம் பல்வேறு அரசுத்துறைகள் தொடர்பான தனது குறைகளை, மனுதாரர் ஒரே தளத்தில் பதிவேற்றம் செய்யலாம். இந்த மனுக்கள் **“முதலமைச்சரின் உதவி மையம் மற்றும் ஒருங்கிணைக்கப்பட்ட குறைதீர்ப்பு மேலாண்மைத் திட்டம்” மூலம் உடனடியாக பரிசீலிக்கப்பட்டு, விரைந்து தீர்வு காணப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.**

திருவள்ளூர் மாவட்டத்தில், உலக முதலீட்டாளர் மாநாட்டின் மூலம், ரூ.4,031 கோடி முதலீட்டில், 16,225 நபர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கும் வகையில் 4 தொழிற் திட்டங்கள் வணிக உற்பத்தியை துவக்கியுள்ளன

திருவள்ளூர் மாவட்டத்தில் அதிக தடுப்பணைகள் கட்டப்பட்டுள்ளன. பொதுப்பணித்துறை நீர்வள ஆதார துறையின் மூலமாக, கடந்த 2 ஆண்டுகளில் குடிமராமத்து திட்டம் மூலம் ரூ.18.33 கோடி மதிப்பீட்டில் 107 பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. 2019–2020ஆம் ஆண்டு சுமார் ரூ.10.17 கோடி மதிப்பீட்டில் 26 குடிமராமத்துப் பணிகள் முடிக்கப்பட்டு, 4 பணிகள் மட்டும் முடியும் தருவாயில் உள்ளன. அதேபோல, எண்ணூர் முதல் எர்ணாவூர் குப்பம் வரை முதல் கட்டமாக 9 எண்கள் கொண்ட தூண்டில் வளைவுகள் அமைக்கும் பணி சுமார் ரூ.38 கோடி மதிப்பீட்டில் முடிக்கப்பட்டுள்ளது. மாதவரம், அம்பத்தூர் மற்றும் கொரட்டூர் ஏரிகளை புனரமைப்பு மற்றும் சுற்றுச்சூழல் மீட்டெடுப்பு பணி ரூ.26 கோடி செலவில் முடிக்கப்பட்டுள்ளது. தடுப்பணையைப் பொறுத்தவரை, நிரந்தர வெள்ளத் தடுப்புப் பணிகள்– கொசஸ்தலையாற்றின் குறுக்கே புதுக்குப்பம் மற்றும் குதிரைப்பள்ளம் இடையிலான கிராமத்தில் தடுப்பணை அமைக்கும் பணி முடிக்கப்பட்டுள்ளது.

> மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **எடப்பாடி கே. பழனிசாமி** அவர்கள் தலைமையில் 07.09.2020 அன்று திருவள்ளூர் மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலகத்தில் மாவட்ட வளர்ச்சித் திட்டப் பணிகள் மற்றும் கொரோனா நோய்த் தடுப்புப் பணிகள் குறித்து நடைபெற்ற ஆய்வுக் கூட்டத்தில் ஆற்றிய உரையிலிருந்து...

புட்லூர் கிராமத்தில் கூவம் ஆற்றின் குறுக்கே தடுப்பணை அமைக்கும் பணி முடிக்கப்பட்டுள்ளது.

ஊத்துக்கோட்டை வட்டத்தில் கண்டலேறு–பூண்டி கால்வாயில் சேதமடைந்த பல பகுதிகளை வலுப்படுத்தும் பணியும் முடிக்கப்பட்டுள்ளது. நீர்வள நிலவளத் திட்டம் மூலமாக, பகுதி–2இல் 11 ஏரிகள் மற்றும் 12 கொண்டங்கள் ஆகியவற்றை புனரமைக்கும் பணிகள் ரூ.3.79 கோடி மதிப்பீட்டில் நடைபெற்று வருகின்றன. மேலும், பல பணிகள் தொடங்கப்படவுள்ளன. பூந்தமல்லி வட்டத்தில், கூவம் ஆற்றின் குறுக்கே பழுதடைந்த கொரட்டூர் அணைக்கட்டை சுமார் ரூ.32.45 கோடி மதிப்பீட்டில் மறுகட்டுமானம் செய்யும் பணி துவங்கப்பட்டுள்ளது.

கண்டலேறு–பூண்டி கால்வாயினை 10 கிலோ மீட்டர் வரை வலுப்படுத்தும் பணிகள் சுமார் ரூ.24.79 கோடி மதிப்பீட்டில் தொடங்கப்பட்டுள்ளன. தாமரைப்பாக்கம் அணைக்கட்டின் துண்டிக்கப்பட்ட சுவற்றை மேம்படுத்தும் பணி சுமார் ரூ.4 கோடி மதிப்பில் தொடங்கப்படவுள்ளது. திருத்தணி வட்டம், இலுப்பூர் கிராமத்தின் அருகே நகரி ஆற்றின் குறுக்கே ரூ.18 கோடி மதிப்பீட்டில் தடுப்பணை அமைக்கும் பணி, கிருஷ்ணா குடிநீர் வழங்கும் திட்ட ஊட்டுக் கால்வாய் ரூ.25 கோடி மதிப்பீட்டில் பலப்படுத்தும் இரண்டு பணிகள் பரிசீலனையில் இருக்கின்றன. இவ்வாறு, இந்த மாவட்டத்தில் பல தடுப்பணைகள் கட்டும் பணிகள் அரசின் பரிசீலனையில் உள்ளன.

பட்டரைப்பெரும்புதூரில் அரசு சட்டக் கல்லூரிக் கட்டடம் ரூ.60 கோடி மதிப்பீட்டில் கட்டி முடிக்கப்பட்டுள்ளது. திருவள்ளூரில் கூடுதல் நீதிமன்றம், இடைநிலைக் கல்வித் திட்டத்தில் மாவட்டம் முழுவதும் அரசு உயர்நிலைப்பள்ளிகளுக்கு புதிய வகுப்பறை கட்டடங்கள், அம்பத்தூர் தமிழ்நாடு தொழிலாளர்கள் கல்வி நிறுவனக் கட்டடங்கள், திருவள்ளூரில் அரசு மருத்துவமனை கூடுதல் கட்டடம், பள்ளிப்பாளையம், திருப்பாலைவனம் மற்றும் ஆண்டார்மடம் ஆகிய இடங்களில் புயல் பாதுகாப்பு மையக் கட்டடம் என பல கட்டடங்கள் பல கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டி முடிக்கப்பட்டுள்ளன என்பதை தெரிவிக்க விரும்புகிறேன்.

இந்த மாவட்டத்தில் ஒரு புதிய அரசு மருத்துவக் கல்லூரி மற்றும் மருத்துவமனை அமைக்க வேண்டுமென்று மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள், சட்டமன்ற உறுப்பினர்கள் வைத்த கோரிக்கையை ஏற்று, மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் அரசு ரூ.386 கோடி மதிப்பீட்டில் அமைக்க பணிகள் தொடங்கப்பட்டு, தற்பொழுது கட்டடப் பணிகள் நடைபெற்று வருகின்றன. தமிழக வரலாற்றிலேயே 11 அரசு மருத்துவக் கல்லூரிகளை சுமார் இரண்டாண்டு காலத்தில் பெற்று, அதற்கான கட்டடப் பணிகள் தொடங்கப்பட்டுள்ளன. வரும் நடப்பாண்டில் இந்த மருத்துவக் கல்லூரிகளில் மாணவர்கள் சேர்க்கை நடைபெறும் என்பதைத் தெரிவிக்க விரும்புகின்றேன்.

நெடுஞ்சாலைத் துறையில் பல பாலப் பணிகள் இந்த மாவட்டத்தில் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. திருத்தணி மற்றும் திருவள்ளூருக்கு புறவழிச் சாலைகள் அமைத்தல் போன்ற பணிகள் நடைபெற்று வருகின்றன. பல குடிநீர் திட்டப் பணிகள் நடைபெற்று வருகின்றன. திருத்தணி நகராட்சிக்கு சுமார் ரூ.110 கோடி மதிப்பீட்டில் குடிநீர் அபிவிருத்தித் திட்டப் பணிகள் நடைபெற்று வருகின்றன. இந்தத் திட்டம் 2022ஆம் ஆண்டுக்குள் முடிக்கப்படும்.

ஆவடி மாநகராட்சியில் பாதாள சாக்கடைத் திட்டம் ரூ.158 கோடி செலவில் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இந்த மாவட்டத்திலுள்ள 16,019 சுய உதவிக் குழுக்களில் 1,31,943 நபர்கள் உறுப்பினர்களாக உள்ளனர். அவர்களுக்கு மாண்புமிகு அம்மாவின் அரசு இதுவரை ரூ.904 கோடி கடனுதவி வழங்கப்பட்டிருக்கிறது. கடந்த இரண்டாண்டுகளில் அம்மா இருசக்கர வாகனம் வழங்கும் திட்டத்தின் கீழ், 3,292 மகளிருக்கு ரூ.823.30 இலட்சம் மானியமாக வழங்கப்பட்டுள்ளது.

விவசாயிகளுக்காக நுண்ணீர் பாசனத் திட்டம் போன்ற பல திட்டங்கள் நிறைவேற்றப்பட்டிருக்கின்றன. திருவள்ளூர் மற்றும் சோழவரம் வட்டாரங்களில் ரூ.8 கோடி மதிப்பீட்டில், முதன்மை பதப்படுத்தும் நிலையங்கள் அமைக்கப்பட உள்ளன. பயிர் காப்பீட்டுத் திட்டத்தின் கீழ், விவசாயிகளுக்கு 230 கோடியே 97 இலட்சம் ரூபாய் இழப்பீடாக வழங்கப்பட்டுள்ளன. வர்தா புயலால் பாதிக்கப்பட்ட 60,000 விவசாயிகளுக்கு நிவாரணத் தொகையாக ரூ.50 கோடி வழங்கப்பட்டுள்ளது.

திருவள்ளூர் மாவட்டத்தில், மீன்பிடி குறைவு காலத்திற்காக ரூ.5,000/– என, மூன்றாண்டுகளில் 35,499 பயனாளிகளுக்கு சுமார் ரூ.17.75 கோடி வழங்கப்பட்டுள்ளது. மீனவ நல வாரிய உறுப்பினர்களுக்கு

கொரோனா சிறப்பு நிவாரணமாக தலா ரூ.1,000/– வீதம் இரண்டு தவணையாக 38,102 பயனாளிகளுக்கு ரூ.7.68 கோடி நிவாரணம் வழங்கப்பட்டுள்ளது.

தமிழ்நாடு குடிசைப் பகுதி மாற்று வாரியத்தில் ஜவஹர்லால் நேரு தேசிய சீரமைப்புத் திட்டத்தின் கீழ், கூடப்பாக்கத்தில் 1,024 பயனாளிகளுக்கு ரூ.71.44 கோடி செலவில் குடியிருப்புகள் கட்டிக் கொடுக்கப்பட்டுள்ளன. ராஜீவ் காந்தி அவாஸ் யோஜனா, பிரதமரின் அனைவருக்கும் வீடு கட்டும் திட்டம், பங்களிப்புடன் திறனுக்கேற்ப வீடு கட்டும் திட்டம் என பல திட்டங்களின் வாயிலாக மக்களுக்கு அம்மாவின் அரசால் வீடு கட்டிக் கொடுக்கப்படுகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். மறு குடியிருப்புத் திட்டத்தில், ரூ.516 கோடி மதிப்பீட்டில் 3,880 அடுக்குமாடி குடியிருப்பு அமைக்கும் பணிகள் அடுத்த மாதம் துவங்கும்.

அனைவருக்கும் வீட்டுவசதித் திட்டம்–பயனாளிகள் தாங்களாகவே வீடு கட்டும் திட்டத்தில் ரூ.479.70 கோடி மதிப்பீட்டில் 15,990 பயனாளிகளுக்கு வீடுகள் கட்டும் பணிகளில் 1,689 பணிகள் முடிவுற்றுள்ளன, 6,493 பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன, 7,808 பணிகள் தொடங்கப்பட்டுள்ளன. இப்படி மக்களுக்கு வீடு கட்டிக் கொடுக்கின்ற திட்டத்தை அம்மாவின் அரசு துரிதமாக செயல்படுத்தி வருகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திருமழிசை துணைக்கோள் நகரத் திட்டம் பகுதி–1இல் ரூ.259.49 கோடி மதிப்பீட்டிலான பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. அதேபோல, அயம்பாக்கம் கிராமத்தில் 608 குடியிருப்புகள் அறிவிக்கப்பட்டு, முதற்கட்டமாக 336 குறைந்த வருவாய் பிரிவு அடுக்குமாடி குடியிருப்புகள் நிறைவு பெற்று பயனாளிகள் பயன்படுத்தி வருகின்றனர்.

இன்றைக்கு தமிழகம் கல்வியில் புரட்சியை கண்டிருக்கிறது. கல்வி கற்போருடைய எண்ணிக்கை அதிகரித்திருக்கின்றது. அதற்குக் காரணம் அம்மாவின் அரசு கல்வியின் தரத்தை உயர்த்தி இருப்பதுதான். கடந்த மூன்றாண்டுகளில், 9 நடுநிலைப் பள்ளிகள் உயர்நிலைப் பள்ளிகளாகவும், 12 உயர்நிலைப் பள்ளிகள் மேல்நிலைப் பள்ளிகளாகவும் தரம் உயர்த்தப்பட்டிருக்கின்றன. மேலும் மாணவச் செல்வங்கள் அந்தந்த பகுதிகளிலேயே உயர்கல்வி படிக்கக்கூடிய சூழ்நிலையும் உருவாகியிருக்கிறது. அதேபோல, இந்த மாவட்டத்தில், குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில்கள் அதிக அளவில் இருக்கிறது. உலக முதலீட்டாளர் மாநாட்டின் மூலமாக, இந்த மாவட்டத்தில் ரூ.4,031 கோடி முதலீட்டில், 16,225 நபர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கும் வகையில் 4 தொழிற் திட்டங்கள் தங்களது வணிக உற்பத்தியை துவங்கியுள்ளன. இது ஒரு வரலாற்றுச் சாதனை. மாண்புமிகு அம்மாவின் அரசு தொழிற்புரட்சியை ஏற்படுத்துவதற்காக தொழில் முதலீட்டாளர்களுக்கு பல்வேறு சலுகைகளை அளித்து, அதன் மூலம் புதிய, புதிய தொழில்கள் தமிழகத்திற்கு வந்து கொண்டிருக்கின்றன. இதனால் படித்த இளைஞர்களுக்கு புதிய வேலைவாய்ப்புக்களை உருவாக்கி வருகின்றன.

2019ஆம் ஆண்டு உலக முதலீட்டாளர் மாநாட்டின் மூலம் திருவள்ளூர் மாவட்டத்தில் ரூ.620 கோடி முதலீட்டில் 450 நபர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கும் வகையில், பல்வேறு நிறுவனங்கள் தங்களது உற்பத்தி பணியைத் துவங்கியிருக்கின்றன. மேலும், 8 நிறுவனங்கள், ரூ.13,300 கோடி முதலீட்டில் 1,03,700 நபர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கும் வகையில் ஆயத்தப் பணிகளை மேற்கொண்டுள்ளன. ஆகவே, திருவள்ளூர் மாவட்டத்தைப் பொறுத்தவரை, மாண்புமிகு அம்மாவின் அரசு, பல்வேறு திட்டங்களை அறிவித்து, அவை அனைத்தும் நிறைவேற்றப்பட்டிருக்கின்றன என்ற செய்தியை தெரிவிக்க விரும்புகின்றேன்.

வேப்பங்கொழுந்து

குழந்தைகளுக்கு வயிற்றில் ஏற்படும் புழுத்தொல்லை மற்றும் பசியின்மைக்கு, வேப்பங்கொழுந்திலை 10, மஞ்சள் ½ விரற்கடை, ஓமம் ¼ தேக்கரண்டி எடுத்து, நன்கு அரைத்து சிறுநெல்லி அளவு 15 தினங்களுக்கு ஒரு முறை 3 நாட்கள் கொடுக்க, புழுத்தொல்லை மறைந்து, பசி நேரத்திற்கு வருகை தரும்.

திருவள்ளூர் மாவட்ட வளர்ச்சிப் பணிகள்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **எடப்பாடி கே. பழனிசாமி** அவர்கள் 07.09.2020 அன்று திருவள்ளூர் மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலகத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில், சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறை, நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, சமூக நலத் துறை, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை ஆகிய துறைகளின் சார்பில் 7.24 கோடி ரூபாய் மதிப்பீட்டிலான 21 முடிவுற்ற திட்டப் பணிகளை திறந்து வைத்து, பள்ளிக்கல்வித் துறை, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை, தொழிலாளர் நலத் துறை, கால்நடை பராமரிப்புத் துறை, தோட்டக்கலைத் துறை ஆகிய துறைகளின் சார்பில் 14.94 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 12 புதிய திட்டப் பணிகளுக்கு அடிக்கல் நாட்டினார்கள்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **எடப்பாடி கே. பழனிசாமி** அவர்கள் 07.09.2020 அன்று திருவள்ளூர் மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலகத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில், பயனாளிகளுக்கு அரசு நலத்திட்ட உதவிகளை வழங்கினார்கள். உடன் மாண்புமிகு ஊரக தொழில் துறை அமைச்சர் திரு.பா.பெஞ்சமின், மாண்புமிகு தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் தொல்லியல் துறை அமைச்சர் திரு.க.பாண்டியராஜன், சட்டமன்ற உறுப்பினர்கள், திருவள்ளூர் மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி மகேஸ்வரி ரவிக்குமார், இ.ஆ.ப., மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உள்ளனர்.

தகவல் தொழில்நுட்பவியல் துறை சார்பில் ரூ.74.69 கோடி மதிப்பீட்டில் தமிழ்நாட்டின் இரண்டாவது அதிநவீன தரவு மையம்

தமிழ்நாட்டிற்கான சைபர் பாதுகாப்பு கட்டமைப்புத் திட்டத்தினை செயல்படுத்திடும் விதமாக புதிய இணையதளம்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **எடப்பாடி கே. பழனிசாமி** அவர்கள் 07.09.2020 அன்று தலைமைச் செயலகத்தில், காணொலிக் காட்சி மூலமாக தரவு மையத்தை திறந்து, இணையதளத்தை துவக்கி வைத்தார்கள்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் 07.09.2020 அன்று தலைமைச் செயலகத்தில், தகவல் தொழில்நுட்பவியல் துறை சார்பில், சென்னை, பெருங்குடி, தமிழ்நாடு மின்னணு நிறுவன வளாகத்தில் ரூ.74.69 கோடி மதிப்பீட்டில் அமைக்கப்பட்டுள்ள தமிழ்நாட்டின் இரண்டாவது அதிநவீன மாநில தரவு மையத்தை காணொலிக் காட்சி மூலமாக திறந்து வைத்தார்கள். மேலும், தமிழ்நாட்டிற்கான சைபர் பாதுகாப்பு கட்டமைப்புத் திட்டத்தினை (Cyber Security Architecture -TN) செயல்படுத்திடும் விதமாக, முதற்கட்டமாக CERT-TNஇன் (Computer Emergency Response Team) https://cert.tn.gov.in என்ற இணையதளத்தை துவக்கி வைத்தார்கள்.

மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்கள், சட்டப்பேரவை விதி எண் 110இன் கீழ் வெளியிட்ட அறிவிப்பில், “அரசுத் துறைகள் தங்களது தகவல் தொழில்நுட்பம் சார்ந்த சேவைகளை அதிக அளவில் பொதுமக்களுக்கு அளித்திட முனைந்து வரும் இத்தருணத்தில், தமிழ்நாடு மாநில தரவு மையத்தில் தற்போதுள்ள உட்கட்டமைப்பு வசதிகள் இத்தேவைகளைப் பூர்த்தி செய்ய போதுமானதாக இல்லை. எனவே, அரசுத் துறைகளின் அதிகரித்து வரும் தகவல் உட்கட்டமைப்பு தேவைகளை கருத்தில் கொண்டு தமிழகத்தின் இரண்டாவது மாநில தரவு மையம் அமைக்கப்படும்” என்று அறிவித்தார்கள்.

அதன்படி, சென்னை, பெருங்குடியில் அமைந்துள்ள தமிழ்நாடு மின்னணு நிறுவன வளாகத்தில் ரூ.74.69 கோடி மதிப்பீட்டில் அமைக்கப்பட்டுள்ள தமிழ்நாட்டின் இரண்டாவது அதிநவீன மாநில தரவு மையத்தை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் காணொலிக் காட்சி மூலமாக திறந்து

வைத்தார்கள். இத்தரவு மையம் 195 அடுக்குகளை (Racks) கொண்டது. இப்புதிய மாநில தரவு மையம், தமிழ்நாடு அரசின் மென்பொருள் பயன்பாடுகள் மற்றும் இதர சேவைகளை பாதுகாப்பான முறையில் தரவேற்றம் செய்து பயன்படுத்திட உதவும். மேலும், G2G (அரசுத் துறைகளுக்கிடையில்), G2C (அரசுக்கும் குடிமக்களுக்கும் இடையில்) மற்றும் G2B (அரசுக்கும் வணிக நிறுவனங்களுக்கும் இடையில்) இணைய தள சேவைகளை வழங்குவதற்கும், வளர்ந்து வரும் அரசு துறைகளின் தகவல் தொழில்நுட்ப தேவைகளை பூர்த்தி செய்திடவும் இந்த அதிநவீன மாநில தரவு மையம் நிறுவப்பட்டுள்ளது.

இணைய பாதுகாப்பு கட்டமைப்பு திட்டம்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் 01.06.2018 அன்று சட்டப்பேரவை விதி எண் 110இன் கீழ் வெளியிட்ட அறிவிப்பில், தமிழ்நாடு அரசின் தகவல் தொழில் நுட்பவியல் உட்கட்டமைப்புகளான TNSWAN, TNSDC மற்றும் தமிழ்நாடு அரசால் செயல்படுத்தப்படும் மின் ஆளுமை சேவைகளை இணைய அச்சுறுத்தல்கள் மற்றும் தடைகளிலிருந்து கண்காணித்து, தடங்கலற்ற மற்றும் பாதுகாப்பான இணைய சேவையினை வழங்கும் பொருட்டு “தமிழ்நாட்டிற்கான இணைய பாதுகாப்பு கட்டமைப்பு திட்டம்” (Cyber Security Architecture for Tamil Nadu) ரூ.21.39 கோடி மதிப்பீட்டில் எல்காட் நிறுவனம் மூலம் செயல்படுத்தப்படும் என்று அறிவித்தார்கள்.

அதன்படி, தமிழ்நாட்டின் இணைய பாதுகாப்பு கட்டமைப்பு (CSA-TN) திட்டத்தினை செயல்படுத்தும் விதமாக முதற்கட்டமாக, Centre for Development of Advanced Computing (C-DAC) மூலம் உருவாக்கப்பட்டு, தமிழ்நாடு மின்னனு நிறுவனத்தால் செயல்படுத்தப்படவுள்ள CERT-TNஇன் (Computer Emergency Response Team) https://cert.tn.gov.in என்ற இணையதளத்தை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் துவக்கி வைத்தார்கள்.

இதன்மூலம், CERT- TN தமிழ்நாடு அரசின் கணினி அவசர கால பதிலளிப்பு குழுவாக இருக்கும். அனைத்து அரசு துறைகளின் கணினி கட்டமைப்புகளை தணிக்கை செய்தல், பாதுகாத்தல் மற்றும் கண்காணித்தல் ஆகிய பணிகளில் CERT- TN முக்கிய பங்கு வகிக்கும். மேலும், அரசு துறை சார்ந்த இணைய தகவல் பாதுகாப்பு அதிகாரிகளுக்கு பயனுள்ள இணைய பாதுகாப்பு தகவல் மற்றும் கருத்துக் கேட்பு ஆகிய வசதிகளை வழங்கும் விதத்தில் CERT-TN இணையதளம் உருவாக்கப்பட்டுள்ளது. இதன்மூலம் தடையற்ற இணையவழி சேவைகள் மற்றும் அரசு துறைகளின் தரவுகளின் பாதுகாப்பு உறுதி செய்யப்படும்.

அருகம்புல்

அருகம்புல்லின் துளிர் இலைகள், தண்டு மற்றும் வேர் ஆகிய அனைத்தும் மருத்துவ பயன்கள் கொண்டவை. தினமும் வெறும் வயிற்றில் அருகம்புல் சாறு குடிக்க உடல் இளைக்கும். புற்றுநோய்க்கு எதிரானது, நன்கு குளிர்ச்சி தரக்கூடியது, சர்க்கரை நோயை சீர்செய்ய வல்லது. பசியைத் தூண்டக்கூடியது. உடம்பில் உள்ள நரம்பின் விசையை அதிகரிக்க செய்வதில் அருகம்புல் சிறந்து செயல்படுகின்றது.

அருகம்புல்லிற்கும், நம் உடலில் நரம்புகளுக்கும் ஓர் ஈர்ப்புதிறன் இருக்கும் காரணத்தினால் நரம்பு சம்மந்தப்பட்ட நோய்களைக் குணப்படுத்தும்.

திருவண்ணாமலை மாவட்ட வளர்ச்சிப் பணிகள்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **எடப்பாடி கே. பழனிசாமி** அவர்கள் 09.09.2020 அன்று திருவண்ணாமலை மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலகத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில், பொதுப்பணித் துறை, இந்து சமய அறநிலையத் துறை, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை, கூட்டுறவுத் துறை, நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, தாட்கோ, வேளாண்மை பொறியியல் துறை, தோட்டக்கலைத் துறை, வேளாண் விற்பனை மற்றும் வேளாண் வணிகத் துறை, பால்வளத் துறை ஆகிய துறைகளின் சார்பில் ரூ.52.59 கோடி மதிப்பீட்டிலான 31 முடிவுற்ற திட்டப் பணிகளை திறந்து வைத்து, பொதுப்பணித் துறை, தோட்டக்கலைத் துறை, பால்வளத் துறை ஆகிய துறைகளின் சார்பில் ரூ.19.20 கோடி மதிப்பீட்டில் 11 புதிய திட்டப் பணிகளுக்கு அடிக்கல் நாட்டினார்கள்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **எடப்பாடி கே. பழனிசாமி** அவர்கள் 09.09.2020 அன்று திருவண்ணாமலை மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலகத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில், பயனாளிகளுக்கு அரசு நலத்திட்ட உதவிகளை வழங்கினார்கள். உடன் சட்டமன்ற உறுப்பினர்கள் திரு.வி.பன்னீர்செல்வம் மற்றும் திரு.கே.மோகன், திருவண்ணாமலை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.க.சு.கந்தசாமி, இ.ஆ.ப., திருவண்ணாமலை மாவட்ட பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு ஒன்றியத் தலைவர் திரு.அக்ரி எஸ்.எஸ்.கிருஷ்ணமூர்த்தி மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உள்ளனர்.

மரக்காணம் அருகில் ரூ.1,450 கோடி மதிப்பீட்டில் 60 மில்லியன் லிட்டர் திறன் கொண்ட, கடல் நீரைக் குடிநீராக்கும் திட்டம் செயல்படுத்தப்படும்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **எடப்பாடி கே. பழனிசாமி** அவர்கள் தலைமையில் 09.09.2020 அன்று விழுப்புரம் மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலகத்தில் மாவட்ட வளர்ச்சித் திட்டப் பணிகள் மற்றும் கொரோனா நோய்த் தடுப்புப் பணிகள் குறித்து நடைபெற்ற ஆய்வுக் கூட்டத்தில் ஆற்றிய உரையிலிருந்து...

தமிழகம் முழுவதும் 2000 மினி கிளினிக் ஆரம்பிக்கப்படும். மினி கிளினிக்கில் ஒரு மருத்துவர், ஒரு செவிலியர், ஒரு உதவியாளர் ஆகியோர் இருப்பர். கொரோனா வைரஸ் நோய்த் தொற்று இருக்கும் இந்த சூழ்நிலையில், காய்ச்சல், தலைவலி போன்றவை ஏற்பட்டால் கூட, அதற்கு சிகிச்சை பெற சிரமமாக உள்ளது. இந்தக் குறைகளைப் போக்க வேண்டுமென்பதற்காக, மாண்புமிகு அம்மாவின் அரசு, இந்த அற்புதமான புதிய திட்டமான மினி கிளினிக்குகளை விரைவில் உருவாக்க இருக்கிறது என்ற மகிழ்ச்சியான செய்தியைத் தெரிவிக்க விரும்புகிறேன். மினி கிளினிக்கிற்கு தேவையான மருத்துவ வசதிகள் செய்து கொடுக்கப்படும். இதனால் கடுமையான நோயால் பாதிக்கப்பட்டவர்களைக் கண்டறிந்து அவர்களை மேல் சிகிச்சைக்காக மாவட்ட மருத்துவமனைக்கு அனுப்பி வைக்க முடியும். இதனால் ஏழை, எளிய மக்கள் மற்ற நோய்களிலிருந்து விடுபடுவதற்கு இது ஒரு வாய்ப்பாக அமையும் என்பதையும் குறிப்பிட விரும்புகிறேன்.

திண்டிவனம் வட்டம், விடூர் அணையை சுமார் ரூ.43 கோடி மதிப்பீட்டில் புனரமைத்தல் மற்றும் தூர்வாரி சீரமைக்கின்ற பணி துவங்கவிருக்கிறது. அதேபோல, நந்தன் கால்வாய் திட்டம், சுமார் ரூ.27 கோடி மதிப்பீட்டில் சாத்தூர் அணையிலிருந்து நந்தன் கால்வாயை இணைக்கின்ற திட்டப் பணி விரைவில் துவங்க இருக்கிறது. அதேபோல, வானூர் திருவக்கரையில் 50 ஏக்கர் பரப்பளவில் கல்மரப் பூங்கா அமைப்பதற்கான அரசாணை வெளியிடப்பட்டுள்ளது.

அந்தப் பணியும் விரைவில் துவங்க இருக்கிறது. விழுப்புரம் மாவட்டத்தில் வானூரில் அரசு கலை மற்றும்

அறிவியல் கல்லூரி இந்த ஆண்டு துவக்கப்பட்டு, இந்த ஆண்டே மாணவர் சேர்க்கை நடைபெறும். மேலும், 6 அரசு மற்றும் அறிவியல் கல்லூரிகள் தோற்றுவிக்கப்படவுள்ளன. அரியலூர் மாவட்டத்தில் ஜெயங்கொண்டம், நாகப்பட்டினம் மாவட்டத்தில் குத்தாலம், இராணிப்பேட்டை மாவட்டத்தில் சோளிங்கர், விருதுநகர் மாவட்டத்தில் ஸ்ரீவில்லிபுத்தூர், கோவை மாவட்டத்தில் புளியங்குளம், கரூர் மாவட்டத்தில் கிருஷ்ணராயபுரம் வட்டம், தரகம்பட்டி ஆகிய இடங்களிலும், என மொத்தம் 7 கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள் இந்த ஆண்டு தோற்றுவிக்கப்பட்டு, இந்த ஆண்டே மாணவர் சேர்க்கையும் நடைபெறும்.

விழுப்புரம் மாவட்டத்தில், 53 பத்திரிகையாளர்களுக்கு வீட்டுமனைப் பட்டாக்கள் இன்றையதினம் வழங்கப்பட்டிருக்கிறது. விழுப்புரம் நகரத்தில் ஏற்கெனவே பாதாள சாக்கடைத் திட்டம் செயல்பட்டு வருகிறது. இன்னும் விரிவுபடுத்தப்பட்ட பகுதியில் ரூ.263 கோடி மதிப்பீட்டில் பாதாள சாக்கடைத் திட்டத்திற்கு அடிக்கல் நாட்டப்பட்டிருக்கிறது. திண்டிவனம் நகராட்சியில் ரூ.268 கோடி மதிப்பீட்டில் பாதாள சாக்கடைத் திட்டம் அடிக்கல் நாட்டப்பட்டிருக்கிறது. விழுப்புரம் நகராட்சி நூறு ஆண்டுகள் நிறைவு பெற்றதையொட்டி, அடிப்படைத் தேவைகளுக்காக ரூ.50 கோடி சிறப்பு நிதியாக ஒதுக்கீடு செய்து, பெரும்பாலான பணிகள் நிறைவு பெற்றிருக்கின்றன. மரக்காணம் வட்டம், கழுவேலி ஏரியை சீரமைக்கும் பணிக்கும், கடல்நீர் உட்புகாமல் இருப்பதற்கும் ரூ.161 கோடி மதிப்பீட்டில் பணி துவங்குவதற்கு அடிக்கல் நாட்டப்பட்டிருக்கிறது. திண்டிவனத்தில் சிப்காட் சார்பாக உணவுப் பூங்கா ஒன்று அமைக்க ரூ.2,500 கோடி முதலீடு ஈர்க்கப்பட்டு 4,000 நபர்களுக்கு வேலைவாய்ப்பு கிடைக்கக் கூடிய வகையில் சூழ்நிலை உருவாகும். இதற்காக 280 ஹெக்டேர் நிலம் கையகப்படுத்தப்பட்டுள்ளது.

விழுப்புரம் மாவட்டத்தில் உள்ள மாணவ, மாணவியர்கள் சட்டம் பயிலுவதற்கு ஏதுவாக ஒரு புதிய சட்டக் கல்லூரி கட்டி முடிக்கப்பட்டுள்ளது. மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் அவர்கள், அந்த சட்டக் கல்லூரிக்கு ரூ.5 கோடி செலவில் நூலகத்தை கட்டித் தந்திருக்கின்றார். விழுப்புரத்தில் 2017–2018இல் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி திறக்கப்பட்டது. மேலும், பி.எட் கல்லூரிக்கு கட்டடம் கட்டப்பட்டு வருகிறது. விரைவில் பி.எட் சேர்க்கை நடைபெறுவதற்கு அரசு நடவடிக்கை எடுக்கும். இங்கு இயங்கி வரும் திறந்தவெளி பல்கலைக் கழகத்திற்கு புதிய கட்டடம் கட்டப்பட்டிருக்கிறது.

வேளாண் தொழில் அதிகமாகவுள்ள இந்த மாவட்டத்தில் விவசாயிகளுக்கு பல்வேறு திட்டங்களை அரசு செயல்படுத்திக் கொண்டிருக்கிறது. பிரதம மந்திரி பயிர் காப்பீட்டு திட்டத்தின் கீழ், கள்ளக்குறிச்சி மாவட்டத்தையும் உள்ளடக்கிய விழுப்புரம் மாவட்டத்தில், கடந்த ஆண்டுகளில் 3.41 இலட்சம் விவசாயிகளுக்கு ரூ.293.35 கோடி இழப்பீட்டுத் தொகை பெற்றுத் தரப்பட்டுள்ளது. இது மிகப்பெரிய வரலாற்றுச் சாதனை. இதற்கு முன்பு இவ்வளவு பெரிய தொகையை இழப்பீடாக பெற்றுத் தந்த சரித்திரம் கிடையாது. அந்தச் சரித்திரத்தை அம்மாவின் அரசு படைத்துள்ளது. நுண்ணீர் பாசனத் திட்டத்தின் மூலம், கடந்த 4 ஆண்டுகளில் ரூ.210.03 கோடி மானியம் வழங்கப்பட்டுள்ளது. 2020–2021இல் இந்த நுண்ணீர் பாசனத் திட்டத்திற்காக விழுப்புரம் மாவட்டத்திற்கு ரூ.90.66 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. 2016–2017ஆம் ஆண்டில் விழுப்புரம், கள்ளக்குறிச்சி இணைந்திருந்த காலத்தில் 40 ஆண்டு காலம் இல்லாத கடும் வறட்சியின் காரணமாக பாதிக்கப்பட்ட 54,434 விவசாயிகளுக்கு ரூ.80.60 கோடி மானியமாக அம்மா அரசால் வழங்கப்பட்டுள்ளது. தமிழக வரலாற்றிலேயே வறட்சியால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு இழப்பீட்டுத் தொகை வழங்கிய ஒரே அரசு அம்மாவின் அரசு என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

நீடித்த மானாவாரி விவசாயத்திற்கான இயக்கத்தில், ரூ.53.56 கோடி செலவில் பல்வேறு பணிகள் செயல்படுத்தப்பட்டு 77,370 விவசாயிகள் இத்திட்டத்தில் பயனடைந்துள்ளனர். பெலாக்குப்பம் பகுதியில் ரூ.25.56 கோடி மதிப்பீட்டில் உணவுப்பூங்கா ஒன்று அமைக்க திட்ட மதிப்பீட்டுப் தயாரிக்கும் பணிகள் நடைபெற்று வருகிறது. செஞ்சி ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்தில் பல அடுக்கு கிட்டங்கி ரூ.15 கோடி மதிப்பீட்டில் அமைக்கப்பட்டு வருகிறது.

நீண்ட, நெடிய நாட்களாக விழுப்புரம் மாவட்டத்தில் பல்வேறு பகுதிகளிலுள்ள குடிநீர்ப் பிரச்சினைகளைத் தீர்க்க மரக்காணம் அருகிலுள்ள கூனிமேட்டில் ரூ.1,450 கோடி மதிப்பீட்டில் 60 மில்லியன் லிட்டர் திறன் கொண்ட கடல் நீரை குடிநீராக்கும் திட்டம் விரைவில் செயல்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும். இதன்மூலம் விழுப்புரம், திண்டிவனம் நகராட்சிகள், மரக்காணம், வானூர், மயிலம், விக்கிரவாண்டி, காணை ஒன்றியங்களிலுள்ள 692 குடியிருப்புகளைச் சேர்ந்த சுமார் 7.50 இலட்சம் மக்கள் குடிநீர் வசதி பெறுவார்கள்.

விழுப்புரம் மாவட்ட வளர்ச்சிப் பணிகள்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **எடப்பாடி கே. பழனிசாமி** அவர்கள் 09.09.2020 அன்று விழுப்புரம் மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலகத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை, பொதுப்பணித் துறை, நெடுஞ்சாலைத்துறை, நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, காவல்துறை, தாட்கோ, பள்ளிக்கல்வித் துறை, உயர்கல்வித் துறை, தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் மின் பகிர்மானக் கழகம், மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறை, கால்நடை பராமரிப்புத் துறை, இந்து சமய அறநிலையத் துறை ஆகிய துறைகளின் சார்பில் ரூ.102.55 கோடி மதிப்பீட்டிலான 1,508 முடிவுற்ற திட்டப் பணிகளை திறந்து வைத்து, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை, நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, பொதுப்பணித் துறை, நெடுஞ்சாலைத் துறை, பள்ளிக்கல்வித் துறை, தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் மின் பகிர்மானக் கழகம், மீன்வளத் துறை ஆகிய துறைகளின் சார்பில் ரூ.836.80 கோடி மதிப்பீட்டில் 398 புதிய திட்டப் பணிகளுக்கு அடிக்கல் நாட்டினார்கள்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **எடப்பாடி கே. பழனிசாமி** அவர்கள் 09.09.2020 அன்று விழுப்புரம் மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலகத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில், பயனாளிகளுக்கு அரசு நலத்திட்ட உதவிகளை வழங்கினார்கள். உடன் மாண்புமிகு சட்டம், நீதிமன்றங்கள், சிறைச்சாலைகள் மற்றும் கனிமவளத் துறை அமைச்சர் திரு.சி.வி.சண்முகம், சட்டமன்ற உறுப்பினர்கள், விழுப்புரம் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.ஆ.அண்ணாதுரை, இ.ஆ.ப., மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உள்ளனர்.

கண்தானம் செய்ய விரும்புவோர்களுக்கு உதவிடும் வகையில், www.hmis.tn.gov.in/eye-donor - என்ற இணையதளம் துவக்கம்



மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **எடப்பாடி கே. பழனிசாமி** அவர்கள் 07.09.2020 அன்று தலைமைச் செயலகத்தில், பொதுமக்கள் பயன்பெறும் வகையில் இணையதளத்தை துவக்கி வைத்தார்கள்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் 07.09.2020 அன்று தலைமைச் செயலகத்தில், மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறை சார்பில் கண்தானம் செய்ய விரும்புவோர்களுக்கு உதவிடும் வகையில், தமிழ்நாடு மாநில நலவாழ்வு குழுமத்தால் உருவாக்கப்பட்ட www.hmis.tn.gov.in/eye-donor என்ற இணையதளத்தை துவக்கி வைத்தார்கள்.

நமது நாட்டில் சுமார் 68 இலட்சம் நபர்கள் கருவிழி பாதிப்பினால் பார்வை இழந்துள்ளனர். அதில் பெரும்பான்மையானவர்கள் குழந்தைகளும், இளைஞர்களும் ஆவார்கள். தற்போது உள்ள மருத்துவ தொழில்நுட்ப முன்னேற்றத்தின் காரணமாக ஒரு நபரிடம் தானமாக பெறப்படும் இரு கண்கள், எளிய கருவிழி மாற்று அறுவை சிகிச்சை மூலம் இரு நபர்கள் கண்பார்வை பெற்று பயனடைவதுடன், கூடுதலாக கண்களின் பிற பாகங்களும் தேவைக்கேற்ப கண் பார்வை பாதிக்கப்பட்டவர்களின் சிகிச்சைக்கும் பயன்படுத்தப்படுகிறது.

பொதுவாக கண்தானம் செய்ய விரும்புவோர் யாரிடம் உறுதிமொழி கொடுப்பது, இறந்தபிறகு எவ்வாறு, எங்கு, எப்படி கண்களை தானமாக கொடுப்பது என்ற விவரங்கள் குறித்து தெளிவில்லாமல் இருப்பதால், அது குறித்து மக்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையிலும், தமிழ்நாட்டில் கண்தானம் செய்ய விரும்புவோர் குறித்த பதிவேட்டினை ஏற்படுத்தும் வகையிலும் www.hmis.tn.gov.in/eye-donor என்ற இந்த புதிய இணையதளம் உருவாக்கப்பட்டுள்ளது.

இந்த இணையதளம் மூலம், கண்தானம் செய்ய விரும்புவோர், தங்களது பெயர், இருப்பிட முகவரி, கைப்பேசி எண், மின்னஞ்சல் முகவரி போன்ற தகவல்களை பதிவு செய்து, கண் தானத்திற்கான உறுதிமொழியினை ஏற்ற பின்பு, அதற்கான சான்றிதழை நேரடியாக இணையதளத்தின் வாயிலாகவே பதிவிறக்கம் செய்து கொள்ளலாம். மேலும், சான்றிதழை பதிவு செய்யப்பட்ட மின்னஞ்சல் மூலமாகவும் பெற்றுக் கொள்ளலாம். இப்பதிவின் மூலம், கொடையாளர்களிடமிருந்து மருத்துவக் குழுவினரால் பெறப்படும் கண்கள், உரிய காலத்தில் கண் வங்கியில் சேர்த்திட மிகவும் உதவியாக இருக்கும்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் தனது கண்களை தானமாக வழங்குவதற்கான உறுதிமொழியினை அளித்ததை தொடர்ந்து, அதற்கான சான்றிதழை மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை முதன்மைச் செயலாளர் டாக்டர் ஜெ. இராதாகிருஷ்ணன், இ.ஆ.ப., அவர்கள் வழங்கினார்.

ஆசிரியர் தின விழாவையொட்டி நல்லாசிரியர்களுக்கு "டாக்டர் இராதாகிருஷ்ணன் விருது"

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **எடப்பாடி கே. பழனிசாமி** அவர்கள் 07.09.2020 அன்று தலைமைச் செயலகத்தில், நல்லாசிரியர் விருதுக்கு தெரிவு செய்யப்பட்ட ஆசிரியர்களுக்கு விருதுகளை வழங்கி கௌரவித்தார்கள்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் 07.09.2020 அன்று தலைமைச் செயலகத்தில், பள்ளிக்கல்வித் துறை சார்பில், ஆசிரியர் தின விழாவையொட்டி பள்ளிகளில் சிறப்பான முறையில் பணியாற்றி தமிழ்நாடு அரசின் நல்லாசிரியர் விருதுக்கு தெரிவு செய்யப்பட்ட 375 ஆசிரியர்களில், சென்னை மாவட்டத்தில் தெரிவு செய்யப்பட்ட 15 ஆசிரியர்களுக்கு டாக்டர் இராதாகிருஷ்ணன் விருதுகள், வெள்ளிப் பதக்கங்கள் மற்றும் ரூ.10,000 பரிசுத் தொகைக்கான காசோலைகளை வழங்கினார்கள்.

மாணாக்கர்களின் அறிவுக் கண்ணை திறக்கும் ஆசிரியராகத் தன்னுடைய வாழ்வைத் தொடங்கி, இந்திய நாட்டின் குடியரசுத் தலைவராக உயர்ந்து, ஆசிரியர் சமுதாயத்திற்கு பெரும் சிறப்பினை சேர்த்த தத்துவ மேதை டாக்டர் எஸ். இராதாகிருஷ்ணன் அவர்களின் பிறந்த தினமான செப்டம்பர் திங்கள் 5ஆம் நாள் ஒவ்வொரு ஆண்டும் ஆசிரியர் தினமாக கொண்டாடப்படுகிறது. இந்நாளில், சிறந்த கல்வித் தொண்டாற்றும் நல்லாசிரியர்களுக்கு "டாக்டர் இராதாகிருஷ்ணன் விருது" வழங்கி தமிழ்நாடு அரசு கௌரவித்து வருகிறது.

அந்த வகையில், இந்த ஆண்டு சிறந்த முறையில் பணியாற்றிய ஆசிரியர்களை ஊக்குவிக்கும் வகையில் தமிழ்நாடு அரசின் பள்ளிக் கல்வித் துறையின் கீழ் செயல்படும் பல்வேறு பள்ளிகளில் பணிபுரியும் ஆசிரியர்கள் மற்றும் ஆசிரியர் பயிற்சி நிறுவனங்களில் பணிபுரியும் விரிவுரையாளர்களில் 375 ஆசிரியர்கள் நல்லாசிரியருக்கான டாக்டர் இராதாகிருஷ்ணன் விருதிற்கு தெரிவு செய்யப்பட்டுள்ளனர். அவர்களில் சென்னை மாவட்டத்தில் தெரிவு செய்யப்பட்ட 15 ஆசிரியர்களுக்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் டாக்டர் இராதாகிருஷ்ணன் விருதுகள், வெள்ளிப் பதக்கங்கள் மற்றும் ரூ.10,000 பரிசுத் தொகைக்கான காசோலைகளை வழங்கி கௌரவித்தார்கள்.

அதனைத் தொடர்ந்து, அன்று காலையே 10.30 மணியளவில் பிற மாவட்டங்களில் தெரிவு செய்யப்பட்ட நல்லாசிரியர்களுக்கு, டாக்டர் இராதாகிருஷ்ணன் விருதுகள் வழங்கி கௌரவிக்கப்பட்டார்கள்.

மேலும், 2020ஆம் ஆண்டிற்கான தேசிய நல்லாசிரியர் விருது பெற்ற தலைமையாசிரியை திருமதி இரா.சி. சரஸ்வதி மற்றும் பட்டதாரி ஆசிரியர் திரு. ஸ்ரீதிலீப் ஆகியோர் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களை சந்தித்து விருதிற்கான சான்றிதழ்கள் மற்றும் பதக்கங்களை காண்பித்து வாழ்த்து பெற்றார்கள்.

● ரூ.6.20 கோடி மதிப்பீட்டில் ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை அலுவலக வளாகக் கட்டடம்

● ரூ.1.34 கோடி மதிப்பீட்டில் 2 பாலங்கள்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **எடப்பாடி கே. பழனிசாமி** அவர்கள் 07.09.2020 அன்று தலைமைச் செயலகத்தில் காணொலிக் காட்சி மூலமாக திறந்து வைத்தார்கள்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் 07.09.2020 அன்று தலைமைச் செயலகத்தில், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறை சார்பில், தேனி மாவட்ட ஆட்சியர் அலுவலக பெருந்திட்ட வளாகத்தில், ரூ.6.20 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறை அலுவலக வளாகக் கட்டடத்தை காணொலிக் காட்சி (Video Conferencing) மூலமாக திறந்து வைத்தார்கள். மேலும், பெரம்பலூர் மாவட்டத்தில் ரூ.1.34 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள 2 பாலங்களையும் திறந்து வைத்தார்கள்.

மாவட்ட அளவில் கிராமங்களுக்குத் தேவையான அனைத்து வளர்ச்சிப் பணிகளை செயல்படுத்தும் அலகாகவும், ஒன்றிய அளவில் உள்ள அலுவலர்களுக்கு பயிற்சி அளிப்பது, ஆய்வுக் கூட்டங்கள் நடத்துவது போன்ற பணிகளை மேற்கொள்ளும் அலுவலகமாகவும் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை விளங்குகிறது. தமிழ்நாட்டில் பெரும்பாலான மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை அலுவலகங்கள் போதிய இடவசதி இல்லாமல் சிறிய கட்டடங்களில் இயங்கி வருகின்றன.

அதனைக் கருத்தில் கொண்டு, 2017–2018ஆம் ஆண்டு ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை மானியக் கோரிக்கையில், ஊரக வளர்ச்சித் துறையின் கீழ் செயல்படும் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை மற்றும் மாவட்ட அளவிலான பல்வேறு அலுவலகங்களை ஒருங்கிணைத்து, தேனி மாவட்டத்தில் ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை அலுவலக வளாகம் கட்டப்படும் என்று தமிழ்நாடு அரசால் அறிவிக்கப்பட்டது.

அதன்படி, தேனி மாவட்ட ஆட்சியர் அலுவலக பெருந்திட்ட வளாகத்தில் 28,716 சதுர அடி கட்டட பரப்பளவில், தரை மற்றும் முதல் தளத்துடன் ரூ.6.20 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள புதிய ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை அலுவலக வளாகக் கட்டடத்தை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் காணொலிக் காட்சி மூலமாக திறந்து வைத்தார்கள்.

மேலும், பெரம்பலூர் மாவட்டம், ஆலத்தூர் ஊராட்சி ஒன்றியத்தில், மண்ணச்சநல்லூர் – எதுமலை – எலந்தலப்பட்டி – கண்ணப்பாடி சாலையில் ரூ.57 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள பாலம் மற்றும் அடைக்கம்பட்டி–நாகலாபுரம் சாலையில் ரூ.77 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள பாலம்;

என மொத்தம் ரூ.7.54 கோடி மதிப்பீட்டில் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையால் கட்டப்பட்டுள்ள கட்டடம் மற்றும் 2 பாலங்களை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் திறந்து வைத்தார்கள்.

செப்டம்பர் 17 : தந்தை பெரியார் பிறந்த நாள்

வைக்கம் வீரர்

கேரளாவில் வைக்கம் என்ற ஊரில் அரிசன மக்கள் மிகவும் கொடுமைப்படுத்தப்பட்டார்கள் அவர்கள் வீதிகளில் நடந்து செல்லக் கூடாது மற்றும் ஆலயத்தில் நுழையக்கூடாது என்றும் சொன்னார்கள். இதை எதிர்த்து கேரளாவில் உள்ள காங்கிரஸ் தலைவர்கள் போராட்டம் நடத்த திட்டமிட்டனர்.

திருவிதாங்கூர் மன்னர் அப்போராட்டத்தை அடக்க எண்ணி மறியலில் ஈடுபட்ட தலைவர்கள் மற்றும் அவர்களுடன் தொண்டர்களையும் கைது செய்தனர்.

வைக்கத்தில் போராட்டத்தைத் தொடர்ந்து நடத்துவதற்குத் தலைவர் இல்லை. அதனால் சத்தியாகிரகப் போராட்டம் நிறுத்தப்படும் நிலை ஏற்பட்டது. இதை அறிந்த ஜார்ஜ் ஜோசப்பும், நீலகண்ட நம்பூதிரியும் ஈ.வெ.ராவுக்குக் கடிதம் எழுதினார்கள். அக்கடிதத்தில் ஈ.வெ.ராவை, வைக்கம் வந்து போராட்டம் நடத்த வேண்டும் என்று கேட்டுக் கொண்டார்கள். ஈ.வெ.ரா. உடனே வைக்கம் புறப்பட்டார்.

ஈ.வெ.ரா. போராட்டத்திற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்தார். அப்பொழுது திருவிதாங்கூர் மன்னர் அனுப்பிய ஆள் ஈ.வெ.ராவைப் பார்ப்பதற்கு வந்தான். “மன்னர் உங்களை விருந்தினர் மாளிகைக்கு அழைத்து வரச் சொன்னார். உங்களை அரசாங்க விருந்தினராகத் தங்குமாறு கேட்டுக்கொண்டார்” என்று சொன்னான்.

ஈ.வெ.ரா. மன்னர் அனுப்பிய ஆளைப் பார்த்து, “நான் இங்கு சத்தியாகிரகப் போராட்டம் நடத்துவதற்காக வந்திருக்கிறேன். மன்னர் அளிக்கும் விருந்தை சாப்பிட வரவில்லை” என்று சொன்னார்.

எனவே மன்னர், ஈ.வெ.ராவை கைது செய்யுமாறு ஆணையிட்டார். ஈ.வெ.ரா.வும் அவருடன் சென்றவர்களும் ஒரு மாதம் சிறையில் அடைக்கப்பட்டார்கள்.

வைக்கத்தில் கணவர் கைது செய்து சிறையில் அடைக்கப்பட்டதை அறிந்த நாகம்மையார், கணவர் விட்டப் பணியைத் தொடர்ந்து நடத்த வைக்கம் சென்றார். சத்தியாக்கிரகப் போராட்டத்தை தலைமை தாங்கி நடத்தினார்.

நாகம்மையார் இப்போராட்டத்தில் ஈடுபட்டதும், கேரள மாநிலப் பெண்களும் வைக்கத்தில், சத்தியாக்கிரக போராட்டத்தில் ஈடுபட்டார்கள். மேலும், தமிழ்நாட்டிலிருந்தும் பெண்கள் சென்று போராட்டத்தில் ஈடுபட்டார்கள்.

சத்தியாக்கிரகப் போராட்டம் தீவிரமடைவதை மன்னர் அறிந்தார். இதற்குக் காரணம் ஈ.வெ.ரா.வும் அவர் துணைவியாரும் தான் என்று தெரிந்து கொண்டார். ஈ.வே.ராவை வைக்கம் சிறையிலிருந்து விடுதலை செய்தார். வைக்கம் நகரை விட்டு வெளியேற உத்தரவிட்டார்.

மன்னர் ஆணையை மீறி, மீண்டும் ஈ.வெ.ரா. போராட்டத்தில் இறங்கினார். இதையறிந்த மன்னர் ஈ.வெ.ரா.வைக் கைது செய்தார். 1922ஆம் ஆண்டு அவருக்கு ஆறுமாதம் கடுங்காவல் தண்டணை விதித்துச் சிறையிலடைத்தார்.

ஈ.வெ.ரா. சிறை சென்றதும் நாகம்மையார் போராட்டத்தைத் தொடர்ந்து நடத்தினார். கேரளா முழுவதும் சுற்றுப்பயணம் செய்தார். போராட்டம் தீவிரமானது.

மன்னருக்கு என்ன செய்வதென்று புரியாமல் யோசித்தார். கோயில்களில் அரிசனங்கள் போகலாம் என்று ஆணையிட்டார். அரிசனங்கள் கோயிலுக்குள் சென்றார்கள்.

வைக்கத்தில் நடந்த ஆலயப் பிரவேசப் போராட்டம் வெற்றி பெற்றது. தீண்டாமை எண்ணம் சாதிக்கொடுமைக்கு இந்தியாவில் முதன்முதலில் சாவு மணி அடித்த முதல் இடம் திருவிதாங்கூரில் உள்ள வைக்கம் என்ற ஊர். இதற்கு முழு முதற்காரணமாகவும் முன் நின்று தளராது போராடியவர் ஈ.வெ.ராவும் அவர் துணைவியார் நாகம்மையாரும் ஆவர்.

இப்போராட்டம் வெற்றி பெற்றதனால் ஈ.வெ.ராவை ‘வைக்கம் வீரர்’ என்று அழைத்தார்கள்.

வேலூர், திருப்பத்தூர் மற்றும் இராணிப்பேட்டை மாவட்டங்களில் வளர்ச்சிப் பணிகள்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **எடப்பாடி கே. பழனிசாமி** அவர்கள் 20.08.2020 அன்று வேலூர் மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலகத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில், வேலூர், திருப்பத்தூர் மற்றும் இராணிப்பேட்டை மாவட்டங்களில், வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை, பொதுப்பணித் துறை, பள்ளிக்கல்வித் துறை, இந்து சமய அறநிலையத் துறை, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை, காவல் துறை, சிறைத் துறை, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை, நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை ஆகிய துறைகளின் சார்பில் ரூ.73.53 கோடி மதிப்பீட்டிலான 3 புதிய திட்டப் பணிகளுக்கு அடிக்கல் நாட்டினார்கள்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **எடப்பாடி கே. பழனிசாமி** அவர்கள் 20.08.2020 அன்று வேலூர் மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலகத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில், வேலூர், திருப்பத்தூர் மற்றும் இராணிப்பேட்டை மாவட்டங்களைச் சேர்ந்த பயனாளிகளுக்கு அரசு நலத்திட்ட உதவிகளை வழங்கினார்கள். உடன் மாண்புமிகு வணிகவரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர் திரு.கே.சி.வீரமணி, மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் டாக்டர் நிலோபர் கபில், நாடாளுமன்ற மற்றும் சட்டமன்ற உறுப்பினர்கள், வேலூர் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. அ.சண்முக சுந்தரம், இ.ஆ.ப., திருப்பத்தூர் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. எம்.பி.சிவன் அருள், இ.ஆ.ப., இராணிப்பேட்டை மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி எஸ்.திவ்யதர்ஷினி, இ.ஆ.ப., மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உள்ளனர்.

கடன் வழங்கும் அளவை குறைக்கும் முடிவை மறுபரிசீலனை செய்யுமாறு ரிசர்வ் வங்கிக்கு உத்தரவிட வேண்டும்

மாண்புமிகு பாரதப் பிரதமர்
திரு. **நரேந்திர மோடி** அவர்களுக்கு
மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
திரு. **எடப்பாடி கே. பழனிசாமி** அவர்கள்
எழுதிய கடிதத்தின் தமிழாக்கம்–08.09.2020

முன்னுரிமை கடன் பிரிவில் புதிய திருத்தங்கள் தொடர்பாக செப்டம்பர் 4ஆம் தேதி ரிசர்வ் வங்கி வெளியிட்ட அறிக்கையின் சில சரத்துகள் பாரபட்சமாக அமைந்துள்ளன.

குறிப்பாக அந்த உத்தரவின் 7ஆம் பிரிவு குறைந்த கடன் பெறும் மாவட்டங்களின் முன்னுரிமை பிரிவுகளுக்கு கடனை வழங்க வகை செய்கிறது.

அதில் 1–ஏ சரத்தின் படி, தமிழகத்தில் உள்ள 32 மாவட்டங்களும் (38 மாவட்டங்களாக பிரிக்கப்படுவதற்கு முன்பு) முன்னுரிமை கடன் அதிகம் வழங்கப்படும் மாவட்டங்களாக வகைப்படுத்தப்பட்டிருப்பதால் அனைத்து மாவட்டங்களுக்கும் கடன் வழங்குவது குறைக்கப்படும் சூழல் ஏற்பட்டுள்ளது. இந்த விஷயத்தில் இதர மாநிலங்களுடன் ஒப்பிடும் போது தமிழகம் தனிப்படுத்தப்படுவதுபோல் தோன்றுகிறது.

குறைந்த கடன் பெறும் மாவட்டங்களுக்கு அதிக கடனை அளிக்கலாமே தவிர, மற்ற மாவட்டங்கள் பெறக்கூடிய கடனை அந்த மாவட்டங்களுக்கு திருப்பக்கூடாது.

தமிழக மாவட்டங்களில் அதிக கடன் பரிமாற்றம் உள்ளது. கடின உழைப்பு, விடாமுயற்சி, வீடு மற்றும் தொழில்களுக்கான கடனை சரியான நேரத்தில் திரும்ப அளிப்பது ஆகிய அம்சங்கள் இங்கு அதிகம் உள்ளது. எந்த நோக்கத்துக்கு கடன் வாங்கினார்களோ அதையே செயல்படுத்துகின்றனர்.

விதியை சரியாக பின்பற்றும் அவர்களுக்கு அளிக்கப்படும் கடனை வேறு திசைக்கு திருப்பி அவர்களை தண்டிக்கக்கூடாது. நாட்டில் பொருளாதார விரிவாக்கத்துக்கு அவர்களை ஊக்குவிக்க வேண்டும்.

எனவே, ரிசர்வ் வங்கியின் இந்த கொள்கை நியாயமற்றதாகவும், பிற்போக்கு தன்மை உடையதாகவும் உள்ளது. உடனடியாக அதை திரும்பப்பெற வேண்டும். சட்டத்தை மதித்து கடின உழைப்பை மேற்கோண்டு, கடனை உரிய நேரத்தில் திருப்பி செலுத்தும் கடனாளிகளுக்கு மேலும் கடனளித்து ஊக்கமளிக்க வேண்டும்.

கொரோனாவால் தமிழகம் கடுமையாக பாதிக்கப்பட்டு உள்ளது. தடை இல்லாத கடன் வழங்குதல் தான் இங்குள்ள பொருளாதாரத்தை புதுப்பிப்பதில் முக்கிய பங்கு வகிக்கிறது. கடன் வரவை தடுக்கும் நடவடிக்கைகளை நீக்க வேண்டும்.

எனவே, தமிழகத்திற்கு கடன் வழங்கும் அளவை குறைக்கும் முடிவை மறுபரிசீலனை செய்யுமாறு ரிசர்வ் வங்கிக்கு தாங்கள் உத்தரவிட வேண்டும். கடன் வழங்கும் வகையில் பழைய நடைமுறையையே தொடர வேண்டும்.

கடலூர் துறைமுகம், ரூ.135 கோடி செலவில் ஆழ்கடல் துறைமுகமாக மேம்படுத்தப்பட்டு வருகிறது

மாண்புமிகு
தமிழ்நாடு முதலமைச்சர்
திரு. **எடப்பாடி கே. பழனிசாமி** அவர்கள்
தலைமையில் 27.08.2020 அன்று
கடலூர் மாவட்ட ஆட்சித்தலைவர்
அலுவலகத்தில், மாவட்ட வளர்ச்சித் திட்டப்
பணிகள் மற்றும் கொரோனா நோய்த் தடுப்புப்
பணிகள் குறித்து நடைபெற்ற ஆய்வுக்
கூட்டத்தில் ஆற்றிய உரையிலிருந்து...

கடலூர் மாவட்டத்தில் கொரோனா வைரஸ் நோய்ப் பரவலைத் தடுப்பதற்கு நாள்தோறும் சுமார் 350 காய்ச்சல் முகாம்கள் நடைபெறுகின்றன. கடலூர் மாவட்டத்தில் இதுவரை 8,075 காய்ச்சல் முகாம்கள் நடைபெற்றுள்ளன. இம்முகாம்களின் மூலம் 3,25,576 நபர்கள் பங்கு பெற்று, 2,380 நபர்களுக்கு நோய்த்தொற்று கண்டறியப்பட்டுள்ளது. கடலூர் மாவட்டத்தில், அதிகமான நோய் தொற்று ஏற்படுள்ள பகுதிகளுக்கு 39 நடமாடும் மருத்துவமனைகள் நேரில் சென்று பரிசோதித்து, நோய் தொற்று உள்ளவர்களுக்கு மருத்துவமனைகளில் சிகிச்சை அளிக்கப்படுகிறது.

மக்கள் அரசை நாடிச் செல்வதற்கு பதிலாக அரசே மக்களை நாடிச் சென்று அவர்களுடைய பிரச்சினைகளை தீர்ப்பதுதான் முதலமைச்சர் சிறப்பு குறை தீர்க்கும் திட்டத்தின் நோக்கமாகும். இத்திட்டம் தமிழ்நாடு முழுவதும் வெற்றிகரமாக செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் மூலம் கடலூர் மாவட்டத்தில் பெறப்பட்ட 56,958 மனுக்களில் 38,100 மனுக்களுக்கு தீர்வு காணப்பட்டுள்ளது. முதியோர் உதவித்தொகை 9,965 நபர்களுக்கும் இலவச வீட்டுமனைப் பட்டா 12,514 நபர்களுக்கும் இம்மாவட்டத்தில் வழங்கப்பட்டுள்ளன.

ஊரக வளர்ச்சித் துறை மூலமாக பசுமை வீடுகள் திட்டம், பிரதம மந்திரி குடியிருப்புத் திட்டம் போன்ற பல்வேறு திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. ஜல்ஜீவன் மிஷன் திட்டம் மூலம் கிராமப்புறங்களில் உள்ள 1,04,521 வீடுகளுக்கு ரூ.84.33 கோடி மதிப்பீட்டில் குடிநீர் இணைப்புகள் வழங்கப்படுகின்றன. சிதம்பரம் நகராட்சிக்கு பாதாள சாக்கடைத் திட்டம், கடலூர் நகராட்சி, புவனகிரி மற்றும் பரங்கிப்பேட்டை பேரூராட்சிகள் மற்றும் 812 கிராம குடியிருப்புகளுக்கு கூட்டுக் குடிநீர் திட்டப் பணிகள் நடைபெற்று வருகின்றன. பண்ருட்டி ஒன்றியத்திற்குட்பட்ட 17 குடியிருப்புகள் மற்றும் அண்ணாகிராமம் ஒன்றியத்திற்குட்பட்ட 18 குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர் திட்டப் பணிகள் நிறைவுபெறும் நிலையில் உள்ளன. திட்டக்குடி, பெண்ணாடகம், மங்கலம்பேட்டை, கங்கைகொண்டான், வடலூர், குறிஞ்சிப்பாடி பேரூராட்சிகள், விருதாச்சலம், நல்லூர், மங்களூர் ஒன்றியங்களைச் சேர்ந்த 625 குடியிருப்புகளுக்கு ரூ.479 கோடி மதிப்பீட்டில் கூட்டுக் குடிநீர் திட்டம் செயல்படுத்த ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டுள்ளது.

கடலூர் மாவட்டத்தில் உள்ள 12,111 மகளிர் சுயஉதவிக் குழுக்களுக்குத் தேவையான கடன் உதவிகள் வழங்கப்பட்டு வருகின்றன. கடந்த மூன்று ஆண்டுகளில் மட்டும் ரூ.1,114 கோடி கடனுதவி வழங்கப்பட்டுள்ளது. இந்த ஆண்டு ரூ.1,687 கோடி வழங்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டு, இதுவரை ரூ.215 கோடி கடனுதவியாக வழங்கப்பட்டுள்ளது. இம்மாவட்டத்தில், இந்த ஆண்டு 1,554 மகளிருக்கு ரூ.25 ஆயிரம் மானியத்துடன்

அம்மா இரு சக்கர வாகனங்கள் வழங்கப்பட்டுள்ளன. கடந்த மூன்றாண்டுகளில் மட்டும் ரூ.2.34 கோடி மானியம் வழங்கப்பட்டு, 8,947 மகளிர் அம்மா இரு சக்கர வாகனங்களை பெற்றுள்ளனர்.

இந்த மாவட்டத்தில் அதிகளவில் தடுப்பணைகள் கட்டிக் கொடுக்கப்பட்டுள்ளன. கொள்ளிடம் ஆற்றின் குறுக்கே ஆதனூர், குமாரமங்கலம் கிராமங்களுக்கிடையே ரூ.495 கோடி மதிப்பீட்டில் கதவணை அமைக்கும்பணி நடைபெற்று வருகிறது. இதில், சுமார் 40 சதவிகிதப் பணிகள் நிறைவேற்றப்பட்டுள்ளன. இதேபோல் பல்வேறு இடங்களில் தடுப்பணைகள் கட்டும் பணிகள் நடைபெற்று வருகின்றன. சில இடங்களில் தடுப்பணைகள் அமைக்கும் பணி அரசின் பரிசீலனையில் இருந்து கொண்டிருக்கிறது.

நெடுஞ்சாலைத் துறையின் மூலமாக, கடலூர் மாவட்டத்தில் இரயில்வே கடவுகளுக்கு குறுக்கே உயர் மட்டப் பாலங்கள் கட்டிக் கொடுக்கப்பட்டு இருக்கின்றன. கடலூர் நகரத்தில் கீழ்ப்பாலம் ஒன்று கட்டி முடிக்கப்பட்டு மக்கள் பயன்பாட்டிற்கு கொண்டு வரப்பட்டிருக்கிறது.

வீடுகட்டும் திட்டத்தின் மூலம், குடிசை மாற்று வாரியத்தின் பங்களிப்புடன் பரங்கிப்பேட்டை, கடலூர் நகராட்சி, திருவதிகை, காடம்புலியூர், பண்ருட்டி, கீழ்க்குப்பம், பாலக்கொல்லை ஆகிய இடங்களில் வீடுகளும், அடுக்குமாடி குடியிருப்புகளும் கட்டிக் கொடுக்கப்படுகின்றன. கடலூர், சிதம்பரம், பண்ருட்டி, விருத்தாசலம், நெல்லிக்குப்பம் ஆகிய நகராட்சிகளில் ஆயிரக்கணக்கான பயனாளிகளுக்கு, சொந்த இடத்தில் கான்க்ரீட் வீடு கட்டும் திட்டத்தில், நிதி ஒதுக்கீடு செய்து வீடுகள் கட்டிக் கொடுக்கப்படுகின்றன.

தொழில் துறையைப் பொறுத்தவரையில், புதிய தொழிற்சாலைகளை இந்த மாவட்டத்தில் ஏற்படுத்துவதற்கு அரசு அவர்களுக்கு உதவி செய்து கொண்டிருக்கிறது என்பதைத் தெரிவிக்க விரும்புகின்றேன்.

மீன்வளத் துறையைப் பொறுத்தவரை, மாண்புமிகு அம்மாவின் அரசு, மீனவர்களுக்கு பல்வேறு வசதிகளை செய்து கொடுத்துக் கொண்டிருக்கிறது. ஆபத்து கால எச்சரிக்கை பரப்பும் கருவிகள், 76 மீனவர்களுக்கு வழங்கப்பட்டிருக்கிறது. 2018–2019ஆம் ஆண்டு, 42 படகுகளுக்கு செயற்கைக்கோள் தொலைத்தொடர்பு சாதனம் வழங்கப்பட்டிருக்கிறது. 731 நாட்டு மீனவர்கள் மற்றும் 190 விசைப்படகு மீனவ பயனாளிகளுக்கு கம்பியில்லா தகவல் தொடர்பு சாதனம் வழங்கப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

கடலூர் துறைமுகம், ரூ.135 கோடி செலவில் ஆழ்கடல் துறைமுகமாக தற்போது மேம்படுத்தப்பட்டு வருகிறது. வணிகக் கப்பல் போக்குவரத்து விரைவில் துவங்கும். மேலும், துறைமுகத்தினை தேசிய நெடுஞ்சாலையுடன் இணைக்கும் சாலையை அகலப்படுத்தி மேம்படுத்தப்படும். பல புறவழிச் சாலைகள் அமைப்பதற்கும் அரசால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கின்றது. மேலும், விழுப்புரத்திலிருந்து, கடலூர்–சிதம்பரம் செல்வதற்கு வசதியாக விக்கிரவாண்டி–தஞ்சாவூர்–கும்பகோணம் தேசிய நெடுஞ்சாலை 45சி சாலையை தேசிய நெடுஞ்சாலை 45ஏ–உடன் இணைக்கும் வகையில் தென்பெண்ணையாற்றின் கரையோரமாக புதியதாக 7 கிலோ மீட்டர் நீள சாலை அமைக்கப்பட்டு, கடலூர் கஸ்டம்ஸ் சாலையுடன் இணைக்கப்படும். இதற்கிடையே வரும் உள்ளாட்சி அமைப்புகளின் சாலைகள், நெடுஞ்சாலைத் துறைக்கு மாற்றப்பட்டு மேம்படுத்தப்படும். இதனால், பயண நேரம் மற்றும் தூரம் குறையும், கடலூர்–சித்தூர் சாலையில் போக்குவரத்து நெரிசல் குறையும். பண்ருட்டி, பட்டாம்பாக்கம், நெல்லிக்குப்பம் ஆகிய பகுதிகள் மேலும் வளர்ச்சி பெறும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

தமிழ்நாடு அரசைப் பொறுத்தவரை, கொரோனா வைரஸ் நோய்ப் பரவலைத் தடுப்பதற்கு எல்லா மாவட்டங்களிலும் சிறப்பு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகிறது. கடலூர் மாவட்ட நிருவாகம் கொரோனா வைரஸ் தடுப்புப் பணிகளை மிகச் சிறப்பாக செயல்படுத்திக் கொண்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஏழை, எளிய குடும்பத்தைச் சார்ந்த மாணவ, மாணவியர்கள் உயர்கல்வி படிக்க வேண்டும் என்பதற்காக அம்மாவின் அரசு, காட்டுமன்னார்கோவில் சட்டமன்றத் தொகுதியில் கலை மற்றும் அறிவியல் கல்லூரியை வழங்கியிருக்கிறது. மேலும், பாலிடெக்னிக் கல்லூரிக்கான கட்டடப் பணிகள் முடிவுற்று திறக்கப்படும் நிலையில் இருக்கிறது என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

முசுமுசுக்கை இலை

முசுமுசுக்கை இலையை 3 பிடி எடுத்து தோசை மாவுடன் அரைத்து தோசையாக சாப்பிட, சளியுடன் கூடிய காய்ச்சல், நாக்குச் சுவையின்மை ஆகியவை குணமாகும்.

படமும் / செய்தியும்

கடலூர் மாவட்ட வளர்ச்சிப் பணிகள்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **எடப்பாடி கே. பழனிசாமி** அவர்கள் 27.08.2020 அன்று கடலூர் மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலகத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை, மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறை, தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறை, சிறைத் துறை, நில அளவை பதிவேடுகள் துறை, வேளாண்மைத் துறை, கால்நடை பராமரிப்புத் துறை, கூட்டுறவுத் துறை ஆகிய துறைகளின் சார்பில் ரூ.25.54 கோடி மதிப்பீட்டிலான 33 முடிவுற்ற திட்டப் பணிகளை திறந்து வைத்து, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை, பள்ளிக்கல்வித் துறை, குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை, கால்நடை பராமரிப்புத் துறை, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை ஆகிய துறைகளின் சார்பில் ரூ.32.16 கோடி மதிப்பீட்டில் 22 புதிய திட்டப் பணிகளுக்கு அடிக்கல் நாட்டினார்கள்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **எடப்பாடி கே. பழனிசாமி** அவர்கள் 27.08.2020 அன்று கடலூர் மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலகத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில், பயனாளிகளுக்கு அரசு நலத்திட்ட உதவிகளை வழங்கினார்கள். உடன் மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் திரு. எம்.சி. சம்பத், சட்டமன்ற உறுப்பினர்கள், கடலூர் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. சந்திரசேகர் சாகமூரி, இ.ஆ.ப., மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உள்ளனர்.

தமிழ்நாடு முழுவதும் 2000 மினி கிளினிக் ஏற்படுத்த அரசு திட்டமிட்டுள்ளது

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **எடப்பாடி கே. பழனிசாமி** அவர்கள் தலைமையில், 08.09.2020 அன்று, தலைமைச் செயலகத்தில், கொரோனா வைரஸ் தடுப்பு நடவடிக்கைகள், மருத்துவக் கட்டமைப்புகளை வலுப்படுத்துதல் மற்றும் தொடர் விழிப்புணர்வு ஏற்படுத்துதல் தொடர்பாக நடைபெற்ற ஆலோசனைக் கூட்டத்தில் ஆற்றிய உரையிலிருந்து

தற்பொழுது, கொரோனா தொற்று குறித்த ஐயப்பாடு இருக்கின்ற நிலையில், சாதாரண காய்ச்சல் மற்றும் மற்ற நோய்களுக்கு சிகிச்சை பெறமுடியாத சூழ்நிலை இருக்கிற காரணத்தால் பொதுமக்களுக்கு அன்றாடம் ஏற்படும் நோயை குணப்படுத்த, தமிழகம் முழுவதும் 2,000 மினி கிளினிக் ஏற்படுத்த அரசால் திட்டமிடப்பட்டுள்ளது. இதில், மாநகராட்சி, நகராட்சி, பெரிய கிராமங்கள், ஆரம்ப சுகாதார நிலையங்கள் இல்லாத இடங்கள் அடங்கும். இந்த மினி கிளினிக்கில் தேவையான மருத்துவ உபகரணங்கள் மற்றும் மருந்துகளுடன் ஒரு மருத்துவர், ஒரு செவிலியர், ஒரு உதவியாளர் இடம்பெறுவர். காய்ச்சல், தலைவலி போன்ற எளிதாக சிகிச்சை அளிக்கக்கூடிய நோய்களுக்கு அந்த மினி கிளினிக்கில் மருந்துகள் வழங்கப்படும்.

உள்ளாட்சித் துறையைப் பொறுத்தவரை, இப்பொழுது மழைக் காலம் தொடங்கிவிட்டதால், கொரோனா நோய்த் தொற்று மட்டுமல்ல, டெங்கு வருவதற்கும் வாய்ப்பிருக்கின்றது. இப்பொழுது பல இடங்களில் மழை பெய்து கொண்டிருக்கிறது. மாநகரம், நகராட்சி, பேரூராட்சி, ஊராட்சி, நகராட்சி பகுதிகளில் ஆங்காங்கே தேங்கியிருக்கும் தண்ணீரை அப்புறப்படுத்த வேண்டும். கொரோனா நோய்த் தொற்று அதிகமாக இருக்கும் இடங்களில், பெருநகரப் பகுதிகளில் அடிக்கடி கிருமிநாசினி அடிக்க வேண்டும், பொதுக் கழிப்பறைகளை அடிக்கடி சுத்தம் செய்ய வேண்டும். தண்ணீர் எங்கும் தேங்காமல் பார்த்துக் கொண்டால் தான் டெங்கு கொசு ஏற்படாமல் இருக்கும். ஏனென்றால், காய்ச்சல் எதற்கு வருகிறது என்று கண்டுபிடிக்க முடியாது. காய்ச்சல் வந்தால் கொரோனா நோய்த் தொற்று இருப்பதாக ஒரு அறிகுறி இருக்கின்ற இந்த சூழ்நிலையில், டெங்கு காய்ச்சல் வருகின்றபொழுது பெரும் பிரச்சினையாகி விடும். ஆகவே, டெங்கு காய்ச்சல் வராமல் இருப்பதற்கும், அதைத் தடுப்பதற்கும், அறவே ஒழிப்பதற்கும் உள்ளாட்சித் துறை கவனமாக இருந்து அதை செயல்படுத்த வேண்டுமென்று அன்போடு கேட்டுக் கொள்கிறேன்.

தொழிற்சாலைகள் 100 சதவீதம் திறக்கப்பட்டு விட்டது. ஒவ்வொரு தொழிற்சாலையிலும் 300 முதல் 400 தொழிலாளர்கள் பணிபுரிகின்றனர். அங்கு பணிபுரியும் தொழிலாளர்கள் வருகின்றபொழுது தெர்மல் ஸ்கேன் வைத்து பரிசோதனை செய்கிறார்களா, முகக்கவசம் அணிகிறார்களா, சமூக இடைவெளியை பின்பற்றுகிறார்களா, கழிப்பறைகளை சுத்தமாக வைத்திருக்கிறார்களா போன்றவற்றை சம்பந்தப்பட்ட துறை அதிகாரிகள் ஆய்வு செய்து கண்காணிக்க வேண்டும். அப்பொழுதுதான் அங்கு யாருக்கும் கொரோனா நோய்த் தொற்று ஏற்படாமல் தடுக்க முடியும். அவ்வப்போது தொழிற்சங்கப் பிரதிநிதிகளை சந்தித்து, தொழில் முதலீட்டாளர்களை 15 நாட்களுக்கு ஒருமுறை கூட்டத்தைக் கூட்டி கொரோனா வைரஸ் தொற்று தடுப்பு நடவடிக்கைகள் குறித்து அறிவுறுத்திக் கொண்டே இருக்க வேண்டும். எல்லா மாவட்டத்திலும் தொழிலாளர் துறை இருக்கின்றது. தொழிலாளர் துறை உயர் அதிகாரிகள் அங்கே இருக்கும் தொழிலதிபர்களை அழைத்து அவர்களிடம் பேச்சுவார்த்தை நடத்த வேண்டும். அரசால் அறிவிக்கப்பட்ட வழிமுறைகளை பின்பற்றுகிறார்களா என்று அவ்வப்போது தொழிற்சாலைகளை ஆய்வு செய்ய வேண்டும். மேலும், தொழிற்சாலைகளில் பணிபுரிகின்ற தொழிலாளர்கள் மதிய உணவு அருந்தும்போதும் சமூக இடைவெளியை பின்பற்ற வேண்டுமென்ற விழிப்புணர்வை நீங்கள் ஏற்படுத்த வேண்டும்.

இன்னும் கூடுதலாக மருத்துவர்கள் மற்றும் செவிலியர்களை தேவைப்படுகிறதென்று சுகாதாரத் துறை செயலாளர் குறிப்பிட்டார்கள். எனவே, மருத்துவர்கள் மற்றும் செவிலியர்களின் காலிப் பணியிடங்கள் முழுவதும் நிரப்பப்படும், அரசு அறிவிக்கின்ற வழிமுறைகளை முழுமையாக பொதுமக்கள் பின்பற்றினால் தான் இந்த நோய்ப் பரவலைத் தடுக்க முடியும். அதேபோல், கொரோனா வைரஸ் தொற்று ஏற்பட்டவர்கள் யாராக இருந்தாலும், அவர்களுக்கு உரிய சிகிச்சை அளித்து குணமடையச் செய்ய அரசு தயாராக இருக்கின்றது. இன்றைக்கு மற்ற மாநிலங்களைக் காட்டிலும் தமிழ்நாட்டில், இறப்பு சதவீதம் குறைக்கப்பட்டிருக்கிறது, குணமடைந்தவர்களின் எண்ணிக்கை அதிகரித்திருக்கிறது.

வளையாமல் வளர்ச்சி இல்லை

- மனிதனுக்கு வளைந்து கொடுக்கும் குணம் வேண்டும். இல்லாவிட்டால் வளர்ச்சியடைய முடியாது.
- நல்லதும், கெட்டதும் மாறி வரும். அதனால் பொறுமையுடன் வாழ்வை எதிர்கொள்ளுங்கள்.
- நேரத்தை மதியுங்கள், இப்போதே நற்செயலில் ஈடுபடுங்கள்.
- உலகில் யாரும் தனியாக இல்லை. எப்போதும் கடவுள் நம்முடன் இருப்பதாக நம்பிக்கை கொள்ளுங்கள்.
- சாப்பிடும் முன் வழிபாடு செய்யுங்கள். வல்லமையும், ஊக்கமும் உணவின் மூலம் கிடைக்க கடவுளிடம் வேண்டுங்கள்.
- மற்றவர்களின் மகிழ்ச்சி கண்டு மகிழ்வதும், துயரம் கண்டு வருந்துவதும் இரக்கம் உள்ளவர்களின் தனிச் சிறப்பு.
- தற்புகழ்ச்சி வளர்ச்சியைத் தடை செய்யும். முன்னேற வேண்டும் என்ற எண்ணம் இருந்தால் அதை கைவிடுங்கள்.
- எதிர்பார்ப்பு இல்லாமல் கடவுள் மீது பக்தி செலுத்துவதே சிறந்தது.
- தவறை உணர்ந்து வருந்தினால் மன்னிப்பு கிடைக்கும். அதை மறைக்கவோ, மறுக்கவோ செய்தால் தவறு பெரிதாகி விடும்.

மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறை சார்பில் ரூ.25 கோடி மதிப்பீட்டில் 90 உயிர்காக்கும் மருத்துவக் கருவிகள் பொருத்தப்பட்ட "108" அவசரகால ஊர்திகள், அரசு இரத்த வங்கிக்கான சேவைக்காக 10 இரத்ததான ஊர்திகள் மற்றும் கோவிட்-19 கட்டுப்படுத்தும் நடவடிக்கைக்கான 18 அவசரகால ஊர்திகள்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **எடப்பாடி கே. பழனிசாமி** அவர்கள் 31.08.2020 அன்று தலைமைச் செயலகத்தில் 118 ஊர்திகளின் சேவையை கொடியசைத்து துவக்கி வைத்தார்கள்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் 31.08.2020 அன்று தலைமைச் செயலகத்தில், மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை சார்பில் '108' அவசரகால ஊர்தி சேவைக்காக, ரூ.20 கோடியே 65 இலட்சம் மதிப்பீட்டில், உயிர்காக்கும் மருத்துவக் கருவிகள் பொருத்தப்பட்ட 90 புதிய அவசரகால ஊர்திகள், அரசு மருத்துவமனைகளில் உள்ள அரசு இரத்த வங்கிகளின் சேவைக்காக ரூ.3 கோடியே 9 இலட்சம் மதிப்பீட்டிலான 10 இரத்ததான ஊர்திகள் மற்றும் தமிழ்நாட்டில் கோவிட்–19 கட்டுப்படுத்தும் நடவடிக்கைகளுக்காக Zee எண்டர்டெய்ன்மென்ட் எண்டர்பிரைசஸ் லிமிடெட் நிறுவனத்தால் வழங்கப்பட்ட ரூ.1 கோடியே 26 இலட்சம் மதிப்பீட்டிலான 18 அவசரகால ஊர்திகள், என மொத்தம் 118 புதிய ஊர்திகளின் சேவையை கொடியசைத்து துவக்கி வைத்தார்கள்.

மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் வழியில் செயல்படும் தமிழ்நாடு அரசு, விபத்துக்களை குறைக்கவும், உயிர் இழப்புகள் ஏற்படாமல் தவிர்க்கவும், 108 அவசரகால ஊர்தி சேவையை வலுப்படுத்துதல், விபத்து சிகிச்சை மையங்கள் ஏற்படுத்துதல், தலைக்காய பிரிவுகளை வலுப்படுத்துதல் போன்ற பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருகிறது. **108 அவசரகால ஊர்தி சேவை திட்டத்தில் தற்போது 1,005 அவசரகால ஊர்திகள் இயங்கி வருகின்றன. 108 அவசரகால ஊர்தி சேவைகள் மூலமாக இதுவரை 1 கோடியே 20 ஆயிரத்திற்கும் மேலான பொதுமக்கள் பயனடைந்துள்ளனர். கொரோனா வைரஸ் தொற்றால் பாதிக்கப்பட்டவர்களை மருத்துவமனைகளுக்கு அழைத்து வருதல், சிகிச்சை பெற்று குணமடைந்தவர்களை வீடுகளில் விடுதல் ஆகிய பணிகள் 108 அவசரகால ஊர்திகள் மூலமாக மேற்கொள்ளப்படுகிறது.**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் 24.03.2020 அன்று சட்டப்பேரவை விதி எண் 110இன் கீழ் வெளியிட்ட அறிவிப்பில், பொதுமக்களுக்கு அவசர காலங்களில் உயிர்காப்பதில் சிறப்பாக சேவையாற்றி வரும் 108 அவசரகால ஊர்தி சேவையை மேலும் வலுப்படுத்துவதற்காக, நடப்பாண்டில் 500 புதிய அவசரகால ஊர்திகள் ரூ.125 கோடி செலவில் வழங்கப்படும் என்று அறிவித்தார்கள்.

இதனை செயல்படுத்தும் விதமாக, தமிழ்நாடு சுகாதார சீரமைப்புத் திட்டத்தின் கீழ், 108 அவசரகால ஊர்தி சேவைக்காக ரூ.103 கோடியே 50 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, முதற்கட்டமாக 20 கோடியே ரூ.65 இலட்சம் மதிப்பீட்டில், உயிர்காக்கும் மருத்துவக் கருவிகள் பொருத்தப்பட்ட 90 புதிய அவசரகால ஊர்திகள்;

இரத்த தான முகாம்களில் சேகரிக்கப்படும் இரத்தத்தை, அரசு இரத்த வங்கிகளுக்கு எடுத்துச் சென்று சேமிக்கும் வகையில், ரூ.3 கோடியே 9 இலட்சம் மதிப்பீட்டில் 10 அரசு மருத்துவமனைகளில் உள்ள அரசு இரத்த வங்கிகளின் பயன்பாட்டிற்காக குளிர்சாதன வசதியுடன் கூடிய அதிநவீன 10 இரத்ததான ஊர்திகள்;

Zee எண்டர்டெய்ன்மென்ட் எண்டர்பிரைசஸ் லிமிடெட் நிறுவனம், கோவிட்–19 தடுப்பு நடவடிக்கைகளுக்காக 45 அவசரகால ஊர்திகள் வழங்க இசைவளித்து, முதற்கட்டமாக ரூ.1 கோடியே 26 இலட்சம் மதிப்பீட்டில் வழங்கியுள்ள 18 அவசரகால ஊர்திகள்;

என மொத்தம் 118 ஊர்திகளின் சேவையை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் கொடியசைத்து துவக்கி வைத்தார்கள்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் துவக்கி வைக்கப்பட்ட 108 அவசரகால ஊர்திகளில், ஒரு ஊர்தியை நாட்டிலேயே முதல் முறையாக 108 அவசரகால ஊர்தி பெண் ஓட்டுநராக நியமிக்கப்பட்ட திருமதி எம். வீரலட்சுமி அவர்கள் இயக்கினார் என்பது குறிப்பிடத்தக்கது.

பணி நியமன ஆணை

பொது சுகாதாரம் மற்றும் நோய்த் தடுப்பு மருந்துத் துறையில் காலியாக உள்ள 138 இளநிலை உதவியாளர் பணியிடங்களுக்கு தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் மூலமாக தெரிவு செய்யப்பட்டவர்களுக்கு பணிநியமன ஆணைகளை வழங்கிடும் அடையாளமாக, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் 7 நபர்களுக்கு பணிநியமன ஆணைகளை வழங்கினார்கள்.

நம்பிக்கை இருந்தால் வெற்றி கிடைக்கும்

- திருப்திக்கு ஈடான செல்வம் இல்லை.
- அன்பு இல்லாதவன் கடவுளை உணர முடியாது.
- துன்பம் நேரும்போது கடவுளைச் சரணடை.
- மாலையும், இரவும் சேரும் நேரமே வழிபாட்டிற்கு உகந்த நேரம்.
- நற்செயல்களில் ஈடுபட்டால் பாவம் குறையும்.
- ஆசையில் இருந்து விடுபட்டால் பிறவி சக்கரத்திலிருந்து விடுதலை கிடைக்கும்.
- பிறர் மீது குற்றம் சொல்லத் தொடங்கினால் அதுவே உங்களின் இயல்பாகிவிடும்.
- மகானுக்கு மரணம் என்பது விளையாட்டு போன்றதுதான்.
- ஒருபோதும் வேலையின்றி சும்மா இருக்கக் கூடாது.

தமிழரசு இதழ் உருவான வரலாறு

அக்காலத்தில் அரசின் பல்வேறு துறைகளின் வாயிலாக அவ்வப்போது நடைபெறும் பணிகளை மக்களுக்கு எடுத்துரைக்கும் நன்நோக்கத்துடன், சென்னை மாகாண விளம்பரத்துறையின் சார்பில் “சென்னை செய்தி”, “Madras Information” ஆகிய இதழ்கள் 1946 இறுதியில் வெளி வரத் தொடங்கின. அந்நாளில் கேரளம், ஆந்திரம், கருநாடகம் ஆகிய மாநிலங்கள் சென்னை மாகாணத்துடன் இணைந்திருந்ததால் “சென்னை செய்தி” இதழானது தெலுங்கு, கன்னடம், மலையாளம் ஆகிய மொழிகளிலும் வெளியிடப்பட்டன.

அரசின் அனைத்து துறைகளின் சார்பில் 18 இதழ்கள்

அதன் பின்பு, 1947ஆம் ஆகஸ்ட் மாதம் இந்திய நாடு சுதந்திரம் அடைந்தது. அதன் பின்னர், மாநில சீரமைப்பு நடைபெற்று, மொழிவாரி மாநிலங்கள் ஏற்பட்டு, ஆந்திரம், கருநாடகம், கேரளம் ஆகியவை சென்னை மாகாணத்திலிருந்து பிரிந்தன. 1956ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் முதல் நாளிலிருந்து தமிழ் மொழி பேசும் மாநிலம் சென்னை மாநிலம் என்ற பெயரினைப் பெற்றிருந்தது. அந்த காலகட்டத்தில் சென்னை மாநிலத்தில் காங்கிரஸ் தலைமையிலான ஆட்சி 1967ஆம் ஆண்டு வரை தொடர்ந்து நடைபெற்றது. அப்போதும் சென்னை மாநில அரசின் சார்பில் விளம்பரத்துறை தொடர்ந்து செயல்பட்டது. அரசின் பல்வேறு துறைகளின் செயல்பாடுகளை குறித்து பொதுமக்களுக்கு தெரிவிக்க அரசு சார்பில் பல இதழ்கள் வெளியிடப்பட்டு வந்தன. அப்போது இங்குப் பல்வேறு துறைகளுக்காக 18 இதழ்கள் வெளியிடப்பட்டன. அவற்றுள் – வேளாண்மைத் துறையில் “மேழிச் செல்வம்”, ஊரக வளர்ச்சித் துறையில் “கிராம நலம்”, பின்னர், “சீரணி”, உடல்நலத் துறையில் “ஆரோக்கிய மார்க்கம்”, சமூகநலத் துறையில் “பாக்கியலட்சுமி”, அறநிலையத் துறையில் “திருக்கோயில்”, செய்தித் துறையில் “சென்னைச் செய்தி (Madras Information)”, தொழில் வணிகத் துறையில் “இண்ட்காம் (Ind-Com)” என்னும் இதழ்கள் வெளியிடப்பட்டு வந்தன.

“தமிழரசு”

இவ்வாறு அரசின் பல்வேறுத் துறைகளின் சார்பில் சுமார் 18 பத்திரிகைகள் வெளிவந்து கொண்டிருந்தன. மேற்குறிப்பிட்ட இதழ்கள் அனைத்தும் தான் சார்ந்த துறைகளின் சாதனைகளை எடுத்துச் சொல்வதையே தமது முதன்மையான குறிக்கோளாகக் கொண்டிருந்தன. ஆனால், அவை மக்களை சரிவர சென்றடையவில்லை எனத் தெரிய வந்தது. அப்பொழுது, இந்த இதழ்கள் அனைத்தையும் ஒருங்கிணைத்து அரசின் ஒரே அதிகாரப் பூர்வமான இதழாக வெளியிட வேண்டுமென்ற கருத்து சில காலமாக இருந்து வந்தது. அதன் விளைவாக ‘தமிழரசு’ மலர்ந்தது. தமிழ்நாடு அரசு விளம்பரத்துறை முன்பை விட சிறப்பாகவும், வேகமாகவும் செயல்படும் வகையில் பல திட்டங்களை செயல்படுத்த அரசு விரும்பியது. அரசின் பல்வேறு துறைகளின் சார்பில் வெளிவந்து கொண்டிருந்த பல்வேறு இதழ்களை ஒன்றிணைத்து, (இந்து சமய அறநிலையத் துறை சார்பில் வெளிவந்து கொண்டிருந்த ‘திருக்கோயில்’ என்ற இதழை தவிர செய்தி–விளம்பரத்துறையின் ஒரே பத்திரிகையாக **“தமிழரசு”** என்ற பெயரில் தமிழ் மற்றும் ஆங்கிலத்தில் மாதமிருமுறை இதழாக வெளிவரத் தொடங்கி, தற்பொழுது பொன்விழா ஆண்டினை நிறைவு செய்துள்ளது.

கொப்பரை தேங்காயின் ஆதார விலையை கிலோ ரூ.125ஆக உயர்த்தி நிருணயிக்க வேண்டும்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **எடப்பாடி கே.பழனிசாமி** அவர்கள் 19.08.2020 அன்று மாண்புமிகு மத்திய வேளாண்மைத்துறை அமைச்சர் திரு. **நரேந்திர சிங் தோமர்** அவர்களுக்கு எழுதிய கடிதத்தின் தமிழாக்கம்.

அதிக தேங்காய் உற்பத்தி செய்யும் மாநிலங்களில் தமிழ்நாடும் ஒன்று. இங்கு 4.40 இலட்சம் ஹெக்டேர் நிலப்பரப்பில் தென்னை சாகுபடி செய்யப்படுகிறது. வேளாண்மை விலை நிருணய ஆணையத்தின் பரிந்துரையின் அடிப்படையில் கொப்பரை தேங்காய் உள்ளிட்ட பல்வேறு வேளாண் பயிர்களுக்கு குறைந்தபட்ச ஆதார விலையை மத்திய அரசு நிருணயிக்கிறது.

2020ஆம் ஆண்டில் அரவை கொப்பரை தேங்காய் பருவகாலத்தில் கிலோவுக்கு ரூ.99.60 என்று குறைந்தபட்ச ஆதார விலையை மத்திய அரசு நிருணயம் செய்தது. தமிழகத்தில் தேங்காய் விளைச்சல் கடந்த 2 ஆண்டுகளாக பல்வேறு சவால்களை சந்தித்து வருகிறது.

2018ஆம் ஆண்டில் கஜா புயலினாலும், 2019ஆம் ஆண்டில் ருகோஸ் பூச்சியின் தாக்கத்தாலும் கடுமையான பாதிப்பு ஏற்பட்டது. தேங்காய் விளைச்சல் காலத்தில் விவசாயிகளுக்கு, தேங்காய் பறிப்பது, வேறு இடத்திற்கு கொண்டு செல்வது, சேமித்து வைப்பது என பல்வேறு செலவுகள் ஏற்படுகிறது.

இதற்கிடையே கொரோனாவினால் ஏற்பட்ட ஊரடங்கினால், அவர்கள் மேலும் கடுமையாக பாதிப்படைந்தனர். கூலிக்கு தேவையான ஆள் கிடைக்காததாலும், போக்குவரத்தில் பிரச்சினைகள் ஏற்பட்டதாலும் கூடுதல் செலவு செய்ய வேண்டியதாகிவிட்டது.

2020ஆம் ஆண்டு கொப்பரை தேங்காய் பருவத்துக்கான விலை கொள்கையில், கடந்த ஜனவரி 23ஆம் தேதியன்று தமிழக அரசு தனது கருத்தை தெரிவித்தது. கொப்பரை தேங்காய் கிலோ ஒன்றுக்கு ரூ.105 என்று விலை நிருணயம் செய்யும்படி கூறியிருந்தது.

தற்பொழுது தமிழ்நாடு மற்றும் அண்டை மாநிலங்களில் சந்தை விலை ரூ.100 முதல் ரூ.110 என்றளவில் உள்ளது. தேங்காய் விவசாயத்தில் உள்ள சவால்களையும், உற்பத்திச் செலவையும் கருத்தில் கொண்டால், கொப்பரை தேங்காய்க்கு கிலோ ஒன்றுக்கு ரூ.99.60 என்ற குறைந்தபட்ச ஆதார விலை போதுமானதாக இல்லை.

நெல், ராகி மற்றும் பருப்பு வகைகளுக்கு அதன் சாகுபடி செலவில் 150 சதவீதத்தை குறைந்தபட்ச ஆதார விலையாக மத்திய அரசு நிருணயம் செய்கிறது. தேங்காய் உற்பத்திச் செலவு உயர்வு, தற்போது எதிர்கொள்ளும் சூழ்நிலை, பூச்சிகளின் தாக்கம், உள்ளீட்டுச் செலவு உயர்வு போன்றவற்றை வைத்து பார்க்கும்பொழுது, அந்த விவசாயிகளுக்கு போதுமான அளவில் விலை நிருணயம் செய்யப்பட வேண்டும்.

எனவே, தென்னை விவசாயிகளை காப்பாற்றுவதற்காக இந்த ஆண்டு பருவத்துக்கான கொப்பரை அரவைத் தேங்காய்க்கான குறைந்தபட்ச ஆதார விலையை கிலோ ஒன்றுக்கு ரூ.99.60 என்பதிலிருந்து உயர்த்தி குறைந்தபட்சம் ரூ.125 என்று நிருணயிக்க வேண்டும்.

மனிதன் தான் செய்யும் காரியத்தாலேயே
பெருமையோ, சிறுமையோ அடைகிறான்.

தன்னுடைய ஆற்றலை உணர்ந்தவன்
தன்னுடைய துன்பத்தை இழந்தவனாவான்.

நாகப்பட்டினம் மாவட்டத்தில் ரூ.1,000 கோடி மதிப்பீட்டில் உணவுப் பூங்கா உருவாக்கப்படும்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
திரு. **எடப்பாடி கே. பழனிசாமி**
அவர்கள் தலைமையில்
27.08.2020 அன்று நாகப்பட்டினம் மாவட்ட
ஆட்சித்தலைவர் அலுவலகத்தில்,
மாவட்ட வளர்ச்சித் திட்டப் பணிகள் மற்றும்
கொரோனா நோய்த் தடுப்புப் பணிகள்
குறித்து நடைபெற்ற ஆய்வுக் கூட்டத்தில்
ஆற்றிய உரையிலிருந்து...

நாகப்பட்டினம் மாவட்டத்தில் கொரோனா வைரஸ் நோய்ப் பரவலைத் தடுப்பதற்கு சுமார் 438 காய்ச்சல் முகாம்கள் நடத்தப்பட்டு, 16,158 நபர்கள் பரிசோதிக்கப்பட்டுள்ளனர். இம்மாவட்டத்தில் 31 கட்டுப்படுத்தப்பட்ட பகுதிகள் உள்ளன. நோய்த் தொற்றுப் பரவலைத் தடுத்தல், தொற்று ஏற்பட்டவர்களுக்கு உரிய சிகிச்சை அளித்து குணமடையச் செய்தல் ஆகிய இரண்டிலும் அரசால் அதிக கவனம் செலுத்தப்பட்டு வருகிறது. அதோடு, வருவாய்த் துறை, உள்ளாட்சித் துறை, காவல் துறை ஆகிய துறைகள் இணைந்து, பாதிக்கப்பட்டவர்கள் அதிகமுள்ள பகுதிகளில், கிருமிநாசினி அடிக்கடி தெளிக்கப்பட்டு நோய்த் தொற்றுப் கட்டுப்படுத்தப்பட்டுள்ளது.

சுய உதவிக் குழுக்களுக்கு அதிகமான கடனுதவி வழங்கிய மாநிலம் தமிழ்நாடு. நாகப்பட்டினத்தில் செயல்பட்டுக் கொண்டிருக்கும் 8,840 சுய உதவிக் குழுக்களில் 94,960 உறுப்பினர்கள் இடம் பெற்றிருக்கின்றனர். மூன்றாண்டுகளில், இந்த சுய உதவிக் குழுக்களுக்கு ரூ.762.02 கோடி கடன் வழங்கப்பட்டிருக்கின்றது. நடப்பாண்டில் ரூ.568 கோடி இலக்கு நிர்ணயிக்கப்பட்டு, இதுவரை 2,548 குழுக்களுக்கு, ரூ.63.25 கோடி வழங்கப்பட்டிருக்கிறது. சுய உதவிக் குழுக்கள் தமிழகத்தில் மிகச் சிறந்த முறையில் செயல்பட்டுக் கொண்டிருக்கிறது என்பதை இத்தருணத்தில் சுட்டிக்காட்ட விழைகிறேன்.

நாகப்பட்டினம் மாவட்டத்தில் மட்டும் கடந்த மூன்றாண்டுகளில் 4,347 உழைக்கும் மகளிருக்கு அம்மா இருசக்கர வாகனம் வழங்கப்பட்டிருக்கின்றது, அதற்காக வழங்கப்பட்ட மானியம் ரூ.10.85 கோடி ஆகும்.

பிரதம மந்திரி பயிர் காப்பீட்டுத் திட்டத்தின் கீழ், நாகப்பட்டினம் மாவட்டத்தில் கடந்த நான்கு ஆண்டுகளில் 7,27,677 பதிவு செய்யப்பட்ட விவசாயிகளில் 4,22,998 விவசாயிகளுக்கு பயிர் இழப்பீட்டுத் தொகையாக ரூ.1,051 கோடியே 73 இலட்சம் இழப்பீடாக பெற்றுத் தந்த அரசு அம்மாவின் அரசு.

நாகப்பட்டினம் மாவட்டத்தில் அதிகமான தடுப்பணைகள் கட்டித் தந்திருக்கிறோம். கடல்நீர் உட்புகாத வண்ணம் நீரொழுங்கிகள் அமைக்கப்பட்டு இருக்கின்றன. ஆதனூர் குமாரமங்கலத்தில் ஒரு கதவணை கட்டும் பணி நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

நாகப்பட்டினம் மாவட்டத்தில், ரூ.367 கோடி மதிப்பீட்டில், அரசு மருத்துவக் கல்லூரி மற்றும் மருத்துவமனை, குடியிருப்புகள் கட்டுவதற்கு அடிக்கல் நாட்டப்பட்டு பணிகள் நடைபெற்று வருகின்றன. தமிழ்நாடு முழுவதும் ஒரே நேரத்தில் 11 அரசு மருத்துவக் கல்லூரிகளை பெற்று தந்த ஒரே மாநிலம் இந்தியாவிலேயே தமிழ்நாடு தான். இவையெல்லாம் கட்டி முடிக்கப்பட்ட பின்பு ஏழை, எளிய மக்கள் மருத்துவ சிகிச்சை பெறுவதில் எந்த குறைபாடும் இருக்காது. தனியார் மருத்துவமனையை விட கூடுதல் வசதியுடன் இம்மருத்துவ கல்லூரி மருத்துவமனைகள் அமையவிருக்கின்றன.

நாகப்பட்டினம் மாவட்டத்தை பிரித்து மயிலாடுதுறையை தலைமையிடமாகக் கொண்டு புதிய மாவட்டம் உருவாக்க வேண்டும் என்ற நீண்டநாள் கோரிக்கையை நிறைவேற்றும் வகையில் மயிலாடுதுறையை தலைமையிடமாகக் கொண்டு புதிய மாவட்டம் தோற்றுவிப்பதற்கு கருத்து கேட்புக் கூட்டம் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது, விரைவாக இந்த புதிய மாவட்டம் தோற்றுவிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

நாகப்பட்டினம் மாவட்டத்தில் உணவுப் பூங்கா 250 ஏக்கர் நிலப்பரப்பில் ரூ.1,000 கோடி மதிப்பீட்டில் உருவாக்க இருக்கிறோம். இதனால் 1,800 நபர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கப்படும். தனியார், மத்திய அரசு மற்றும் மாநில அரசு இணைந்து ஒரு Readymade ஜவுளிப் பூங்கா ஒன்றும் இந்த மாவட்டத்தில் அமைக்க இருக்கிறோம் என்ற செய்தியையும் தெரிவித்துக் கொள்கிறேன். இந்த மாவட்டத்தில், தரங்கம்பாடியிலும், வெள்ளப்பள்ளம், ஆற்காட்டுத்துறை ஆகிய இடங்களில் தலா ஒரு மீன்பிடி துறைமுகம் அமைக்கப்பட்டுள்ளன. எனவே, இந்த மாவட்டத்தின் வளர்ச்சிக்குத் தேவையான அனைத்தையும் எங்களுடைய அரசு செய்து கொடுத்திருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

கொரோனா வைரஸ் நோய்த் தொற்றுப் பரவலைத் தடுப்பதற்கு மாவட்ட நிருவாகம் முனைப்புடன் செயல்பட்டுக் கொண்டிருப்பதற்கு என்னுடைய பாராட்டுதல்களை தெரிவித்து கொள்வதோடு, நாகப்பட்டினம் மாவட்ட மக்கள் மாண்புமிகு அம்மாவின் அரசு எடுக்கின்ற நடவடிக்கைகளுக்கு துணை நின்று கொரோனா வைரஸ் நோய்த் தொற்றுப் பரவலைத் தடுப்பதற்கு முழு ஒத்துழைப்பு நல்க வேண்டுமென்று அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

நுணா இலை

குழந்தைக்கு பசியில்லை, வயிறு மட்டும் பெரிதாக இருக்கிறது என்றால், வெற்றிலைக்காம்பு, நுணா இலைக் கொழுந்து, வேலிப்பருத்தியிலை இவற்றை கசாயமாக்கி 5 முதல் 10 மிலி 4 நாட்கள் கொடுக்க, பசியின்மை மறைந்து, குழந்தை உணவை விரும்பி சாப்பிடும்.

நாகப்பட்டினம் மாவட்ட வளர்ச்சிப் பணிகள்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **எடப்பாடி கே. பழனிசாமி** அவர்கள் 27.08.2020 அன்று நாகப்பட்டினம் மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலகத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை, பொதுப்பணித் துறை, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை, மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை, கால்நடை பராமரிப்புத் துறை, நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, உணவு மற்றும் நுகர்பொருள் வழங்கல் துறை ஆகிய துறைகளின் சார்பில் ரூ.43.60 கோடி மதிப்பீட்டிலான 13 முடிவுற்ற திட்டப் பணிகளை திறந்து வைத்து, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை, தமிழ்நாடு குடிசைப் பகுதி மாற்று வாரியம், நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, பொதுப்பணித் துறை, மீன்வளத் துறை ஆகிய துறைகளின் சார்பில் ரூ.207.56 கோடி மதிப்பீட்டில் 10 புதிய திட்டப் பணிகளுக்கு அடிக்கல் நாட்டினார்கள்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **எடப்பாடி கே. பழனிசாமி** அவர்கள் 27.08.2020 அன்று நாகப்பட்டினம் மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலகத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில், பயனாளிகளுக்கு அரசு நலத்திட்ட உதவிகளை வழங்கினார்கள். உடன் மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் திரு.ஓ.எஸ். மணியன், நாடாளுமன்ற மற்றும் சட்டமன்ற உறுப்பினர்கள், நாகப்பட்டினம் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. பிரவீன் பி. நாயர், இ.ஆ.ப., மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உள்ளனர்.

பேரறிஞர் அண்ணா அவர்கள் போப்பாண்டவரிடம் வைத்த கோரிக்கை!

அமெரிக்கா சென்ற பேரறிஞர் அண்ணா அவர்களுக்கு, கிறிஸ்துவ தலைவர் போப்பாண்டவர் அவர்களை சந்திக்க ஐந்து நிமிடம் ஒதுக்கப்பட்டது.

“மகாத்மா காந்தி பிறந்த இந்திய தேசத்தின் கடைக்கோடி மாநிலமான தமிழ்நாட்டின் முதல்வர் நான்” என்று பேச ஆரம்பித்து, தமிழர்களின் சிறப்பை எடுத்து சொல்லி ஐந்து நிமிடத்தில் தன் பேச்சை முடித்தார் அண்ணா.

போப்பாண்டவர் சொன்னார், “அருமையாகப் பேசுகிறீர்கள், தொடர்ந்து பேசுங்கள்” என்றார். அதனைத் தொடர்ந்து அண்ணா அவர்கள் ஐம்பத்தைந்து நிமிடம் பேசினார்.

அண்ணாவின் பேச்சில் சொக்கிப்போன போப்பாண்டவர் அண்ணாவுக்கு நன்றி தெரிவித்து, “உங்களுக்கு என்ன பரிசு வேண்டும் கேளுங்கள்” என்றார்.

“என்ன கேட்டாலும் தருவீர்களா ?” என்று கேட்டார் அண்ணா.

“கேளுங்கள் தருகிறேன்” என்றார் போப்பாண்டவர்.

போர்ச்சுகல் தேசம் இந்தியாவின் கோவாவை ஆக்கிரமித்திருந்தது. “போர்ச்சுகலின் ஆக்கிரமிப்பை எதிர்த்து போராடிய ‘மோகன் ரானடே’ இன்றைக்கும் போர்ச்சுகல் தலைநகரான லிஸ்பன் சிறையில் வாடுகிறார்”. உலக கிறிஸ்தவர்களின் தலைவரான நீங்கள் போர்ச்சுகலிடம் பேசி மோகன் ரானடேவை விடுதலை செய்ய வேண்டும்” என்று கேட்டார் அண்ணா.

சரி என்று சொன்னார் போப்பாண்டவர்.

மகிழ்ச்சியோடு இந்தியா திரும்பினார் அண்ணா.

போப்பாண்டவர் அவர்களின் வேண்டுகோளை ஏற்று விடுதலை செய்யப்பட்ட மோகன் ரானடே இந்திய தூதரகத்திடம் ஒப்படைக்கப்பட்டார்.

டெல்லி வந்த மோகன் ரானடேவை வரவேற்க அன்றைய பிரதமர் இந்திரா காந்தி அவர்கள் விமான நிலையத்திற்கு சென்றார்.

மோகன் ரானடே, இந்திரா காந்தி அவர்கள் பிரதமர் அவர்களிடம், நான் “யாருக்காகப் போராடினேனோ அந்த கோவா மக்களே என்னை மறந்துவிட்ட நிலையில், தமிழகத்தில் இருந்து என் விடுதலையை வேண்டிய திரு. அண்ணாதுரை எங்கே ?” என்று கேட்டார்.

“அண்ணா மறைந்து விட்டார். “நீங்கள் மிகவும் நேசிக்கும் கோவாவிற்கு செல்ல ஏற்பாடு செய்திருக்கிறேன்” என்று சொன்னார் பிரதமர் இந்திரா காந்தி அவர்கள்.

உடைந்து போன மோகன் ரானடே, “நான் முதலில் செல்ல வேண்டிய இடம் கோவா அல்ல, அண்ணாவின் சமாதி தான்” என்றார்.

மோகன் ரானடே அவ்வாறே உடனடியாக சென்னைக்கு அனுப்பி வைக்கப்பட்டார்.

பேரறிஞர் அண்ணா துயில் கொள்ளும் மெரினாவில் அழுது புரண்டு தனது கண்ணீர் அஞ்சலியை செலுத்தினார் மோகன் ரானடே.

போப்பாண்டவரிடம் தனக்கென எதுவும் கேட்காமல், ஒரு போராளியின் விடுதலை வேண்டிய மனிதநேய மாந்தர் தான் நமது பேரறிஞர் அண்ணா.

இந்தியாவில் உள்ள மற்ற மாநிலங்களுக்கு முன்மாதிரியாக திகழ்கின்ற கல்வித் தொலைக்காட்சி முதலாம் ஆண்டை பூர்த்தி செய்கிறது

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
திரு. **எடப்பாடி கே. பழனிசாமி** அவர்களின்
அறிக்கை – 26.08.2020

“**க**ல்விச் செல்வம் காலத்தால் அழியாதது. அந்தச் செல்வம் நாட்டிலே, பாறைக்கடியிலே சுரங்கத்திலிருக்கும் தங்கக் கட்டிகளாக இருக்கக்கூடாது. அதை எடுத்துப் பயன்படுத்திப் பளபளப்புள்ள, நல்ல ஒளியுள்ள தங்கமாக ஆக்கவேண்டும்'' என்றார் பேரறிஞர் அண்ணா அவர்கள்.

கோப்பு படம்

எனது தலைமையிலான மாண்புமிகு அம்மாவின் அரசு, பேரறிஞர் அண்ணா அவர்களின் அமுதமொழிக்கு செயல்வடிவம் கொடுக்கும் பணியினை அர்ப்பணிப்போடு செய்து வருகின்றது.

“எல்லாரும் எல்லாமும் பெற வேண்டும், இங்கு இல்லாமை இல்லாத நிலை வேண்டும்“ என்பதை தாரக மந்திரமாக கொண்ட மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்கள், ஏழை, எளிய மாணவ, மாணவியர் கல்வி அறிவை பெறவேண்டும் என்பதற்காக, இந்தியாவிலேயே எந்த மாநிலமும் சாதித்திராத அளவிற்கு கட்டணமில்லா கல்வியுடன் கூடிய விலையில்லா பாடப் புத்தகங்கள், நோட்டுப் புத்தகங்கள், சீருடைகள், காலணிகள், புத்தகப் பை, மடிக்கணினி, மிதிவண்டி, ஊக்கத் தொகை என பல்வேறு சலுகைகளை, அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் பயிலும் மாணவ, மாணவியருக்கு ஒவ்வொரு ஆண்டும் வழங்க உத்தரவிட்டு, நடைமுறைப்படுத்தினார்கள். இவையெல்லாம் மாண்புமிகு அம்மா அவர்களின் சீரிய சிந்தனையில் உதித்த தொலைநோக்குத் திட்டங்கள் ஆகும். இதனை நன்கு உணர்ந்த நான், 2019ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 26ஆம் நாள், கல்வித் தொலைக்காட்சி வாயிலாக கற்றல்–கற்பித்தல் என்ற திட்டத்தை துவக்கி வைத்தேன். இதனைத் தொடர்ந்து, 2019–2020ஆம் கல்வியாண்டின் இறுதிவரை அனைத்து வகுப்புகளுக்கும் பாடம் சார்ந்த பகுதிகள் குறைவான கால அளவில் வீடியோ பதிவுகளாக எடுக்கப்பட்டு, தமிழ்நாடு அரசு கேபிள் டிவி வாயிலாக ஒளிபரப்பப்பட்டு வந்தது.

இந்தச் சூழ்நிலையில், மனிதகுலம் இதுவரை சந்தித்திராத கோவிட்–19 என்னும் கொடும் தொற்றுநோய் உலகத்தையே முடக்கிப் போட்டதன் காரணமாக, புதிய கல்வி ஆண்டை துவங்குவது என்பது மிகப்



பெரும் சவாலாக இருந்தபோதிலும், இந்தச் சவாலை எதிர்கொண்டு, இந்தியாவிற்கே வழிகாட்டும் வகையில், மாணவர்கள் தங்கள் கற்றலை தங்கள் இல்லங்களிலிருந்தே, தங்கு தடையின்றி பெறும் வகையில், கல்வித் தொலைக்காட்சி மாற்றி அமைக்கப்பட்டு, பள்ளிகளுக்கான பாட அட்டவணைப் போன்று கல்வித் தொலைக்காட்சிக்கான ஒளிபரப்பு அட்டவணை, வகுப்பு வாரியாக, பாட வாரியாக, வார நாட்களுக்கு தயாரிக்கப்பட்டு இரண்டாம் வகுப்பு முதல் பத்தாம் வகுப்பு வரையில் வீடியோ பாடப்பதிவுகள் தமிழ்நாட்டில் உள்ள ஆசிரியர்களால் மேற்கொள்ளப்பட்டது. இவ்வகையில் தயாரிக்கப்பட்ட அனைத்து வீடியோ பாடப் பகுதிகளிலும் QR Code விரைவுக்குறியீடு உள்ளீடு செய்யப்பட்டுள்ளது. இப்புதிய வடிவில் தயாரிக்கப்பட்ட பாடங்களை கல்வித் தொலைக்காட்சியின் வாயிலாக ஒளிபரப்பு செய்யும் நிகழ்ச்சியை நான் 14.07.2020 அன்று தொடங்கி வைத்தேன். தமிழ்நாடு அரசின் இந்த முயற்சிகளுக்கு உறுதுணையாக 11 தனியார் மற்றும் கேபிள் தொலைக்காட்சிகளிலும், Airtel DTH–லும் கல்வித் தொலைக்காட்சியின் நிகழ்ச்சிகள் ஒளிபரப்பப்படுகின்றன.

கல்வித் தொலைக்காட்சி நிகழ்ச்சிகளை முதல் நாள் பார்க்கத் தவறியவர்கள், மறுநாள் முதல் கல்வித் தொலைக்காட்சியின் YouTube Channel வழியாக பாடங்கள், படித்து பயன்பெற வழிவகை செய்யப்பட்டுள்ளது. கல்வித் தொலைக்காட்சியின் ஒளிபரப்பு அட்டவணை மற்றும் இதர தகவல்கள், கல்வித் தொலைக்காட்சியின் இணைய தளத்திலும் கிடைக்கிறது. 1 மற்றும் 11ஆம் வகுப்புகளுக்கான கல்வித் தொலைக்காட்சி ஒளிபரப்பு பள்ளிகளில் மாணவர் சேர்க்கை முடிந்தவுடன் ஆரம்பமாகும்.

பனிரெண்டாம் வகுப்பு பாடங்களை பொறுத்தவரை, அவர்களுக்கான பாடங்கள் தமிழ்நாடு அரசால் மாணவர்களுக்கு வழங்கப்பட்டுள்ள விலையில்லா மடிக்கணினிகளில் 2,939 அரசு மேல்நிலைப் பள்ளிகளில் உள்ள Hi Tech ஆய்வகங்கள் வாயிலாக பதிவேற்றம் செய்து வழங்கப்பட்டுள்ளது. இதற்காக திட்டமிடப்பட்ட 1,498 வீடியோ பாடங்களில் முதற்கட்டமாக 414 வீடியோ பாடங்கள் 4,20,624 மாணவர்களின் மடிக்கணினியில் பதிவேற்றம் செய்து வழங்கப்பட்டுள்ளது என்பதையும், மீதமுள்ள பாடங்கள் வரும் மாதங்களில் வழங்கப்படும் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

நாட்டிலேயே முதன் முறையாக அனைத்து வகுப்புகளுக்கும் பள்ளி வேலை நாட்களில் பாடங்கள் நடத்தப்படுவதைப் போன்று ஒளிபரப்பு அட்டவணை தயாரிக்கப்பட்டு, பாடவாரியாக தலைப்பு வாரியாக பாடம் நடத்துவதும், 10ஆம் வகுப்பு மாற்றுத்திறனாளி மாணவர்களுக்கு சைகை மொழியில் பாடம் ஒளிபரப்புவதும் கல்வித் தொலைக்காட்சியின் தனிச் சிறப்பாகும்.

“மோரை கடைந்து வெண்ணெய் எடுப்பதுபோல, அறிவை வளர்த்துக் கொண்டு பலன் பெற வேண்டும்” என்ற பேரறிஞர் அண்ணா அவர்களின் பொன்மொழிக்கேற்ப, கல்வித் தொலைக்காட்சி மூலம் பாடங்களை மாணவ, மாணவியர் நன்கு கற்று, தங்கள் அறிவை வளர்த்து பலன் பெறுவார்கள் என்பதில் ஐயமில்லை.

‘கல்வித் தொலைக்காட்சி’ முதலாம் ஆண்டினை பூர்த்தி செய்கிறது என்ற செய்தியும், இந்தத் தொலைக்காட்சி இந்தியாவில் உள்ள மற்ற மாநிலங்களுக்கு முன்மாதிரியாக திகழ்கிறது என்ற செய்தியும் எனக்கு இரட்டிப்பு மகிழ்ச்சியினை அளிக்கிறது. ஓராண்டு நிறைவு செய்த கல்வித் தொலைக்காட்சிக்கு எனது மனமார்ந்த வாழ்த்தினையும், பாராட்டினையும் தெரிவித்துக் கொள்வதோடு, இதனை சிறப்பாக செயல்படுத்தி வருகின்ற மாண்புமிகு பள்ளிக்கல்வித் துறை அமைச்சர், பள்ளிக்கல்வித் துறை முதன்மைச் செயலாளர், அலுவலர்கள், ஆசிரியப் பெருமக்கள் உள்ளிட்ட அனைத்து நல் உள்ளங்களுக்கும் எனது மனமார்ந்த பாராட்டினை தெரிவித்துக் கொள்கிறேன். மாணவ, மாணவியர் நலன் கருதி, எனது தலைமையிலான அரசு இதுபோன்ற எண்ணற்ற சாதனைகளை புரியும் என்பதையும் இந்தத் தருணத்தில் தெரிவித்துக் கொள்கிறேன்.

புத்தகம்

தொட்டுப் பார் – நான் காகிதம்!

படித்துப் பார் – நான் ஆயுதம்!!

காவேரி ஆறு மாசுபடுவதை தடுத்து புத்துயிர் பெற ரூ.10,700 கோடி மதிப்பீட்டில் திட்டம்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **எடப்பாடி கே. பழனிசாமி** அவர்கள் மாண்புமிகு மத்திய நீர் வளத்துறை அமைச்சர் திரு.**கஜேந்திர சிங் செகாவத்** அவர்களுடன் தமிழகத்திற்கான நீராதார திட்டங்கள், நதிகள் இணைப்பு திட்டங்கள் குறித்து 18.08.2020 அன்று காணொலிக் காட்சி மூலம் ஆலோசனை நடத்தினார்கள்.

தமிழ்நாடு நீர் பற்றாக்குறை உள்ள மாநிலம். பருவமழையை நம்பித்தான் தமிழ்நாடு இருந்து வருகிறது. இதையெல்லாம் கருத்தில் கொண்டு, குடிமராமத்து போன்ற சமூக பங்களிப்புடன் கூடிய நீர் மேம்பாட்டு திட்டங்களை நிறைவேற்றி, நீர் பாதுகாப்புக்கு தேவையான பல்வேறு நடவடிக்கைகளை எடுத்துள்ளோம். கடந்த 4 ஆண்டுகளில் 6,278 குடிமராமத்து பணிகள் ரூ.1,434 கோடி செலவில் மேற்கொண்டுள்ளோம்.

தண்ணீரை சேமிக்க சாத்தியக்கூறு உள்ள இடங்களில் தடுப்பு அணைகள் கட்டுவதற்கு திட்டமிடப்பட்டு மூன்று ஆண்டுகளில் ரூ.1,000 கோடி செலவில் இந்த பணிகள் நடந்து வருகிறது. **மாநில நிதியின் கீழ் ஏராளமான ஆறுகள் மற்றும் கால்வாய்கள் சீரமைக்கப்பட்டு, இதன் காரணமாக மாநிலத்தில் பயிரிடப்படும் பரப்பளவு அதிகரித்துள்ளன. அதுமட்டுமல்லாமல், நடப்பு ஆண்டில் நெல் கொள்முதல் சாதனையை எட்டி உள்ளது. இந்நிலையில் சில திட்டங்களுக்கு மத்திய அரசின் ஒத்துழைப்பை கோருகிறோம்.**

காவேரி – கோதாவரி இணைப்புத் திட்டம்

தமிழக அரசின் சில நீர் மேலாண்மை திட்டங்களுக்கு மத்திய அரசின் ஆதரவு தேவைப்படுகிறது. காவேரி–கோதாவரி இணைப்பு திட்டத்துக்காக தேசிய நீர் மேம்பாட்டு முகமை விரிவான திட்ட அறிக்கையை தயாரித்து மாநிலங்களுக்கு அனுப்பி கருத்துக் கேட்டது. இந்த திட்டத்தை பொறுத்தமட்டில் கோதாவரி ஆறு, கல்லணை அருகே காவேரி ஆற்றில் சேருவது போன்று திட்டம் தயார் செய்யப்பட்டுள்ளது. அதை மாயனூர் கதவணை வரை, திட்டத்தை நீட்டித்து தருமாறு தமிழக அரசு 04.09.2019 அன்று தனது கருத்துகளை மத்திய நீர்வளத்துறைக்கு அனுப்பி உள்ளது.

இதுதொடர்பாக பிரதமர் அவர்களுக்கும் கடிதம் எழுதி உள்ளேன். மேலும், இந்த திட்டத்தில் இருந்து 200 டி.எம்.சி

தண்ணீரை தமிழகத்திற்கு ஒதுக்குமாறும் கோரிக்கை விடுத்தேன். இந்த திட்டத்திற்கு விரிவான திட்ட அறிக்கை தயார் செய்வதை விரைவாக முடித்து, பணிகளை தொடங்க தேசிய நீர் மேம்பாட்டு முகமைக்கு உத்தரவிட வேண்டும்.

காவேரி – குண்டாறு இணைப்புத் திட்டம்

இதேபோன்று, மாநிலத்துக்கு உள்ளேயே காவேரி–குண்டாறு இணைக்க திட்டமிடப்பட்டுள்ளது. இது, நதிகள் இணைப்பை மேம்படுத்தும் தேசிய திட்டத்தின் ஒரு பகுதியாகும். இதற்காக விரிவான திட்ட அறிக்கையை தேசிய நீர் மேம்பாட்டு முகமை தயார் செய்துள்ளது. ஆனால், தமிழக அரசுக்கு அந்த அறிக்கை இன்னும் அனுப்பப்படவில்லை. அந்த திட்ட அறிக்கையை மாநில அரசுக்கு அனுப்ப தேசிய நீர் மேம்பாட்டு முகமையை உத்தரவிட வேண்டும்.

நடந்தாய் வாழி காவேரி

காவேரி ஆறு மாசுபடுவதை தடுத்து புத்துயிர் பெறுவதை உறுதி செய்ய ரூ.10,700 கோடியாகும் என மதிப்பிடப்பட்டுள்ளது. நீர்வள அமைச்சகத்தின் கீழ், செயல்படும் 'வாப்கோஸ்' என்ற பொதுத்துறை நிறுவனம் இதற்காக விரிவான திட்ட அறிக்கையை தயாரிக்கும் பணியில் ஈடுபட்டுள்ளது. காவேரி விவசாயத்திற்கு மட்டுமல்ல, குடிநீருக்கும் பயன்பட்டு வருகிறது. மேலும், காவேரி, தமிழகத்தின் உயிர்நாடியாகத் திகழ்கிறது. எனவே, இந்த திட்டத்தை, நதிகளை சுத்தப்படுத்தும் திட்டமான 'நமாமி கங்கா' திட்டம் போன்ற ஒரு சிறப்பு திட்டமாக அனுமதிக்கலாம் என்றும், இதையும் ஒரு தேசிய திட்டமாக எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடல் புஜால் யோஜனா திட்டம்

நீர் பற்றாக்குறையை சரி செய்ய, உலக வங்கி உதவியுடன் மத்திய அரசு 7 மாநிலங்களில் 'அடல் புஜால் யோஜனா' என்ற திட்டத்தை செயல்படுத்தி வருகிறது. தமிழ்நாடு நீர் பற்றாக்குறை கொண்ட மாநிலமாக இருந்தபோதிலும், இந்த திட்டத்தின் கீழ் தமிழ்நாடு சேர்க்கப்படவில்லை. எனவே, நடப்பு ஆண்டில் இந்த திட்டத்தில் தமிழ்நாடு சேர்க்கப்படவேண்டும்.

அணை பாதுகாப்பு மசோதா

மத்திய அரசின் அணைகள் பாதுகாப்பு மசோதாவில், அணையை பராமரித்து, இயக்கி கட்டுப்படுத்தும் உரிமையை கொண்ட மாநிலமே, அணைப் பாதுகாப்பு குறித்த அனைத்து இயக்க கட்டுப்பாடுகளையும் வைத்திருக்கும் வகையில், திருத்தம் செய்ய தமிழ்நாடு கோரிக்கை விடுத்திருந்தது. மக்களவையில் மசோதா அறிமுகப்படுத்தப்படும்போது இந்த திருத்தமும் இடம் பெற வேண்டும்.

காவேரி ஆற்றின் குறுக்கே மேகதாதுவில் அணை கட்டுவதற்கு கருநாடக அரசு, மத்திய அரசிடம் ஒப்புதல் கோரியது. அதன்படி, மத்திய நீர் ஆணையம் கருநாடகாவிற்கு விரிவான திட்ட அறிக்கையை தயாரிக்க அனுமதி வழங்கி உள்ளது. மேகதாது திட்டத்திற்கு எதிராக தமிழ்நாடு உச்சநீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்து உள்ளது. தமிழகத்தின் கடுமையான எதிர்ப்பு காரணமாக இந்த திட்டம் ஒத்திவைக்கப்பட்டுள்ளது. காவேரியில் தண்ணீர் வருவதை தடுக்க முயற்சிப்பது உச்சநீதிமன்ற உத்தரவை மீறுவதாகும். எனவே, கருநாடகாவின் மேகதாது அணைக்கட்டு திட்டத்துக்கான முன்மொழிவை நிராகரிக்க மத்திய நீர் ஆணையம், காவேரி நீர் மேலாண்மை ஆணையத்தை அறிவுறுத்தவேண்டும்.

இதேபோன்று, நடைமுறையில் உள்ள ஒப்பந்தங்களுக்கு எதிராக கருநாடக அரசு பெண்ணையாறு ஆற்றின் குறுக்கே ஒரு அணைக்கட்டு அமைத்து வருகிறது. இதுதொடர்பாக தமிழக அரசு, சுப்ரீம் கோர்ட்டில் வழக்கு தாக்கல் செய்துள்ளது. சுப்ரீம் கோர்ட்டு உத்தரவின் அடிப்படையில், மத்திய நீர் ஆணையத்தால் பேச்சுவார்த்தை நடத்தப்பட்டுள்ளன. இதில் எந்த முன்னேற்றமும் இல்லாததால், விரைவாக தீர்ப்பாயம் ஒன்றை மத்திய அரசு அமைக்க வேண்டும்.

'ஜல் ஜீவன் மிஷன்' திட்டத்தின் கீழ் நடப்பு ஆண்டில் 34 இலட்சம் வீடுகளுக்கு குடிநீர் இணைப்பு வழங்க திட்டமிடப்பட்டுள்ளது. இந்த திட்டத்தின் கீழ், 2020–2021ஆம் ஆண்டுக்கு ரூ.2,375 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டது. இதில், ரூ.2,265 கோடி மாவட்டங்களுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டு 20 இலட்சம் வீட்டு இணைப்புகள் வழங்கப்பட உள்ளது. மீதமுள்ள 14 இலட்சம் வீடுகள் பல்வேறு திட்டங்களின் நிதி மூலம் குடிநீர் இணைப்பு வழங்கப்படும். சுமார் 4 இலட்சம் குடிநீர் இணைப்புகளை இதுவரை வழங்கி உள்ளோம். மீதமுள்ள இணைப்புகளை 2021ஆம் ஆண்டு மார்ச் மாதத்துக்குள் வழங்க உள்ளோம். மாநிலத்தின் நீர் ஆதாரத்தை மேம்படுத்தும் திட்டங்களுக்கு மத்திய அரசு ஒத்துழைப்பு அளிக்கும் என நம்புகிறேன்.

நன்றி! வணக்கம்!

மத்திய மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நல அமைச்சகத்தின் தேசிய தர உறுதித் திட்டத்தில் 13 அரசு மருத்துவமனைகள் தேர்ந்தெடுக்கப்பட்டு, மத்திய அரசு பரிசுத் தொகை ரூ.2.53 கோடியும், சான்றிதழ்களும் வழங்கப்பட்டது.

தேசிய தர உறுதித் திட்டத்தின் கீழ், அரசு மருத்துவமனைகளில் வழங்கப்படும் சுகாதார சேவைகள், சுகாதார குறியீடு, முறையான பராமரிப்பு மற்றும் அங்கு வழங்கப்படும் சிகிச்சைகள் குறித்து நோயாளிகளின் கருத்துக்கள் ஆகியவற்றை தேசிய தர குழு நிபுணர்கள் ஆய்வு செய்து, தகுதியின் அடிப்படையில் தேர்ந்தெடுக்கப்படும் அரசு மருத்துவமனைகளுக்கு, மத்திய அரசு பரிசுத் தொகையும், தேசிய தரச் சான்றிதழும் வழங்கி பாராட்டி வருகிறது. இந்த பரிசுத் தொகை தொடர்ந்து மூன்று ஆண்டுகளுக்கு வழங்கப்படுகிறது.

அந்த வகையில், மத்திய மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நல அமைச்சகத்தின் தேசிய தர உறுதித் திட்டத்தில் 2019–2020ஆம் ஆண்டிற்கு, காஞ்சிபுரம் மாவட்டம் – காஞ்சிபுரம் அரசு மாவட்ட தலைமை மருத்துவமனை, செங்கல்பட்டு மாவட்டம் – தாம்பரம் அரசு மருத்துவமனை, திருப்பத்தூர் மாவட்டம் – ஆம்பூர் அரசு மருத்துவமனை மற்றும் திருப்பத்தூர் அரசு மருத்துவமனை, இராணிப்பேட்டை மாவட்டம் – சோளிங்கர் அரசு மருத்துவமனை, தருமபுரி மாவட்டம் – அரூர் அரசு மருத்துவமனை, தூத்துக்குடி மாவட்டம் – திருச்செந்தூர் அரசு மருத்துவமனை, விருதுநகர் மாவட்டம் – அருப்புக்கோட்டை அரசு மருத்துவமனை, இராமநாதபுரம் மாவட்டம் – பரமக்குடி அரசு மருத்துவமனை, திருச்சிராப்பள்ளி மாவட்டம் – ஸ்ரீரங்கம் அரசு மருத்துவமனை, கோயம்புத்தூர் மாவட்டம் – மேட்டுப்பாளையம் அரசு மருத்துவமனை, நாமக்கல் மாவட்டம் – இராசிபுரம் அரசு மருத்துவமனை, கிருஷ்ணகிரி மாவட்டம் – ஒசூர் அரசு மருத்துவமனை ஆகிய 13 அரசு மருத்துவமனைகள் தேர்ந்தெடுக்கப்பட்டு, தேசிய தர சான்றிதழ்களுடன் பரிசுத் தொகையாக ரூ.2 கோடியே 53 இலட்சத்து 42 ஆயிரத்து 632 வழங்கப்பட்டுள்ளது.

மத்திய மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நல அமைச்சகத்தின் சார்பில் வழங்கப்பட்ட தேசிய தரச் சான்றிதழ்கள் மற்றும் பரிசுத் தொகைக்கான காசோலைகளை தேசிய தரச் சான்றிதழ்களுக்கு தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள அரசு மருத்துவமனைகளின் தலைமை மருத்துவ அலுவலர்களிடம் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் வழங்கினார்கள்.

பையனூரில், 103.07 ஏக்கர் பரப்பளவில் ரூ.600 கோடி மதிப்பீட்டில் புதிதாக நிறுவப்படவுள்ள சாயி பல்கலைக்கழகக் கட்டடம்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் 31.08.2020 அன்று தலைமைச் செயலகத்தில், செங்கல்பட்டு மாவட்டம், பையனூரில் 103.07 ஏக்கர் பரப்பளவில் புதிதாக நிறுவப்படவுள்ள சாயி பல்கலைக்கழகத்திற்கு முதற்கட்டமாக, சுமார் 600 கோடி ரூபாய் மதிப்பீட்டிலான சாயி பல்கலைக்கழகத்தின் பிரதான வளாகக் கட்டடத்திற்கு காணொலிக் காட்சி மூலமாக அடிக்கல் நாட்டினார்கள்.

சென்னையில் கடந்த 2019ஆம் ஆண்டு ஜனவரி 23 மற்றும் 24ஆம் தேதிகளில் நடைபெற்ற உலக முதலீட்டாளர்கள் மாநாட்டின் போது, சாயி பல்கலைக்கழகம் நிறுவுவது தொடர்பாக தமிழ்நாடு அரசின் உயர்கல்வித் துறைக்கும், சாயி கல்வி, மருத்துவம், ஆராய்ச்சி மற்றும் அறக்கட்டளை நிறுவனத்திற்கும் இடையே 24.01.2019 அன்று மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் முன்னிலையில் புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்தானது.

மாண்புமிகு
தமிழ்நாடு முதலமைச்சர்
திரு. **எடப்பாடி கே. பழனிசாமி** அவர்கள்
31.08.2020 அன்று தலைமைச் செயலகத்தில்,
பல்கலைக்கழகக் கட்டடத்திற்கு
அடிக்கல் நாட்டினார்கள்

சாயி பல்கலைக்கழகத்தின் நிருவாகக் குழுவில் உச்சநீதிமன்ற ஓய்வு பெற்ற தலைமை நீதிபதி, மூத்த வழக்கறிஞர், கல்வி மற்றும் பிற துறைகளைச் சேர்ந்த நிபுணர்கள் இடம் பெற்றுள்ளனர். சாயி பல்கலைக்கழகம் முதற்கட்டமாக முதல் 7 ஆண்டுகளில் 600 கோடி ரூபாய் முதலீட்டில் 12 இலட்சம் சதுர அடி கட்டட பரப்பளவில் 6,000 மாணவர்களுடன், 300 உறுப்பினர்களை கொண்ட பேராசிரியர்கள் குழு மற்றும் 300 உறுப்பினர்களைக் கொண்ட நிருவாக பணியாளர்களைக் கொண்டும் இயங்கவும், இரண்டாம் கட்டமாக, அடுத்த 5 ஆண்டுகளில் 30 இலட்சம் சதுர அடி கட்டட பரப்பளவில் 20,000 மாணவர்களுடன், 1,000 உறுப்பினர்களைக் கொண்ட பேராசிரியர்கள் குழு மற்றும் 1,000 உறுப்பினர்களைக் கொண்ட நிருவாக பணியாளர்களைக் கொண்டு முழு திறனுடன் இயங்கவும் திட்டமிட்டுள்ளது.

செய்தி மக்கள் தொடர்பு அலுவலர் பணிக்கான முன்னோடி திரு.ஹார்வி



இந்தியாவில் அச்சு இயந்திரம் கண்டுபிடிக்கும் வரையில் எல்லா கல்வியும் வாய்மொழியாக சொல்லி காது வழியாக கேட்டே வழிவழியாக வளர்ந்து வந்திருக்கிறது.

அந்த காலத்தில் பனை ஓலையில் எழுதும் தேர்ச்சி பெற்றவர்கள் ஒரு சிலரே இருந்தார்கள். மற்றபடி பெரிய



வேதாந்தம் தெரிந்தவர்கள்கூட செவி வழியேதான் கேட்டறிந்தார்கள். சமய உணர்வும், அரசியல் உணர்வும், சமூக உணர்வும் மக்களை விழிப்புறச் செய்து தம் தாய் மொழி பற்றியும், தாய் நாட்டை பற்றியும், சமூகத்தைப் பற்றியும் தெரிந்துகொள்வதற்கு இதழ்களே பெருந்தூண்டுகோலாகவும் வழிகாட்டிகளாகவும் திகழ்ந்துள்ளன.

ஆங்கில போர்ப் பிரச்சார அலுவலர்

ஆங்கிலேயர்கள், இந்தியாவில் நிருவாகம் செய்தபோது சில செய்தி சம்பந்தமான செயல்பாடுகளை எழுத்தாளர்களின் உதவியால், அவ்வப்போது கடிதங்கள் மூலமாகத் தங்களுக்குத் தேவையான வசதிகளை வருவித்துக் கொள்ளவும், இங்குள்ள அவர்களது சூழ்நிலைகளை விளக்கியும், செய்திப் போக்குவரத்து செய்து கொண்டார்கள்.

இரண்டாவது உலகப்போர் நடைபெற்ற சமயத்தில், ஆங்கில அரசுக்கும், ஹிட்லருக்கும் இடையே கடும் மோதல் உருவாகியது. ஆங்கில அரசானது, தன்னிடமுள்ள நியாய உணர்வையும், ஹிட்லரிடம் காணப்பட்ட ஆதிக்க எண்ணத்தையும் இந்திய மக்களிடம் உணர்த்தி, அவர்களின் நல்லாதரவையும், அரவணைப்பையும் பெற நினைத்தது. இதற்காக ஆங்கிலேயே அரசு திரு. ஹார்வி என்னும் ஆங்கிலேயரை (சென்னை மாகாண) வட்டார போர்ப் பிரச்சார அலுவலராக, 1942 பிப்ரவரி 16ஆம் நாள் நியமித்தது.

திரு. ஹார்வி

இவர் செய்தி விளம்பரத் துறையினைக் கட்டமைத்து ஆங்கிலேய அரசின் போர்ப் பிரச்சார அலுவலராக செயல்பட்டார். இவரது பணிகள்தான் தற்போதைய செய்தி மக்கள் தொடர்புத்துறை அலுவலர் பணிக்கான முன்னோடி.

1942இல் போர்ப் பிரச்சார அலுவலராக பணியை தொடங்கிய திரு. ஹார்வி சுமார் 4 ஆண்டு காலம் அந்த பொறுப்பினை திறம்பட செய்தார். அவர் தனது பணியை மிகுந்த கடமை உணர்வுடன் ஆற்றி வந்தார். ஆங்கிலேயே அரசின் பல்வேறு நடவடிக்கைகளை பத்திரிகை மூலம் பொதுமக்களின் கவனத்துக்கு உடனுக்குடன் கொண்டு சென்று ஆங்கிலேய அரசைப் பற்றி சாதகமான எண்ணங்களை பொதுமக்களிடம் உருவாக்கி அவர்களது ஆதரவினைத் திரட்டி, மக்களுக்கும், அரசுக்கும் பாலமாக திகழ்ந்தார்.



ஒட்டுமொத்த உள்நாட்டு உற்பத்தி மதிப்பில் 2 சதவீதம் அளவிற்கு கடன்பெற அனுமதிப்பதை உறுதி செய்ய வேண்டும்

மாண்புமிகு பாரதப் பிரதமர் திரு. **நரேந்திர மோடி** அவர்களுக்கு 31.08.2020 அன்று மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **எடப்பாடி கே. பழனிசாமி** அவர்கள் எழுதிய கடிதத்தின் தமிழாக்கம்.

சரக்கு மற்றும் சேவைகள் வரி (ஜி.எஸ்.டி.) அமல்படுத்துவதை தமிழகம் மற்றும் அனைத்து மாநிலங்களும் ஏற்றுக்கொண்டன. ஜி.எஸ்.டி. வசூலிப்பால் மாநில அரசுகளுக்கு ஏற்படும் வருவாய் இழப்புகளை ஈடுசெய்வதாக மத்திய அரசு அளித்திருந்த உறுதிமொழியைத் தொடர்ந்து ஜி.எஸ்.டி. வரி விகிதத்துக்கு ஒப்புதல் தெரிவிக்கப்பட்டது. மாநிலங்களுக்கு இழப்பீட்டுத் தொகை வழங்குவதை ஜி.எஸ்.டி. வரி விகித சட்டம் 2017, 101 ஆவது திருத்தச் சட்டப் பிரிவாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

கடந்த ஏப்ரல் 1ஆம் தேதி முதல் இதுவரையில் வருவாய் வரவுகளில் ஏற்பட்ட இழப்பீடுகளை தமிழகத்துக்கு வழங்கவில்லை. இதுவரை தமிழகத்துக்கு வழங்கப்பட வேண்டிய இழப்பீட்டுத் தொகை ரூ.12,250.50 கோடி ஆகும். அதில், ஏப்ரல் முதல் ஜூலை வரையிலான முதல் காலாண்டில் மட்டும் ரூ.11,459.37 கோடி வழங்கப்பட வேண்டும்.

கொரோனா நோய்த் தொற்று காரணமாக, மாநில அரசுகளுக்கான வருவாய் வரவுகளில் கடுமையான இழப்பு ஏற்பட்டுள்ளது. இந்த பாதிப்புகளை எதிர்கொள்ள சுகாதார வசதிகளை உருவாக்கியது, நிவாரண நடவடிக்கைகளை மேற்கொண்டது போன்ற பணிகளுக்காக ரூ.7 ஆயிரம் கோடி அளவுக்கு கூடுதலாக செலவிடப்பட்டுள்ளது. மாநிலத்தின் பொருளாதாரத்தை மீண்டும் தொடங்கும் வகையில், வழக்கமான திட்டங்கள், நலத்திட்ட உதவிகளுக்கு செலவிட வேண்டி உள்ளது. இதற்கு உடனடியாக நிதி ஆதாரங்கள் தேவையாக உள்ளன.

கடந்த நிதியாண்டில் அனுமதிக்கப்பட்ட அளவைவிட மூன்றில் ஒரு பங்குக்கும் கூடுதலாக கடன் வாங்க மாநில அரசை அனுமதிக்க வேண்டுமென ஏற்கெனவே கோரிக்கை விடுத்திருந்தேன். மேலும், சிறப்பு நிதிகளாக மாநிலங்களுக்கு ரூ.1 இலட்சம் கோடி அளவுக்கு விடுவிக்க வேண்டும் என்றும் கோரியுள்ளேன். மாநில அரசுகளின் வரி வருவாயில் ஏற்பட்ட பாதிப்புகள் காரணமாகவே இந்த கோரிக்கைகள் வைக்கப்பட்டன.

சுயசார்பு இந்தியா திட்டத்தின் கீழ், மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 2 சதவீதம் அளவுக்கு கூடுதலாக கடன் பெற வழி செய்யப்பட்டுள்ளது. அதில், மத்திய அரசு அடையாளம் காட்டியுள்ள சீர்திருத்த நடவடிக்கைகளை மேற்கொண்டால், 1.5 சதவீதம் அளவுக்கு கடன் பெற அனுமதி தரப்பட்டுள்ளது. கடன் பெறுதல் என்பது, ஜி.எஸ்.டி. இழப்பீட்டுக்கான பாக்கித் தொகையுடன் தேவையான அம்சமாக உள்ளது.

ஜி.எஸ்.டி. வரி விதிப்பில் ஏற்படும் இழப்பீடுகளை ஈடு செய்வது, மத்திய அரசின் தார்மீக மற்றும் சட்டப்பூர்வ கடமை. இதுதான் மாநில அரசின் நிலைப்பாடாக தொடர்கிறது. மாநிலங்களுக்கு ஜி.எஸ்.டி. இழப்பீட்டுத் தொகையை வழங்க உரிய நிதி ஆதார அம்சங்களுக்கு மத்திய அரசு வழி காண வேண்டுமென தொடர்ந்து வலியுறுத்தி வருகிறோம். இந்த கோரிக்கையை கடந்த ஆகஸ்ட் 27ஆம் தேதி நடந்த 41ஆவது ஜி.எஸ்.டி கவுன்சில் கூட்டத்தில் தமிழ்நாட்டின் சார்பில் மாண்புமிகு மீன்வளம் மற்றும் பணியாளர் நிருவாகச் சீர்திருத்தத்துறை அமைச்சர் திரு. டி.ஜெயக்குமார் முன்வைத்துள்ளார். இது நடைமுறை சாத்தியமுள்ள அனைத்து மாநிலங்களும் ஒப்புக்கொண்டுள்ள ஒரு யோசனையாகும்.

கடந்த ஆகஸ்ட் 27ஆம் தேதி நடந்த ஜி.எஸ்.டி. கவுன்சில் கூட்டத்தில் மத்திய அரசின் சார்பில் மாநிலங்களுக்கு இரண்டு வாய்ப்புகள் அளிக்கப்பட்டன. அதில் முதல் ஒன்று, மாநிலங்கள் ஜி.எஸ்.டி. பற்றாக்குறையை சமாளிக்க, வெளி சந்தைகளில் கடன் வாங்கிக் கொள்ளலாம் எனத் தெரிவிக்கப்பட்டது. இது மாநில நிருவாக ரீதியாக கடினமானதுடன், மிகவும்

செலவு வைக்கக்கூடிய அம்சமாகும். எனவே, மத்திய அரசு ஜி.எஸ்.டி., வரிக்கான இழப்பீட்டுத் தொகைகளை வழங்க நிதி வளத்தை கண்டறிய வேண்டும். தேவைப்பட்டால், கடன் வாங்கவோ அல்லது வரியை நீட்டிக்கவோ செய்யலாம்.

2ஆவது வாய்ப்பில், ரூ.2.35 இலட்சம் கோடியை கடன் தொகையாக மாநிலங்கள் பெற்றுக்கொள்ளலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது. சுயசார்பு இந்தியா திட்டத்தின் கீழ் ஏற்கெனவே மாநிலத்தின் ஒட்டுமொத்த உள்நாட்டு உற்பத்தி மதிப்பில் ஒரு சதவீதம் வரை கடன் பெற்றுக்கொள்ள அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. எனவே, இந்த 2ஆவது வாய்ப்பும் மாநில அரசுகளின் நிலைகளைக் கவனத்தில் கொண்டு செய்யப்படவில்லை.

மத்திய அரசு முன்வைத்துள்ள இரண்டு வாய்ப்புகளும் மாநிலங்களுக்குரிய பிற ஒட்டுமொத்த ஆதாரங்களைக் குறைப்பதாக அமைந்திருக்கிறது. இது, கொரோனா நோய்த் தொற்று மற்றும் பல பணிகளுக்காக செலவிட்டு வரும் மாநில அரசுகளை பாதிக்கும் வகையில் உள்ளது. நிதிச் சிக்கல்களால் உள்கட்டமைப்புகளுக்கான மூலதன செலவுகள் மற்றும் நலத்திட்டங்களை செயல்படுத்துவதில் மிகப்பெரிய அளவில் பாதிப்பு ஏற்படும்.

எனவே, நிதியமைச்சகம் முன்வைத்துள்ள இரண்டு வாய்ப்புகள் குறித்த விஷயத்தில் நீங்கள் உடனடியாக தலையிட வேண்டும். அதன்படி, ஜி.எஸ்.டி. இழப்பீட்டுத் தொகைக்காக ஒரு தனி அமைப்பை ஏற்படுத்த வேண்டும். அதன் மூலம் நிலுவைத் தொகைகளை முழுமையாக வழங்க முடியும்.

இந்த நிதியாண்டில் ஜி.எஸ்.டி.க்கான முழு இழப்பீட்டுத் தொகையை வழங்குவது, சுயசார்பு இந்தியா திட்டத்தின் கீழ், ஒட்டுமொத்த உள்நாட்டு உற்பத்தி மதிப்பில் 2 சதவீதம் அளவுக்கு கடன்பெற அனுமதிப்பதையும் உறுதிப்படுத்த வேண்டும். அதற்காக விதிக்கப்பட்டுள்ள நிபந்தனைகளை தளர்த்த வேண்டும். 2022 மார்ச் 31ஆம் தேதிக்கு பின்பு வழங்கப்பட வேண்டிய இழப்பீட்டுத் தொகைகள், எந்த பாக்கியும் இல்லாமல் வழங்கப்படும் என உறுதிமொழி அளித்திட வேண்டும்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
திரு. **எடப்பாடி கே. பழனிசாமி** அவர்களின்
அறிக்கை – 01.09.2020

முதுநிலை மருத்துவப் பட்டப் படிப்பில், மாநிலத்திற்கான 50 விழுக்காடு இடங்களில் உள் ஒதுக்கீடாக 50 விழுக்காடு இடங்களை தமிழ்நாடு அரசில் பணிபுரியும் மருத்துவர்களுக்கு வழங்கும் நடைமுறை பல காலமாக தமிழ்நாட்டில் இருந்து வந்தது. இந்த நடைமுறையை பாதிக்கும் விதத்தில், இந்திய மருத்துவக் குழுமம் (MCI), முதுநிலை மருத்துவ கல்வி ஒழுங்கு முறைகளை வெளியிட்டது. இதனை எதிர்த்து தமிழ்நாடு மருத்துவ அலுவலர்கள் சங்கம் உச்சநீதிமன்றத்தில் தொடர்ந்த வழக்கில், தமிழ்நாடு அரசு இந்த வழக்கினை ஆதரித்து மூத்த வழக்கறிஞர்களை நியமித்து, முதுநிலை மருத்துவப் பட்டப் படிப்பில் தமிழ்நாட்டில் ஏற்கெனவே நடைமுறையில் உள்ள உள் ஒதுக்கீட்டு முறையே தொடர வேண்டும் என்று ஆணித்தரமாக வாதாடியது.

இவ்வழக்கில், 31.08.2020 அன்று மாண்புமிகு உச்சநீதிமன்றம் அளித்த தீர்ப்புரையில், “மாநில அரசுகள் மருத்துவர்களுக்கு உள் ஒதுக்கீடு வழங்குவது, முதுநிலை மருத்துவ கல்வி ஒழுங்கு முறைகளுக்கு எதிரானது அல்ல என்றும், எனவே அரசு மருத்துவர்களுக்கு மாநில அரசுகள் முதுநிலை மருத்துவப் பட்டப் படிப்பில் உள் ஒதுக்கீடு வழங்கலாம்” என்ற ஒரு வரலாற்று சிறப்புமிக்க தீர்ப்பை வழங்கியது.

ஊரகப் பகுதி மக்களுக்கும், மலைவாழ் மக்களுக்கும், ஏழை, எளிய மக்களுக்கும் மருத்துவ சேவையாற்றுகின்ற நமது அரசு மருத்துவர்களுக்கு முதுநிலை மருத்துவப் பட்டப் படிப்பில் வழங்கப்பட்டு வந்த உள் ஒதுக்கீட்டை பாதுகாக்கும் வகையில், உச்சநீதிமன்றத்தில் சட்டப் போராட்டம் மூலம், உரிமையை நிலைநிறுத்தியது மாண்புமிகு அம்மாவின் அரசு தான் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.



இந்தியாவிலேயே தன்னுடைய நாளிதழுக்கு தானே தாள்களை தயாரித்துக் கொண்ட முதல் இதழாளர் சி.பா.ஆதித்தனார்

மதுரையில் 1942இல் 'தமிழன்' வார இதழைத் தொடங்கிய அதே நேரத்தில் சி.பா.ஆதித்தனார் அவர்கள் 'தந்தி'யையும் தொடங்கினார்கள். 'தமிழன்', 'தந்தி' இரண்டுமே மளமள என்று வளர்ச்சி அடைந்தன. ஆயிரக்கணக்கில் விற்பனை ஆயின. அப்பொழுது இரண்டாம் உலகப்போர் நடந்து கொண்டிருந்தது. இதழ் அச்சிடுவதற்கான தாள் வெளிநாடுகளிருந்து கப்பலில் தான் இந்தியாவுக்கு வரவேண்டும். இரண்டாம் உலகப் போர் காரணமாகப் போதிய தாள்கள் வரவில்லை. அதிலும், புதிதாகத் தொடங்கப்பட்ட 'தந்தி', 'தமிழன்' இரண்டு இதழ்களுக்கு அரசாங்கம் தாள்கள் ஒதுக்கவில்லை.

ஓர் இதழ் நடத்துவதற்கு முதல் தேவை, தாள்கள் தான். 'சுவர் இருந்தால் தானே சித்திரம் வரைய முடியும்' என்பது போல, தாள்கள் இருந்தால் தானே இதழை அச்சிட்டு வெளியிட முடியும்.

இன்றைய காலகட்டம் போல், அன்றைக்கு இதழுக்குத் தேவையான தாள்கள் உள்நாட்டில் தயாராகவில்லை. முழுக்க முழுக்க வெளிநாடுகளில் இருந்துதான் கப்பல்கள் மூலம் இறக்குமதி செய்யப்பட்டது. கப்பல்கள் எப்பொழுது வந்து சேரும் என்று சொல்ல முடியாது. எனவே, ஏற்கெனவே வெளிவந்து கொண்டிருந்த இதழ்களே தாள்கள் பற்றாக்குறையில் அவதிப்பட்டுக் கொண்டிருந்தன. புதிய இதழ்களுக்கு தாள்கள் கொடுப்பதில்லை என்று அரசு கொள்கை வைத்திருந்தது.

எனவே, தம் கையே தமக்கு உதவி என்று துணிந்தார் சி.பா.ஆதித்தனார். தாமே தாள்கள் தயாரித்தார். இந்தியாவில் தனக்குத் தேவையான தாள்களை தானே தயாரித்துக் கொண்ட முதல் இதழாளர் ஆனார்.

வைக்கோலில் இருந்து, இந்த தாள்கள் செய்யப்பட்டது. வைக்கோல் வாங்குவது முதல் அதை அரைத்து கூழாக்கித் தாள்கள் தயாரிப்பது வரை அனைத்து வேலைகளையும் சி.பா. ஆதித்தனார் அவர்களே முன் நின்று செய்தார்கள்.

'தந்தி' நாளிதழ் என்பதால் அதனை அச்சிட நாள்தோறும் தாள்கள் தேவையாக இருந்தது. அதன் விற்பனையும் அதிகரித்தது. இதனால், அன்றாடம் நாட்டு தாள்கள் பெருமளவில் தயாரிக்க வேண்டியிருந்தது. எனவே, இதழ்களில் 'தந்தி' அல்லது 'தமிழன்' இரண்டில் ஒன்று தான் அச்சிட்டு வெளியிட முடியும் என்ற நெருக்கடி நிலை 1944இல் ஏற்பட்டது.

அப்பொழுது 'தமிழன்' வார இதழை நிறுத்த சி.பா ஆதித்தனார் அவர்கள் முடிவு செய்தார். ஒரு வார இதழை எப்பொழுது வேண்டுமானாலும் தொடங்க முடியும். ஆனால், நாளிதழ் அப்படி அல்ல, ஒரு நாளிதழ் தொடங்குவது என்பது ஒரு மலையைப் புரட்டுவது போல ஆகும். எனவே, நாளிதழுக்கு தேவையான தாள்கள் தயாரிப்பதற்கே நேரம் போதுமானதாக இருந்தது.

நன்றி : இதழாளர் ஆதித்தனார் உலக தமிழ் ஆராய்ச்சி நிறுவனம் நூலிலிருந்து...

சோற்றுக் கற்றாழை

பூப்பு எய்திய பெண்களுக்கு, பூப்பு நாட்களிலும், அதற்கு முன்பாகவும் சிலருக்கு தாங்க முடியாக வயிற்றுவலி, சிலருக்கு ஒற்றை தலைவலியுடன் வாய் குமட்டலும் இருப்பின், இந்த சோற்றுக் காற்றாழையில் உள்ள சோறுடன் (Jelly) பனைவெல்லம், பூண்டு சேர்த்து லேகியமாக கிளறி உபயோகிக்க, இரண்டு மாதங்களில் தீர்வு ஏற்படும்.

செப்டம்பர் 5 : கப்பலோட்டிய தமிழன் வ.உ. சிதம்பரனார் பிறந்த நாள்

தமிழ்நாடு அரசின் சார்பில், கப்பலோட்டிய தமிழன் திரு.வ.உ.சிதம்பரனார் அவர்களது 149ஆவது பிறந்தநாளை முன்னிட்டு, 05.09.2020 அன்று சென்னை, இராஜாஜி சாலை, துறைமுக வளாகத்தில் அமைந்துள்ள அன்னாரது திருவுருவச் சிலைக்கு அருகில் வைக்கப்பட்டுள்ள திருவுருவப் படத்திற்கு மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள், தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழகத் தலைவர், செய்தி மக்கள் தொடர்புத் துறை இயக்குநர் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் ஆகியோர் மலர் தூவி மரியாதை செலுத்தினார்கள்.

பண்டைய பெருமைகளை நிலைநாட்டுவதற்காக சுதேசி நாவாய் சங்கத்தை வ.உ.சிதம்பரனார் அவர்கள் உருவாக்கினார். மேலும், அந்நிய நாட்டு கப்பல் கம்பெனிகள் இந்திய செல்வங்களைச் சுரண்டிச் செல்வதை தடுப்பதற்காகவும், பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தின் பலங்களில் ஒன்றாக விளங்கிய கப்பல் வாணிபத்தில் அவர்களுடைய ஆதிக்கத்தை வீழ்த்தவும், ஒரு சுதேசி கப்பல் கம்பெனியை உருவாக்க வேண்டும் என நினைத்தார். அந்த எண்ணம் 'சுதேசி ஸ்டீம் நாவிகேஷன் கம்பெனி'யாக மலர்ந்தது.

"ஒரு காலத்தில் மேற்கே ரோம் தேசத்துக்கும், கிழக்கே ஜாவா மற்றும் சுமத்ராவுக்கு அப்பாலும் தமிழகத்திலிருந்து கப்பல்கள் போய் வந்தன. வாணிபம் மூலம் சிறப்பாகவும், சுதந்திரமாகவும் பண்டைய தமிழர்கள் வாழ்ந்து வந்தனர். எனவே, தமிழர்கள் மீண்டும் எவ்வாறு கப்பலில் சென்று வாணிபம் செய்வது என்று திட்டமிட்டேன். அதன் விளைவுதான் 'சுதேசி ஸ்டீம் நாவிகேஷன் கம்பெனி'யாக உருவாகி உள்ளது" என்று வ.உ.சி. குறிப்பிட்டார். "தான் உருவாக்கிய இந்தக் கப்பல் கம்பெனி வியாபார கம்பெனி மட்டுமல்ல, முட்டை, முடிச்சுகளுடன் வெள்ளையர்களை இந்த நாட்டை விட்டு வெளியேற்றுவதற்கே இந்தக் கப்பல்கள்" என்று முழங்கினார்.

"சுதேசி ஸ்டீம் நாவிகேஷன் கம்பெனி"
எனும் நூலிலிருந்து...

திருவாரூர் மாவட்டத்தில் வேளாண்மைத் தொழில்தான் பிரதானமானது எனவே, விவசாயிகள் உற்பத்தி செய்யும் விளைபொருட்களை கொண்டு ஒரு புதிய தொழில், இம்மாவட்டத்தில் அரசு விரைவில் துவங்கும்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **எடப்பாடி கே. பழனிசாமி** அவர்கள் தலைமையில் 28.08.2020 அன்று திருவாரூர் மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலகத்தில், மாவட்ட வளர்ச்சித் திட்டப் பணிகள் மற்றும் கொரோனா நோய்த் தடுப்புப் பணிகள் குறித்து நடைபெற்ற ஆய்வுக் கூட்டத்தில் ஆற்றிய உரையிலிருந்து...

திருவாரூர் மாவட்டத்தில் நாள்தோறும் 65 காய்ச்சல் முகாம்கள் நடத்தப்பட்டுள்ளன. இதில், 74,640 நபர்கள் பரிசோதிக்கப்பட்டுள்ளனர். இம்மாவட்டத்தில் 119 கட்டுப்படுத்தப்பட்ட பகுதிகள் உள்ளன. பாதிக்கப்பட்டவர்களை கண்டறிய நியமிக்கப்பட்ட அலுவலர்கள் வீடு, வீடாகச் சென்று, காய்ச்சல், சளி, தொண்டை வலி, இருமல் போன்ற அறிகுறிகள் தென்பட்டவர்களைக் கண்டறிந்து, உடனடியாக பரிசோதனைக்குட்படுத்தி தொற்று இருப்பின் அவர்களுக்கு சிகிச்சை அளிக்கப்படுகிறது.

முதலமைச்சரின் சிறப்பு குறை தீர்க்கும் திட்டத்தின் மூலமாக, 2019–2020ஆம் ஆண்டில் 10,014 இலவச வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்கப்பட்டுள்ளன. முதியோர் உதவித்தொகை வேண்டுமென்று முதலமைச்சரின் சிறப்பு குறை தீர்க்கும் திட்டத்தின் மூலமாகவும் மற்றும் பொதுமக்கள் தானாக முன்வந்தும் அளித்த மனுக்களின் அடிப்படையில் தகுதியானவர்களுக்கு முதியோர் உதவித்தொகை இந்த மாவட்டத்தில் வழங்கப்பட்டு இருக்கின்றன. முதலமைச்சரின் சிறப்பு குறை தீர்க்கும் திட்டத்தின் மூலமாக பெறப்பட்ட 25,861 மனுக்களில் தகுதியான 13,178 மனுக்களுக்கு தீர்வு காணப்பட்டு இருக்கின்றன. இதில் முதியோர் உதவித்தொகை பெற்றவர்கள் 3,377 நபர்கள்.

இந்த மாவட்டத்தில் பசுமை வீடுகள் மற்றும் பிரதம மந்திரி குடியிருப்புத் திட்டத்தின் கீழ், வீடுகளை அதிக அளவில் கட்டிக் கொடுத்திருக்கிறோம். திருவாரூர் நகராட்சியில், அனைத்து குடியிருப்புகளுக்கும் பாதாள சாக்கடை கழிவுநீர் வீட்டு இணைப்புத் திட்டத்தின் கீழ், 2,752 வீடுகள் இணைப்பை பெற்றிருக்கின்றன. மன்னார்குடி நகராட்சியில் 7,342 குடிநீர் இணைப்புகள் வழங்கும் பணியில், தற்போது 1,212 இணைப்புகள் வழங்கப்பட்டுள்ளன. கூத்தாநல்லூர் நகராட்சியில், குடிநீர் வழங்கும் திட்டத்தின் கீழ், 3,900 குடிநீர் இணைப்புகளில் தற்போது 555 குடிநீர் இணைப்புகளும், திருத்துறைப்பூண்டி நகராட்சியில் 2,968 குடிநீர் இணைப்புகளில், தற்போது 566 குடிநீர் இணைப்புகளும்

வழங்கப்பட்டிருக்கின்றன. ஜல் ஜீவன் மிஷன் திட்டத்தின் கீழ், 2020–2021ஆம் ஆண்டில் 72 ஊராட்சிகளைச் சேர்ந்த 97 குக்கிராமங்களில் 14,740 வீடுகளுக்கு ரூ.19 கோடி மதிப்பீட்டில் குடிநீர் இணைப்பு வழங்கும் பணிக்கு ஒப்பந்தப் புள்ளிகள் நிறைவு செய்யப்பட்டிருக்கின்றன.

திருவாரூர் மாவட்டத்தில் 8,321 மகளிர் சுயஉதவிக் குழுக்கள் இருக்கின்றன. இக்குழுக்களுக்கு கடந்த மூன்றாண்டுகளில் ரூ.588 கோடி வங்கி இணைப்பு கடனுதவி வழங்கப்பட்டிருக்கிறது. அம்மா இருசக்கர வாகனத் திட்டத்தின் மூலம், கடந்த மூன்றாண்டுகளில் இந்த மாவட்டத்தில் 4,445 உழைக்கும் மகளிருக்கு அம்மா இருசக்கர வாகனங்கள் ரூ.11.11 கோடி மானியத்துடன் வழங்கப்பட்டிருக்கிறது.

நாகப்பட்டினம், திருவாரூர் மற்றும் தஞ்சாவூர் ஆகிய மாவட்டங்கள் பயன்பெறும் வகையில் காவேரி உப வடிநிலப் பகுதியிலுள்ள பாசன அமைப்புகளை விரிவுபடுத்துதல், புனரமைத்தல் மற்றும் நவீனப்படுத்துதல் திட்டம் ரூ.3,384 மதிப்பீட்டில் பரிசீலனையில் உள்ளது. திருவாரூர் மாவட்டத்தில், பொதுப்பணித் துறையின் மூலமாக பல்வேறு தடுப்பணைகள் கட்டப்பட்டுள்ளன. நீரொழுங்கிகள் பல இடங்களில் புனரமைக்கப்பட்டன.

நெடுஞ்சாலைத் துறையின் மூலம், திருவாரூர் மாவட்டத்தில் பல்வேறு உயர்மட்டப் பாலங்கள், இரயில்வே கடவின் குறுக்கே புதிய பாலங்கள் கட்டிக் கொடுக்கப்பட்டுள்ளன. திருத்துறைப்பூண்டி நகருக்கு வேளாங்கண்ணி–திருத்துறைப்பூண்டி சாலையில் தொடங்கி, மயிலாடுதுறை – திருத்துறைப்பூண்டி சாலை வரையில் சுமார் 2.5 கிலோ மீட்டர் நீளத்திற்கு ரூ.5 கோடி மதிப்பீட்டில் புறவழிச் சாலை அமைக்க நிலம் கையகப்படுத்தும் பணி முடிவுற்றுள்ளது. திருத்துறைப்பூண்டி நகருக்கு சுமார் 10 கிலோ மீட்டர் நீளத்திற்கு புறவழிச் சாலை, திருவாரூர் நகருக்கு புறவழிச் சாலை, மன்னார்குடி நகருக்கு சுற்றுச்சாலை, வலங்கைமான் நகருக்கு புறவழிச் சாலை ஆகிய சாலைகள் அமைக்க நிலம் கையகப்படுத்தும் பணி நடைபெற்று வருகிறது. கூத்தாநல்லூர் நகருக்கு புறவழிச் சாலை அமைக்க விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கும் பணி நடைபெறுகிறது. நன்னிலம் நகருக்கு புறவழிச் சாலை அமைக்க விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கும் பணிக்கு ரூ.15 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. மயிலாடுதுறை–திருத்துறைப்பூண்டி சாலை ரூ.336.20 கோடி மதிப்பீட்டிலும் தஞ்சாவூர்–மன்னார்குடி–திருத்துறைப்பூண்டி–வேதாரண்யம்–கோடியக்கரை சாலை ரூ.154 கோடி மதிப்பீட்டிலும் கும்பகோணம் மன்னார்குடி–அதிராம்பட்டனம் சாலை ரூ.191 கோடி மதிப்பீட்டிலும், இருவழித்தடச் சாலைகளாக அகலப்படுத்தி மேம்பாடு செய்ய நிலம் கையகப்படுத்தும் பணி நடைபெறுகிறது.

2016–2017ஆம் ஆண்டு ஏற்பட்ட கடும் வறட்சியின் காரணமாக திருவாரூர் மாவட்டத்தில் பாதிக்கப்பட்ட 1,33,316 விவசாயிகளுக்கு ரூ.161.21 கோடி நிவாரண உதவியாக வழங்கப்பட்டுள்ளது. பிரதம மந்திரி பயிர் காப்பீட்டுத் திட்டத்தின் கீழ், கடந்த நான்கு ஆண்டுகளில் திருவாரூர் மாவட்டத்தில் பதிவு செய்திருந்த 5,65,392 விவசாயிகளில், இதுவரை, 3,64,523 விவசாயிகளுக்கு சுமார் 64 சதவிகித இழப்பீட்டுத் தொகையாக ரூ.1,100 கோடி நிவாரணம் வழங்கப்பட்டுள்ளது.

இம்மாவட்டத்தில் ரூ.10 கோடி மதிப்பீட்டில் உணவுப் பூங்கா ஒன்று தோற்றுவிக்கப்படும். மேலும், கிராமங்களில் வாழ்கின்ற ஏழை, எளிய மாணவர்கள் உயர் கல்வி கற்க ஏதுவாக குடவாசல் மற்றும் நன்னிலத்தில் இரண்டு அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளும், வலங்கைமானில் பாலிடெக்னிக் கல்லூரி ஒன்றும், கோட்டூரில் ஐடிஐ ஒன்றும் மாண்புமிகு அம்மா அரசால் உருவாக்கித் தரப்பட்டுள்ளது. திருவாரூர் மாவட்டத்தில் இதுபோன்று பல்வேறு திட்டங்களை செயல்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

இந்தப் பகுதியில் புதிய தொழில் தொடங்க வேண்டுமென்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள். கொரோனா காலத்திலும், தமிழகத்தில் மட்டும் சுமார் ரூ.31,000 கோடி தொழில் முதலீட்டை இந்த 5 மாதங்களில் நாம் ஈர்த்திருக்கின்றோம். இந்தியாவிலேயே, கொரோனா காலத்தில் அதிக முதலீட்டை ஈர்த்த மாநிலம் தமிழ்நாடு தான்.

திருவாரூர் மாவட்டத்தில் வேளாண் தொழில்தான் பிரதானத் தொழிலாக இருக்கிறது. வேறு எந்தத் தொழிலும் பிரதானமாக இல்லை என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். அவரது கோரிக்கை அரசின் பரிசீலனையில் இருந்து கொண்டிருக்கிறது. விவசாயிகள் உற்பத்தி செய்கின்ற விளைபொருட்களை கொண்டு ஒரு புதிய தொழில் இந்த மாவட்டத்தில் துவங்குவதற்கு அரசு முயற்சிக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். எல்லா வகையிலும் இந்த அரசு மக்களுக்கு உதவி செய்து கொண்டிருக்கிறது.

பருவகாலங்களில் பெய்கின்ற மழைநீர் ஒரு சொட்டு கூட வீணாகாமல் தேக்கி வைத்து கோடை காலத்தில் பயன்படுத்தி கொள்ள ஏதுவாக, திருவாரூர் மாவட்டத்தில் ஏரிகள், குளங்கள், ஊரணிகள், குட்டைகள் அனைத்தும் தூர்வாரப்பட்டு இருக்கின்றன. அம்மாவின் அரசு நீர் மேலாண்மைத் திட்டத்திற்கு முன்னுரிமை கொடுத்து திட்டங்களை செயல்படுத்திக் கொண்டிருக்கிறது. அம்மாவின் அரசு பல்வேறு வகையில் திருவாரூர் மாவட்ட மக்களின் வளர்ச்சிக்காக பாடுபட்டுக் கொண்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திருவாரூர் மாவட்ட வளர்ச்சிப் பணிகள்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **எடப்பாடி கே. பழனிசாமி** அவர்கள் 28.08.2020 அன்று திருவாரூர் மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலகத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில், பொதுப்பணித் துறை, கூட்டுறவுத் துறை, எரிசக்தித் துறை, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை, தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறை ஆகிய துறைகளின் சார்பில் ரூ.11.50 கோடி மதிப்பீட்டிலான 14 முடிவுற்ற திட்டப் பணிகளை திறந்து வைத்து, பொதுப்பணித் துறை, நெடுஞ்சாலைத் துறை, எரிசக்தித் துறை, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை ஆகிய துறைகளின் சார்பில் ரூ.22.66 கோடி மதிப்பீட்டில் 23 புதிய திட்டப் பணிகளுக்கு அடிக்கல் நாட்டினார்கள்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **எடப்பாடி கே. பழனிசாமி** அவர்கள் 28.08.2020 அன்று திருவாரூர் மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலகத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில், பயனாளிகளுக்கு அரசு நலத்திட்ட உதவிகளை வழங்கினார்கள். உடன் மாண்புமிகு உணவு மற்றும் நுகர்பொருள் வழங்கல் துறை அமைச்சர் திரு. இரா. காமராஜ், திருவாரூர் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. த. ஆனந்த், இ.ஆ.ப., மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உள்ளனர்.

உடலின் மொழி அறிந்து வாழ்வோம்! உடல் நலத்தைக் காப்போம்!

- உணவை கேட்கும் மொழி – பசி.
- தண்ணீரை கேட்கும் மொழி – தாகம்.
- ஓய்வை கேட்கும் மொழி – சோர்வு, தலைவலி.
- நுரையீரலை தூய்மை செய்யும் மொழி – தும்மல், சளி, இருமல்.
- உச்சி முதல் பாதம் வரை உள்ள கழிவுகளை வெளியேற்றுகிறேன் என்று சொல்லும் மொழி – காய்ச்சல்.
- காய்ச்சலின் போது உணவை உண்ணாதே என்று சொல்லும் மொழி – வாய் கசப்பு மற்றும் பசியின்மை.
- காய்ச்சலின் போது நான் உடலை தூய்மை செய்கிறேன், நீ எந்த வேலையும் செய்யாதே என்று சொல்லும் மொழி – உடல் அசதி.
- எனக்கு செரிமானம் ஆகாத உணவை நான் வெளியேற்றுகிறேன் என்று சொல்லும் மொழி – வாந்தி.
- நான் குடல்களில் உள்ள கழிவுகளை வெளியேற்றுகிறேன் என்று சொல்லும் மொழி – பேதி.
- இரத்தத்தில் உள்ள நச்சை நான் தோல் வழியாக வெளியேற்றுகிறேன் என்று சொல்லும் மொழி – வியர்வை.
- நான் வெப்ப நிலையை சீர் செய்து இரத்தத்தில் உள்ள நச்சை முறிக்கப்போகிறேன் என்று சொல்லும் மொழி – உறக்கம்.
- நான் முறித்த நச்சை இதோ வெளியேற்றுகிறேன் என்று சொல்லும் மொழி – சிறுநீர் கழித்தல்.
- உணவில் உள்ள சத்தை பிரித்து இரத்தத்தில் கலந்து, சக்கையை வெளியேற்றுகிறேன் என்று சொல்லும் மொழி – மலம் கழித்தல்.

எனவே, நாம் அனைவரும் உடலின் மொழி அறிந்து, நமக்கு ஏதேனும் உடல் உபாதைகள் ஏற்பட்டால் அதை உடனே மருந்தோ, மாத்திரையோ கொண்டு தடை செய்ய வேண்டாம். உடல் தன் வேலையை சீராக செய்ய நாம் அனுமதித்தால் தான், நாம் நோய் எனும் பிணியில் இருந்து





விடுபட்டு ஆரோக்கியமாகவும், மகிழ்ச்சியாகவும் வாழ முடியும்.

நாம் வெளி உறுப்புகளுக்கு எவ்வளவு முக்கியத்துவம் கொடுக்கின்றோமோ, அதே அளவிற்கு நம் உள் உறுப்புகளின் உணர்வுகளும், மொழிகளுக்கும் முக்கியத்துவம் கொடுக்க வேண்டும். அப்போதுதான் நாம் ஆரோக்கியமாகவும், அழகான தோற்றத்துடனும் இருக்க முடியும்.

நாம் அனைவரும் முதலில் நம் உடலை நேசிப்போம், நம் உடல் உள் உறுப்புகளை நேசிப்போம், நாம் நம்மை நேசிப்போம்.

– தாவரங்கள் பேசுகிறேன் என்ற நூலிலிருந்து....

மின்னணு உற்பத்தியில் தமிழ்நாடு இந்தியாவில் முன்னணி மாநிலமாக உருவெடுத்து வருகிறது

மின்னணு உற்பத்தியில், தமிழ்நாடு இந்தியாவின் முன்னணி மையமாக உருவெடுத்து வருகிறது. இந்தியாவின் மொத்த மின்னணு உற்பத்தியில், தமிழ்நாட்டின் பங்களிப்பு 16% ஆகும். மேலும், கணினி, மின்னணுவியல் மற்றும் ஒளியியல் பொருட்கள் உற்பத்தியில், அகில இந்திய அளவில், தமிழ்நாடு இரண்டாவது இடத்தில் உள்ளது.

கைப்பேசி உற்பத்தி, கணினி மற்றும் அதன் புற உபகரணங்கள், தொழில்துறைக்குத் தேவையான மின்னணு பொருட்கள், நுகர்வோர் மின்னணு மற்றும் மின்னணு உதிரிபாகங்கள் போன்ற பொருட்களின் உற்பத்திக்கு வலுவான தளமாக தமிழ்நாடு விளங்குகிறது. ஸ்ரீபெரும்புதூரில் இருந்து ஒரகடம் வரையில் உள்ள மின்னணுவியல் உற்பத்தி தடத்தில், சாம்சங், Flextronics, DELL, பாக்ஸ்கான், BYD, சால்காம்ப், சான்மினா, நோக்கியா சீமென்ஸ் நெட்வொர்க்ஸ் போன்ற முக்கிய நிறுவனங்கள் தங்களது உற்பத்தித் திட்டங்களை நிறுவி உள்ளன. தற்போது உள்ள முதன்மை நிலையை மேம்படுத்திக் கொள்ளும் வகையில் மின்னணுவியல் துறையில் புதிய திட்டங்களை ஈர்த்திடவும், இதுவரை இந்தியாவில் இல்லாத செமி கண்டக்டர் புனையமைப்பு (Semi conductor Fabrication) மற்றும் மின்னணு பழுது

> மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **எடப்பாடி கே. பழனிசாமி** அவர்கள் 07.09.2020 அன்று தலைமைச் செயலகத்தில், "தமிழ்நாடு மின்னணுவியல் வன்பொருள் உற்பத்திக் கொள்கை–2020"ஐ வெளியிட்டார்கள்.

பார்த்திடும் பூங்காக்கள் துறைகளில், தமிழ்நாடு தடம் பதித்திடவும் "தமிழ்நாடு மின்னணுவியல் வன்பொருள் உற்பத்திக் கொள்கை – 2020" அவசியம் ஆகும்.

மின்னணு வன்பொருள் உற்பத்திக் கொள்கையின் நோக்கங்கள்

❖ 2025ஆம் ஆண்டுக்குள், தமிழ்நாட்டின் மின்னணுவியல் துறையின் உற்பத்தியினை, 100 பில்லியன் அமெரிக்க டாலர்களாக உயர்த்துதல்;

❖ இந்தியாவின் மொத்த மின்னணு ஏற்றுமதியில், தமிழ்நாட்டின் பங்களிப்பினை 25% ஆக உயர்த்துதல்;

❖ செமிகண்டக்டர் புனையமைப்பு துறையினை தமிழ்நாட்டில் வளர்த்தல்;

❖ 2024ஆம் ஆண்டுக்குள், தமிழ்நாட்டில் மின்னணு வன்பொருள் உற்பத்தித் துறையின் மனிதவளத் தேவையைப் பூர்த்தி செய்யும் வகையில், ஒரு இலட்சம் நபர்களுக்கு திறன் பயிற்சி அளித்தல்;

❖ கைப்பேசிகள், LED தயாரிப்புகள், Fabless சிப் வடிவமைப்புகள், PCB க்கள், Solar Photovoltaic செல்கள், மருத்துவ மின்னணுவியல் மற்றும் மோட்டார் வாகன மின்னணுவியல் போன்ற முக்கிய துறைகளில் தமிழ்நாட்டில் செய்யப்படும் மதிப்புக் கூட்ட அளவினை கணிசமாக அதிகரித்தல்;

❖ மேற்கூறிய நோக்கங்களை அடைவதற்கு ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி திட்டங்களை மேற்கொண்டு ஆராய்ச்சி மற்றும் புத்தாக்கச் சூழலை மேம்படுத்துதல்;

❖ மின்னணு அமைப்பு, வடிவமைப்பு மற்றும் உற்பத்தி (ESDM) புத்தொழில் (start-ups) தொழிலகங்களுக்கான உகந்த சூழலினை வளர்த்தல்; குறிப்பாக வடிவமைப்பு, மேம்பாடு மற்றும் உற்பத்தி ஆகியவற்றில் ஈடுபட்டுள்ள புத்தாக்கத் தொழில்நுட்ப நிறுவனங்களின் வளர்ச்சியினை ஊக்குவித்தல்;

மின்னணு வன்பொருள் உற்பத்திக் கொள்கையின் முக்கிய அம்சங்கள்

இந்த மின்னணு வன்பொருள் உற்பத்திக் கொள்கை, மின்னணு அமைப்பு வடிவமைப்பு மற்றும் உற்பத்தித் துறையில், முதலீடு செய்ய முனைவோருக்கு, கீழ்க்கண்ட நிதிச் சலுகைகளை வழங்குகிறது:–

❖ முதலீட்டுத் தொகையில் 30% வரை மூலதன மானியம்.

❖ நில குத்தகைக்கான மானியம் – தொழில் ரீதியாக பின் தங்கிய மாவட்டங்களில் தொழில் திட்டங்களை செயல்படுத்துபவர்களுக்கு சில நிபந்தனைகளுக்கு உட்பட்டு நிலம் வாங்கும் செலவில் 50% மானியம்.

❖ நிதி நிறுவனங்களில் இருந்து பெறப்படும் காலக் கடன்களுக்கு (Term loans) அதிகபட்சமாக 5% வரை வட்டி மானியம்.

❖ மின்னணு அமைப்பு வடிவமைப்பு மற்றும் உற்பத்தித் தொழிலகங்கள் வாங்கும் நிலங்களுக்கு, 50% முதல் 100% வரை முத்திரைத் தீர்வைகளுக்கு விலக்களிப்பு.

❖ முதன்முறையாக பணியமர்த்தப்படும் பணியாளர்களுக்கு, 6 மாத காலங்களுக்கு, மாதம் ஒன்றுக்கு ரூ.4,000 வீதம் பயிற்சி மானியம், பெண் ஊழியர்களுக்கு, 6 மாத காலங்களுக்கு, மாதம் ஒன்றுக்கு ரூ.6,000 வீதம் பயிற்சி மானியம்.

❖ 5 ஆண்டுகளுக்கு மின்சார வரிவிலக்கு.

❖ அறிவுசார் மூலதனம் மற்றும் மேம்படுத்தப்பட்ட தரச் சான்றளிப்பு மானியம் – காப்புரிமை விண்ணப்பங்களுக்கு, ரூ.50 இலட்சம் வரை 50% மானியம். மேலும், தரச்சான்றிதழ்களுக்கு, ஒரு நிறுவனத்திற்கு ரூ.1 கோடி வரை, 50% மானியம்.

❖ சுற்றுச்சூழல் பாதுகாப்பு உள்கட்டமைப்பு மானியம் மற்றும் நடைமுறையில் உள்ள தொழில் கொள்கை 2014இன் படி இதர சலுகைகள்.

❖ பெரிய முதலீடுகள் அல்லது, அதிகமதிப்பு கூட்டல் / வேலைவாய்ப்பு / சிறந்த தொழில் சூழலை உருவாக்குவதற்கான சாத்தியக் கூறுகளைக் கொண்ட முதலீடுகளுக்கு, சிறப்பு தொகுப்பு சலுகை வழங்கப்படும்.

பிற சலுகைகள்

❖ ஒவ்வொரு EMC–யிலும் தனியார் துறையுடன் இணைந்து, ஒரு திறன் மற்றும் பயிற்சி மையம் நிறுவப்படும்.





ஒரு இலட்சம் நபர்களுக்கும் மேற்பட்டவர்களுக்கு திறன் பயிற்சி அளிக்கப்படும்.

❖ மின்னணு வடிவமைப்பு மற்றும் உற்பத்தி மையங்களின் அருகில், தொழிலகங்களில் பணிபுரிவோருக்கு குடியிருப்பு திட்டங்களை உருவாக்குதல்.

❖ தொழில் முனைவோர் மேம்பாட்டு நிறுவனம் மூலம், புத்தாக்க மானியங்கள், புத்தொழில் மானியங்கள் மற்றும் விதை மூலதனம் போன்ற சலுகைகள் மூலம், புத்தொழில் (start-ups) நிறுவனங்களுக்கு ஆதரவளித்தல்.

❖ ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு ஆதரவு – இரட்டை நகர ஒப்பந்தங்கள், பல்கலைக்கழகங்கள் மற்றும் தொழில் நிறுவனங்களுடன் இணைந்து ஆராய்ச்சி மற்றும் மேம்பாடு, பொது வசதி மையங்கள் மற்றும் மின்னணு சோதனை மையங்களை விரிவாக்குதல்.

❖ பொருத்தமான சூழலை உருவாக்கி, Fab துறையை ஊக்குவிக்க ஒரு பணிக்குழு அமைக்கப்படும். Fab துறையில் முதலீடு செய்வோர்க்கு சிறப்பு தொகுப்புச் சலுகைகள் வழங்கப்படும்.

❖ மின்னணு பழுது பார்க்கும் பூங்காக்கள் மற்றும் மின் கழிவு மேலாண்மைக்கான வசதிகள் அமைக்கப்படும்.

படமும் / செய்தியும்

இராமசாமி படையாட்சியார் அவர்களின் 103ஆவது பிறந்த நாள் விழா

தமிழ்நாடு அரசின் சார்பில், சென்னை, கிண்டி, ஹால்டா அருகே 16.09.2020 அன்று, இராமசாமி படையாட்சியார் அவர்களின் 103ஆவது பிறந்தநாளையொட்டி அன்னாரது திருவுருவச் சிலைக்கு அருகில் வைக்கப்பட்ட திருவுருவப் படத்திற்கு மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள், சட்டமன்ற உறுப்பினர்கள், தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழகத் தலைவர், தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அரசு செயலர் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் ஆகியோர் மலர் தூவி மரியாதை செலுத்தினார்கள்.

வேளாண் பெருமக்களுக்கு பாதுகாப்பு அளிக்கும் விதமாக, டெல்டா மாவட்டங்களை பாதுகாக்கப்பட்ட வேளாண் மண்டலமாக மாண்புமிகு அம்மாவின் அரசு அறிவித்துள்ளது

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் தலைமையில் தஞ்சாவூர் மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலகத்தில், 28.08.2020 அன்று மாவட்ட வளர்ச்சித் திட்டப் பணிகள் மற்றும் கொரோனா நோய்த் தடுப்புப் பணிகள் குறித்து நடைபெற்ற ஆய்வுக் கூட்டத்தில் ஆற்றிய உரையிலிருந்து...

தஞ்சாவூர் மாவட்டத்தில் 2,227 காய்ச்சல் முகாம்கள் நடத்தப்பட்டு, அதில் 1,04,658 நபர்கள் கலந்து கொண்டுள்ளனர். இதன்மூலம், நோய் அறிகுறிகள் உள்ளவர்களைக் கண்டறிந்து, பரிசோதனை செய்து, தொற்றுள்ளவர்களுக்கு தகுந்த சிகிச்சை அளிக்கப்பட்டு குணப்படுத்தி வருகிறது.

கும்பகோணம் அரசு மாவட்ட மருத்துவமனை வளாகத்தில் மகப்பேறு மற்றும் குழந்தைகள் நலக் கட்டடம் கட்டப்பட்டு வருகிறது. பூதலூர் அரசு மருத்துவமனை வளாகத்தில் உள்நோயாளிகள் பிரிவு கட்டடம் ரூ.45 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்டு, பயன்பாட்டிற்கு தயார் நிலையில் உள்ளது. பட்டுக்கோட்டை அரசு மருத்துவமனை வளாகத்தில் மகப்பேறு மற்றும் குழந்தைகள் நல மையக் கட்டடம் ரூ.4 கோடி செலவில் கட்டி முடிக்கப்பட்டுள்ளது.

தஞ்சாவூர் மாவட்டத்தில் முதலமைச்சரின் சிறப்பு குறை தீர்க்கும் திட்டத்தின் மூலமாக, பெறப்பட்ட 33,830 மனுக்களில் 21,362 மனுக்கள் எடுத்துக் கொள்ளப்பட்டு, தீர்வு காணப்பட்டுள்ளன. 2019–2020ஆம் ஆண்டில் 6,179 நபர்களுக்கு வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்கப்பட்டு இருக்கின்றன.

இந்த ஆண்டு, ஊரக வளர்ச்சித் துறையின் மூலமாக, வாய்க்கால்கள் 9,053 கிலோ மீட்டர் நீளத்தில் ரூ.52 கோடி மதிப்பீட்டில் தூர்வாருகின்ற பணிகள் முடிக்கப்பட்டுள்ளன.

தஞ்சாவூர் மாவட்டத்தில், பசுமை வீடுகள் திட்டத்தின் கீழ், கடந்த நான்கு ஆண்டுகளில் 3,445 பணிகள் தொடங்கப்பட்டு, 2,737 பணிகள் நிறைவு பெற்றுள்ளன. எஞ்சிய பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. பிரதம மந்திரி குடியிருப்புத் திட்டத்தின் மூலம், கடந்த 4 ஆண்டுகளில் 25,728 பணிகள் எடுத்துக் கொள்ளப்பட்டு, 15,437 பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. பல பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.

கும்பகோணம் ஒன்றியத்திற்குட்பட்ட 134 குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர் திட்டத்திற்கு ரூ.110 கோடி மதிப்பீட்டில் ஒப்பந்தப்புள்ளி பரிசீலனையில் உள்ளது. கும்பகோணம், திருப்பனந்தாள், திருவிடைமருதூர் ஒன்றியங்களுக்குட்பட்ட 67 குடியிருப்புகளுக்கும், பாபநாசம் மற்றும் அம்மாப்பேட்டை ஒன்றியங்களுக்குட்பட்ட 252 குடியிருப்புகளுக்கும் கூட்டுக் குடிநீர் வழங்கும் திட்டத்திற்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டு, பணிகள் நடைபெற்று வருகின்றன.

தஞ்சாவூர் மாநகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் சுமார் ரூ.943 கோடி மதிப்பீட்டில் 48 எண்ணிக்கையிலான சீர்மிகு நகரத் திட்டப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. தஞ்சாவூர் மாநகராட்சிக்கு புது அலுவலகக் கட்டடம் ரூ.6.50 கோடியில் கட்டி முடிக்கப்பட்டு 28.05.2020 அன்று என்னால் திறந்து வைக்கப்பட்டது. தஞ்சாவூர் மாநகராட்சியில் பாதாள சாக்கடைத் திட்டம் ரூ.70 கோடி மதிப்பீட்டில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இப்பணி 2021 ஜனவரி மாதம் நிறைவு பெறும். தஞ்சாவூர் மாநகராட்சி கொள்ளிடம் ஆற்றில் புதிய குடிநீர் ஆதாரத்தை உருவாக்குதல், மேலும் பழுதடைந்த குடிநீர் பிரதானம் மற்றும் பகிர்மானக் குழாய்களை சீரமைக்கும் பணி ரூ.191 கோடி மதிப்பீட்டில் நடைபெற்று வருகிறது. இதன்மூலம் எதிர்கால மக்கள்தொகைக்கு ஏற்ப குடிநீர் வழங்கிடும் திட்டம் 19.02.2021இல் நிறைவு பெறும்.

மாண்புமிகு அம்மா அவர்கள் இருந்த காலம் முதல் இன்று வரை, மாண்புமிகு அம்மாவின் அரசு தஞ்சாவூர் மாவட்டத்திற்கு பல்வேறு கல்லூரிகளைவழங்கியுள்ளது.பேராவூரணியில் அரசுகலைமற்றும் அறிவியல் கல்லூரியும், செங்கிப்பட்டியில் அரசு பொறியியல் கல்லூரியும், பாபநாசத்தில் பாலிடெக்னிக் கல்லூரியும், ஈச்சங்கோட்டையில் வேளாண் கல்லூரியும் அமைத்துக் கொடுத்துள்ளது. ஒரத்தநாட்டில் கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையமும் தொடங்கப்பட்டுள்ளது. திருபுவனத்தில் ஐடிஐ திறக்கப்பட்டுள்ளது. அதோடு, மாண்புமிகு அம்மா அவர்கள் காலத்தில் தஞ்சை மாநகராட்சியாக உருவாக்கப்பட்டது.

வேளாண் பெருமக்களுக்கு, பயிர் காப்பீட்டுத் திட்டம் மூலம் அதிகளவில் இழப்பீட்டுத் தொகை பெற்றுத் தந்துள்ளோம். 2016–2017இல் கடுமையான வறட்சியால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு நிவாரணம் வழங்கப்பட்டுள்ளது.

விவசாயப் பெருமக்கள் நீண்ட, நெடிய காலமாக போராடி வந்ததற்கு வெற்றிகிட்டும் விதமாக, வேளாண் பெருமக்களுக்கு பாதுகாப்பு அளிக்கும் விதமாக, டெல்டா மாவட்டங்களை பாதுகாக்கப்பட்ட வேளாண் மண்டலமாக அம்மாவின் அரசு அறிவித்துள்ளது. இது ஒரு வரலாற்றுச் சாதனையாகும். இப்பகுதி மக்கள் 50 ஆண்டு காலமாகப் போராடி வந்த நிலையில், காவேரி நதிநீர் பிரச்சினையில் நடுவர் மன்ற தீர்ப்பை மத்திய அரசிதழில் வெளியிடச் செய்தது மாண்புமிகு அம்மா அவர்கள் தான். அதனைத் தொடர்ந்து, அம்மாவின் அரசும், அம்மா அவர்களால் உச்சநீதிமன்றத்தில் தொடுத்த வழக்கை சட்ட ரீதியாகச் சந்தித்து, விவசாய பெருமக்களுக்கு வயிற்றில் பால்வார்க்கும் விதமாக நம் உரிமையை பெற்று தந்துள்ளோம். நமக்கு கிடைக்க வேண்டிய பங்கு நீரை சட்டத்தின் வாயிலாகப் பெற்றதும் மாண்புமிகு அம்மாவின் அரசு தான்.

உலகில் அடக்க முடியாத அசுரன் அலட்சியம்,
அதை அடக்கினால் வெற்றி நிச்சயம்.

தஞ்சாவூர் மாவட்ட வளர்ச்சிப் பணிகள்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **எடப்பாடி கே. பழனிசாமி** அவர்கள் 28.08.2020 அன்று தஞ்சாவூர் மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலகத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில், வேளாண்மைத் துறை, கால்நடை பராமரிப்புத் துறை, பதிவுத் துறை, வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறை, பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை, காவல்துறை, நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நெடுஞ்சாலைத் துறை, உயர்கல்வித் துறை, மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை ஆகிய துறைகளின் சார்பில் ரூ.39.59 கோடி மதிப்பீட்டிலான 36 முடிவுற்ற திட்டப் பணிகளை திறந்து வைத்து, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை, பள்ளிக்கல்வித் துறை, மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறை, கால்நடை பராமரிப்புத் துறை, கலை பண்பாட்டுத் துறை, பால்வளத் துறை ஆகிய துறைகளின் சார்பில் ரூ.71.27 கோடி மதிப்பீட்டில் 11 புதிய திட்டப் பணிகளுக்கு அடிக்கல் நாட்டினார்கள்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **எடப்பாடி கே. பழனிசாமி** அவர்கள் 28.08.2020 அன்று தஞ்சாவூர் மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலகத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில், பயனாளிகளுக்கு அரசு நலத்திட்ட உதவிகளை வழங்கினார்கள். உடன் மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் திரு. இரா. துரைக்கண்ணு, நாடாளுமன்ற மற்றும் சட்டமன்ற உறுப்பினர்கள், தஞ்சாவூர் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. ம. கோவிந்தராவ், இ.ஆ.ப., மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உள்ளனர்.

இந்து சமய அறநிலையத் துறை சார்பில் ரூ.21.63 கோடி மதிப்பீட்டில் நவீன திருமண மண்டபம் மற்றும் 3 அன்னதானக் கூடங்கள்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **எடப்பாடி கே. பழனிசாமி** அவர்கள் 14.08.2020 அன்று தலைமைச் செயலகத்தில், காணொலிக் காட்சி மூலமாக திறந்து வைத்தார்கள்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் 14.08.2020 அன்று தலைமைச் செயலகத்தில், இந்து சமய அறநிலையத் துறை சார்பில் சென்னை மாவட்டம், திருவான்மியூர், அருள்மிகு மருந்தீசுவரர் திருக்கோயிலுக்கு சொந்தமான இடத்தில் ரூ.20.10 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள நவீன திருமண மண்டபத்தை காணொலிக் காட்சி (Video Conferencing) மூலமாக திறந்து வைத்தார்கள். மேலும், கடலூர் மாவட்டம், திட்டக்குடி வட்டம், பெண்ணாடம், அருள்மிகு பிரளயகாலேசுவரர் திருக்கோயில், திருவள்ளூர் மாவட்டம், திருத்தணி வட்டம், ஆற்காடு குப்பம், அருள்மிகு சோளீஸ்வரர்சுவாமி திருக்கோயில் மற்றும் விருதுநகர் மாவட்டம், ஸ்ரீவில்லிபுத்தூர், மடவார்வளாகம், அருள்மிகு வைத்தியநாதசுவாமி திருக்கோயில் ஆகிய திருக்கோயில்களில் ரூ.1.53 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள அன்னதானக் கூடங்களையும் திறந்து வைத்தார்கள்.

தமிழ் பண்பாட்டின் பெட்டகமாகவும், ஆன்மீகத்தின் இருப்பிடமாகவும், கலைத்திறனின் நிலைக்களமாகவும் விளங்குகின்ற திருக்கோயில்களின் சொத்துக்களை பாதுகாத்து பராமரிப்பது, அன்றாடப் பூஜைகள் தங்குதடையின்றி நடப்பதை உறுதி செய்வது, பக்தர்களுக்குத் தேவையான வசதிகளை செய்து கொடுப்பது போன்ற பணிகளை, மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் வழியில் செயல்படும் தமிழ்நாடு அரசு, இந்து சமய அறநிலையத் துறை மூலமாக செயல்படுத்தி வருகிறது.

அந்த வகையில், இந்து சமய அறநிலையத் துறை சார்பில், சென்னை மாவட்டம், திருவான்மியூர், அருள்மிகு மருந்தீசுவரர் திருக்கோயிலுக்கு சொந்தமான இடத்தில் ரூ.20.10 கோடி மதிப்பீட்டில் 84,592 சதுர அடி பரப்பளவில் கட்டப்பட்டுள்ள நவீன திருமண மண்டபத்தை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் காணொலிக் காட்சி மூலமாக திறந்து வைத்தார்கள். இந்நவீன திருமண மண்டபம், 1,388 இருக்கைகள் கொண்ட திருமணக் கூடம், 552 இருக்கைகள் கொண்ட உணவருந்தும் கூடம், குடிநீர் மற்றும் கழிப்பறை வசதிகள், வாகனங்கள்

நிறுத்துமிடம் உள்ளிட்ட அனைத்து வசதிகளுடன் கட்டப்பட்டுள்ளது.

மேலும், கடலூர் மாவட்டம், திட்டக்குடி வட்டம், பெண்ணாடம், அருள்மிகு பிரளயகாலேசுவரர் திருக்கோயிலில் 2,464 சதுர அடி பரப்பளவில், ரூ.50 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள அன்னதானக் கூடம்; திருவள்ளூர் மாவட்டம், திருத்தணி, அருள்மிகு சுப்ரமணியசுவாமி திருக்கோயிலின் உபகோயிலான ஆற்காடுகுப்பம், அருள்மிகு சோளீஸ்வரசுவாமி திருக்கோயிலில் 2,110 சதுர அடி பரப்பளவில், ரூ.53 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள அன்னதானக் கூடம் மற்றும் விருதுநகர் மாவட்டம், ஸ்ரீவில்லிபுத்தூர், மடவார்வளாகம், அருள்மிகு வைத்தியநாதசுவாமி திருக்கோயிலில் 2,016 சதுர அடி பரப்பளவில் ரூ.50 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள அன்னதானக் கூடம்;

என மொத்தம் ரூ.21.63 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள நவீன திருமண மண்டபம் மற்றும் 3 அன்னதானக் கூடங்களை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் திறந்து வைத்தார்கள்.

அதனைத் தொடர்ந்து, இந்து சமய அறநிலையத் துறையில், காலியாக உள்ள இளநிலை உதவியாளர் பணியிடங்களுக்கு தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் மூலமாக தெரிவு செய்யப்பட்ட 59 நபர்களுக்கு பணி நியமன ஆணைகளை வழங்கிடும் அடையாளமாக, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் 5 நபர்களுக்கு பணி நியமன ஆணைகளை வழங்கினார்கள்.

இதுவும் கடந்துபோகும்

நம்முடைய இதுநாள் வரை வாழ்க்கையை திரும்பிப் பார்த்தால் இந்த வாக்கியத்தின் மகத்தான உண்மையை உணர முடியும். எத்தனை வெற்றிகள், எத்தனை தோல்விகள், எத்தனை மகிழ்ச்சிகள், எத்தனை துக்கங்கள் என, எல்லாம் வந்து சிறிது காலம் தங்கி கடந்து போயிருக்கின்றன. வந்ததெல்லாம் நம்மை விட்டுப் போவதால் நம்முடையதல்ல என்பது உறுதியாகிறதல்லவா ? நாம் வெறும் பார்வையாளர்களாகவே இருக்கிறோம்.

எத்தனை நண்பர்கள், எத்தனை பகைவர்கள், எத்தனை உறவுகள் நம் வாழ்வில் முக்கிய அங்கம் வகித்து, வெறும் நினைவுகளை மட்டும் நம்மிடம் விட்டு விட்டுப் போயிருக்கிறார்கள் ? வாழ்வில் வந்ததெல்லாம் நம்மைக் கடந்து சென்று கொண்டு தானே இருக்கின்றன. ஒரு விதத்தில் பார்த்தால், நாம் தனியர்கள்தான்.

இயற்கையின் விதியே இதுதான் என்று உளமார உணர்ந்து தெளியும் போது கிடைக்கும் அமைதி சாதாரணமானதல்ல. அந்த அமைதியை மனதில் நிரந்தரமாக்கிக் கொள்ளுங்கள்.

வெற்றிகள் கிடைக்கும்போது “இதுவும் கடந்து போகும்” என்பதை நினைவில் கொள்ளுங்கள். கர்வம் தலை தூக்காது. தோல்விகள் தழுவும் போது “இதுவும் கடந்து போகும்” என்பதை நினைவில் கொள்ளுங்கள். சோர்ந்து விட மாட்டோம்.

நல்ல மனிதர்களும், “நண்பர்களும் உங்கள் வாழ்க்கையில் வரும் போது இதுவும் கடந்து போகும்” என்பதை நினைவில் கொள்ளுங்கள்.

இருக்கும்போது அவர்களை கௌரவிப்பீர்கள். அவர்கள் விலகும் போது பெரிதாக பாதிக்கப்படாமல் இருப்பீர்கள். தீய மனிதர்களும், பகைவர்களும் உங்கள் வாழ்வில் வரும் போது “இதுவும் கடந்து போகும்” என்பதை நினைவில் கொள்ளுங்கள். தானாகப் பொறுமை வரக் காண்பீர்கள். பெரிதாக மனஅமைதியை இழக்க மாட்டீர்கள். நெற்றி சுருங்கும் போதெல்லாம் “இதுவும் கடந்து போகும்” என்பதை நினைவில் கொள்ளுங்கள். சுருக்கம் போய் முகத்தில் புன்னகை தவழக் காண்பீர்கள்.

எண்ணித் துணிந்தால், எதுவும் தடையல்ல என்பதற்கு சான்றாக திகழ்கிறார் விளையாட்டு வீரர் திரு. மாரியப்பன் அவர்கள்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
திரு. **எடப்பாடி கே. பழனிசாமி** அவர்களின் வாழ்த்துச் செய்தி – 21.08.2020

மாண்புமிகு அம்மாவின் அரசு, தமிழ்நாட்டைச் சேர்ந்த திறமை மிக்க விளையாட்டு வீரர்களை கண்டறிந்து, அவர்களுக்கு சர்வதேச தரத்தில் அமைக்கப்பட்டுள்ள விளையாட்டு அரங்கங்களில் பயிற்சி அளித்து, உயரிய ஊக்கத் தொகை வழங்கி விளையாட்டு வீரர்களை ஊக்குவிக்க பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருகின்றது.

2016இல் பாரா ஒலிம்பிக்ஸ் உயரம் தாண்டுதல் போட்டியில் தங்கப் பதக்கம், 2018இல் ஆசிய பாரா விளையாட்டுப் போட்டிகளில் வெண்கல பதக்கம் மற்றும் 2019இல் உலக பாரா சாம்பியன் ஷிப் போட்டிகளில் வெண்கல பதக்கம் வென்று இந்திய நாட்டிற்கும், தமிழ்நாட்டிற்கும் பெருமை சேர்த்த திரு. T. மாரியப்பன் அவர்களுக்கு மத்திய அரசு "பத்மஸ்ரீ விருது" மற்றும் "அர்ஜுனா விருது" ஆகியவற்றை வழங்கி கௌரவித்தது. தமிழ்நாடு அரசும் திரு. மாரியப்பன் அவர்களுக்கு ரூ.2 கோடி உயரிய ஊக்கத் தொகை அளித்தது.

தற்போது, மத்திய அரசு திரு. மாரியப்பன் அவர்களுக்கு "இராஜீவ் காந்தி கேல் ரத்னா விருது" அறிவித்தது நம் அனைவருக்கும் மகிழ்ச்சியான செய்தி ஆகும். இத்தருணத்தில் திரு. மாரியப்பன் அவர்களுக்கு என் சார்பாகவும், தமிழ்நாட்டு மக்கள் சார்பாகவும் மனமார்ந்த நல்வாழ்த்துகளையும் பாராட்டுதல்களையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

"தெய்வத்தான் ஆகாது எனினும் முயற்சிதன்
மெய்வருத்தக் கூலி தரும்"

என்ற திருவள்ளுவரின் வாக்கிற்கேற்ப திரு.மாரியப்பன் அவர்களின் மன உறுதியும், விடா முயற்சியும் அவரது வெற்றிக்கு வித்திட்டது. எண்ணித் துணிந்தால், எதுவும் தடையல்ல என்பதற்கு சான்றாக திகழும் திரு. மாரியப்பன் அவர்கள், இடையூறுகளைத் தாண்டி, சாதனை படைக்க விரும்பும் அனைவருக்கும் ஒரு முன்னுதாரணமாக திகழ்கிறார்.

திரு. மாரியப்பன் அவர்கள் மேலும் பல சாதனைகள் புரிந்து தமிழ்நாட்டிற்கும் இந்திய திருநாட்டிற்கும் பெருமை சேர்த்திட வேண்டும் என மனமார வாழ்த்துகிறேன்.

அறிவாளியாக இருந்தால்
குழப்பம் வராது
துணிவுள்ளவனாக இருந்தால்
அச்சம் வராது.



மாற்றம் முதலில் நம்மிடமிருந்து துவங்க வேண்டும்

நம்மிடம் உள்ள ஏகப்பட்ட குறைகளை மறைத்துக் கொண்டு மற்றவர்களுக்கு அறிவுரை சொல்கின்றோம். இதனால் சண்டைகளும், சச்சரவுகளுக்கு வழி வகுக்கும். எனவே, முதலில் நாம் திருந்த தயாராக இருக்க வேண்டும். பிறகு, மற்றவர்களை திருத்த முற்பட வேண்டும்.

ஒரு நாட்டில் ஒரு மன்னன் இருந்தான். அவன் கடுமையான தலைவலியால் அவதிப்பட்டுக் கொண்டிருந்தான். பல ஊர்களிலிருந்து மிகப்பெரிய வைத்தியர்கள் வந்து பார்த்தும், நிறைய மருந்துகள் சாப்பிட்டும் அந்தத் தலைவலி குணமாகவில்லை.

ஒருநாள் அந்த ஊருக்கு ஒரு அறிஞர் வந்தார், அவருக்கு மருத்துவமும் பார்க்கத் தெரியும். அவர் மன்னரை சோதித்துவிட்டு அவருக்கு ஏற்பட்ட தலைவலிக்கு, கண்களில் இருக்கும் ஒரு நோயே காரணம் என்று கூறினார்.

அந்தக் கண்களை குணப்படுத்த ஒரேயொரு வழிதான் உண்டு என்று கூறினார். அது, அரசன் பச்சை நிறத்தைத் தவிர வேறெதையும் காணக்கூடாது என்று கூறிவிட்டுச் சென்றார்.

அரசன் முதலில் தன் வீட்டில் இருக்கும் அனைத்தையும் பச்சையாக மாற்றினான், தலைவலி குணமாகிவிட்டது. அந்த அறிஞர் கூறியது சரிதான் என்று வீட்டை விட்டு வெளியே போகத் தொடங்கினான். வெளியே போனால், இயற்கை எல்லா வண்ணங்களையும் அள்ளித் தெளித்திருந்தது. ஆனால், அவற்றைத்தான் அவன் பார்க்கக்கூடாதே என்று நிறையப் பச்சை நிறப் பூச்சுகளையும் தூரிகைகளையும் கொடுத்து சில ஆட்களை நியமித்தான்.

அவன் போகும் வழியில் இருக்கும் ஆடு, மாடு, மனிதர், குடிசை, வண்டி, மேசை, நாற்காலி எல்லாவற்றுக்கும் பச்சை நிறத்தை அடிப்பது அவர்களுடைய வேலை. அவர்களும் மன்னர் கூறியவாறே செய்து வந்தார்கள்.

சில மாதம் கழித்து மீண்டும் அந்த அறிஞர் அதே ஊருக்கு வந்தார். வேலையாட்கள் அவரைத் தடுத்து நிறுத்தி, அவர் மீதும் பச்சை நிறம் பூசுவதற்காகப் போனார்கள்.

அவருக்கு வியப்பாகி விட்டது. காரணம் கேட்டார். அவர்கள் 'தங்கள் அரசனின் கட்டளை இது' என்று கூறினார்கள், அறிஞர் அதற்கு, "என்னை உங்கள் மன்னரிடம் அழைத்துச் செல்லுங்கள்" என்றார்.

மன்னருக்கு தன் நோயினை குணப்படுத்தியவர் மீண்டும் வந்ததைக் கண்டு ஒரே மகிழ்ச்சி. வணங்கி அவரை வரவேற்று விருந்தோம்பினான்.

"இந்த ஊரில் அனைத்திற்கும் ஏன் பச்சை நிறம் அடிக்கிறீர்கள் ?" என்று அவர் கேட்டார்.

"அய்யா, நீங்கள் கூறியதைத் தான் நான் செய்கிறேன்" என்றான் அவன் மிகப் பணிவோடு.

"நான் என்ன சொன்னேன் ?" என்றார் அவர்.

"பச்சை நிறத்தை விடுத்து வேறெவற்றையும் நான் காணக்கூடாது என்று கூறினீர்களே அய்யா" என்றான்.

அரசே! நீங்கள் அதற்கு இவ்வளவு பணத்தைச் செலவழித்திருக்க வேண்டாம், ஒரு பச்சை நிறக் கண்ணாடி வாங்கி அணிந்திருந்தால், உன்னைச் சுற்றியிருக்கும் பொருள்களெல்லாம் பிழைத்திருக்குமே, உன் பணமும் வீணாகி இருக்காது, உன்னால் இந்த உலகம் முழுமைக்கும் பச்சை நிறம் பூச முடியுமா ?" என்று கேட்டார் அந்த அறிஞர்.

நம்மில் பலரும் இந்தக் கதையில் வரும் அரசனைப் போலத்தான் இருக்கின்றோம்.

ஆம் நண்பர்களே...!

உலகில் உள்ளவர்களை திருத்த வேண்டுமானால் முதலில் நாம் திருந்த வேண்டும்.

மாற்றம் முதலில் நம்மிடம் இருந்து துவங்க வேண்டும்.

திண்டுக்கல்

மாண்புமிகு வனத்துறை அமைச்சர் திரு.திண்டுக்கல் சி. சீனிவாசன் அவர்கள், திண்டுக்கல் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் 25 மாற்றுத் திறனாளிகளுக்கு இணைப்புச் சக்கரம் பொருத்தப்பட்ட பெட்ரோல் ஸ்கூட்டர்களை வழங்கினார்.

ஈரோடு

மாண்புமிகு பள்ளிக்கல்வி, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் திரு.கே.ஏ. செங்கோட்டையன் அவர்கள், ஈரோடு மாவட்டம் கோபிசெட்டிபாளையம் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட கொளப்பலூர் மற்றும் நம்பியூர் ஆகிய பகுதிகளில் உள்ள பயனாளிகளுக்கு விலையில்லா அசீல் இன நாட்டுக் கோழி குஞ்சுகளை வழங்கினார்.

நாமக்கல்

மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் திரு.பி. தங்கமணி அவர்கள், நாமக்கல் மாவட்டம், குமாரபாளையம் வட்டம், மோடமங்கலம் ஊராட்சியில் நடைபெற்ற நிகழ்ச்சியில் வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறையின் சார்பில் பயனாளிகளுக்கு இலவச வீட்டுமனை பட்டாக்களை வழங்கினார்.

கோயம்புத்தூர்

மாண்புமிகு நகராட்சி நிருவாகம், ஊரக வளர்ச்சி மற்றும் சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத்துறை அமைச்சர் திரு.எஸ்.பி.வேலுமணி அவர்கள், கோயம்புத்தூர் மாவட்டம், மதுக்கரை பகுதியில் நோய் எதிர்ப்பு சத்து மாத்திரைகள் அடங்கிய தொகுப்பினை வழங்கினார்.

தருமபுரி

மாண்புமிகு உயர்கல்வித்துறை அமைச்சர் திரு.கே.பி.அன்பழகன் அவர்கள், தருமபுரி மாவட்டம், பாலக்கோடு மற்றும் காரிமங்கலம் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட 36 ஊராட்சிகளுக்கு ரூ.1.34 கோடி மதிப்பில் 54 பேட்டரிகள் கூடிய குப்பை சேகரிக்கும் வண்டிகளை வழங்கினார்.

ஈரோடு

மாண்புமிகு சுற்றுச்சூழல் துறை அமைச்சர் திரு.கே.சி. கருப்பணன் அவர்கள், ஈரோடு மாவட்டத்தில், பவானி சட்டமன்ற தொகுதியில் சமூக பாதுகாப்புத் திட்டத்தின் கீழ், பயனாளிகளுக்கு அரசு நலத்திட்ட உதவிகளை வழங்கினார்.

திருவாரூர்

திருவாரூர் மாவட்டம் திருத்துறைப்பூண்டி நகராட்சி அலுவலக வளாகத்தில் நடைபெற்ற கொரோனா வைரஸ் தடுப்பு சிறப்பு மருத்துவ முகாமில் பொதுமக்களுக்கு கபசுர குடிநீர் மற்றும் முகக் கவசங்களை மாண்புமிகு உணவுத்துறை அமைச்சர் திரு. இரா. காமராஜ் அவர்கள் வழங்கினார்.

திருப்பூர்

திருப்பூர் மாவட்டம், உடுமலைப்பேட்டை வட்டம், திருமூர்த்தி அணையிலிருந்து பாசனத்திற்காக தண்ணீரை மாண்புமிகு கால்நடை பராமரிப்புத்துறை அமைச்சர் திரு. உடுமலை கே. ராதாகிருஷ்ணன் அவர்கள் திறந்து வைத்தார்.

தஞ்சாவூர்

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் திரு.இரா.துரைக்கண்ணு அவர்கள், தஞ்சாவூர் மாவட்டம், தஞ்சாவூர் வட்டம் கள்ளப்பெரம்பூர் ஏரி ரூ.92 இலட்சம் மதிப்பில் , மாண்புமிகு முதலமைச்சரின் குடிமராமத்து திட்டத்தின்கீழ், புனரமைக்கும் பணியினை துவக்கி வைத்தார்.

தூத்துக்குடி

மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத்துறை அமைச்சர் திரு.கடம்பூர் ராஜு அவர்கள், தூத்துக்குடி மாவட்டம், கோவில்பட்டி வட்டம், வ.உ.சி. நகர் நியாயவிலைக் கடையில், குடும்ப அட்டைதாரர்களுக்கு விலையில்லா தரமான மறுபயன்பாட்டு முகக்கவசங்களை வழங்கும் பணிகளை துவக்கி வைத்தார்.

விருதுநகர்

மாண்புமிகு பால்வளத்துறை அமைச்சர் திரு.கே.டி.ராஜேந்திரபாலாஜி அவர்கள், கொரோனா நோய்த்தடுப்பு பணியின்போது சின்னமூப்பன்பட்டி கிராம உதவியாளராகப் பணிபுரிந்து வந்த திரு.முருகேசன் என்பவர் உயிரிழந்ததையொட்டி அன்னாரது வாரிசுதாரரர் அவர்களிடம் முதலமைச்சரின் நிவாரணத்தொகை ரூ.25 இலட்சத்திற்கான காசோலையினை வழங்கினார்.

காஞ்சிபுரம்

மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் திரு.பா.பெஞ்ஜமின் அவர்கள் கோவிட்–19 வைரஸ் தொற்று காலத்தில் வேலை வாய்ப்பினை இழந்து பொருளாதாரத்தில் நலிவடைந்த குழுக்கள் தொழில் துவங்குவதற்கு நிதி வழங்கவும் மற்றும் மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு வங்கி கடன் என 40 பயனாளிகளுக்கு ரூ.1.77 கோடி மதிப்பில் மானியத்துடன் கூடிய கடனுதவிகளை வழங்கினார்.

விவசாயிகளின் நலனை கருத்தில் கொண்டு, அரசு விவசாயிகளுக்கு தேவையான பயிர்க் கடன்களை வழங்கி வருகிறது

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **எடப்பாடி கே. பழனிசாமி** அவர்கள் தலைமையில் 20.08.2020 அன்று தருமபுரி மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலகத்தில், மாவட்ட வளர்ச்சித் திட்டப் பணிகள் மற்றும் கொரோனா நோய்த் தடுப்புப் பணிகள் குறித்த ஆய்வுக் கூட்டத்தில் ஆற்றிய உரையிலிருந்து

வறண்ட பகுதிகளில் இருக்கின்ற வேளாண் பெருமக்களுக்கு தேவையான நீர் கிடைப்பதற்காக பல்வேறு திட்டங்களை நிறைவேற்றித் தரவேண்டுமென்று மாண்புமிகு உயர்கல்வித் துறை அமைச்சர் அவர்கள் மற்றும் மாண்புமிகு சட்டப்பேரவை உறுப்பினர்கள் கோரிக்கை வைத்தார்கள். குறிப்பாக வேளாண் பெருமக்கள் பயன்பெறும் வகையிலும், நிலத்தடி நீர்மட்டத்தை உயர்த்திடும் வகையிலும் ஜெர்த்தலாவ் கால்வாயை அமைத்து தர வேண்டும் என்ற கோரிக்கையை அம்மாவின் அரசு ஏற்று, இந்தத் திட்டத்தை செயல்படுத்த இருக்கிறது.

இத்திட்டத்திற்காக பட்டா நிலங்களை கையகப்படுத்த உத்தேசிக்கப்பட்ட புதிய நில எடுப்பு சட்டம் 2013இன் கீழ், மாவட்ட அளவிலான தனியார் நில எடுப்பு பேச்சுவார்த்தை குழு மூலம் நில உரிமையாளர்களுடன் பேச்சுவார்த்தை நடத்தப்பட்டு 7 கிராமங்களுக்கு ஆணைகள் பிறப்பிக்கப்பட்டுள்ளது. நிலம் எடுக்கின்ற பணியை அம்மாவின் அரசு துவங்கியிருக்கிறது. அதேபோல, எண்ணேகோல் கால்வாய் அமைக்கும் திட்டத்தை நிறைவேற்றும் வகையில், காரிமங்கலம் வட்டம், எலுமிச்சன ஹள்ளி கிராமத்தில் நிலங்களை கையகப்படுத்த உத்தேசிக்கப்பட்டு தனியார் நில எடுப்பு பேச்சுவார்த்தை குழு மூலம் நில உரிமையாளர்களுடன் பேச்சுவார்த்தை நடத்தப்பட்டு வருகிறது. நில எடுப்புப் பணி முடிந்தவுடன், தேவையான நிதி ஒதுக்கீடு செய்து, வேளாண் பெருமக்களின் கனவை அம்மாவின் அரசு நிறைவேற்றும் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த மாவட்டத்தில் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளுக்கான புதிய கட்டடங்கள் கட்டப்பட்டுள்ளன. மாண்புமிகு உயர்கல்வித் துறை அமைச்சர் அவர்களின் கோரிக்கையான அரசு சட்டக் கல்லூரிக்கு அனுமதி அளித்து, தேவையான கட்டடம் கட்ட ரூபாய் 58 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டு, பணிகள் ஆரம்பிக்கப்பட்டு, இன்னும் 3 மாத காலத்தில் பயன்பாட்டிற்கு கொண்டு வரப்படும்.

அரூர் புறவழிச்சாலை அமைக்க ரூபாய் 8 கோடி நிதி ஒதுக்கப்பட்டு பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. ஒகேனக்கல்–பென்னாகரம்–தருமபுரி–திருப்பத்தூர் சாலையை ரூ.25 கோடி மதிப்பீட்டில் இருவழித் தடத்திலிருந்து நான்கு வழித்தடமாக அகலப்படுத்தும் பணி முடிவுற்றுள்ளது. சேலம்–திருப்பத்தூர்–வாணியம்பாடி சாலையை ரூ.297.55 கோடி மதிப்பீட்டில் இருவழித் தடத்திலிருந்து நான்கு வழித்தடமாக அகலப்படுத்தும் பணிகள் நடைபெற்று வருகின்றன. தருமபுரி மாவட்டத்தில் 2019–2020ஆம் ஆண்டு நபார்டு வங்கி நிதியுதவித் திட்டத்தின் கீழ், 3 உயர்மட்ட பாலப் பணிகள் ரூ.18.27 கோடி மதிப்பீட்டில் தொடங்கப்பட்டு பணிகள் நடைபெற்று வருகின்றன. 2020–2021ஆம் ஆண்டு நபார்டு வங்கி நிதியுதவித் திட்டத்தின் கீழ், 3 உயர்மட்ட பாலப் பணிகள் ரூ.10.06 கோடி மதிப்பீட்டில் கட்ட அரசின் பரிசீலனையில் உள்ளன. இவ்வாறு பல்வேறு திட்டங்களை அம்மாவின் அரசு தருமபுரி மாவட்டத்தில் செயல்படுத்திக் கொண்டிருக்கிறது.

தருமபுரி மாவட்ட வளர்ச்சிப் பணிகள்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **எடப்பாடி கே. பழனிசாமி** அவர்கள் 20.08.2020 அன்று தருமபுரி மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலகத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை, மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை, பள்ளிக்கல்வித் துறை, இந்து சமய அறநிலையத் துறை ஆகிய துறைகளின் சார்பில் ரூ.15.91 கோடி மதிப்பீட்டிலான 20 முடிவுற்ற திட்டப் பணிகளை திறந்து வைத்து, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை, பள்ளிக்கல்வித் துறை, பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை, கால்நடை பராமரிப்புத் துறை, ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை ஆகிய துறைகளின் சார்பில் ரூ.69.90 கோடி மதிப்பீட்டில் 117 புதிய திட்டப் பணிகளுக்கு அடிக்கல் நாட்டினார்கள்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **எடப்பாடி கே. பழனிசாமி** அவர்கள் 20.08.2020 அன்று தருமபுரி மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலகத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில், பயனாளிகளுக்கு அரசு நலத்திட்ட உதவிகளை வழங்கினார்கள். உடன் மாண்புமிகு உயர்கல்வித் துறை அமைச்சர் திரு.கே.பி.அன்பழகன், சட்டமன்ற உறுப்பினர்கள், தருமபுரி மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி சு.மலர்விழி, இ.ஆ.ப., மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உள்ளனர்.

தமிழ்நாடு முழுவதும் மாவட்டங்களுக்கிடையே E-Pass இன்றி பொதுமக்கள் பயணிக்க அனுமதிக்கப்படுகிறது

தமிழ்நாட்டிற்குள் வருவதற்கு E-Pass நடைமுறை தொடரும்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **எடப்பாடி கே. பழனிசாமி** அவர்களின் அறிக்கை – 30.08.2020

கொரோனா வைரஸ் நோய்த் தொற்றை தடுப்பதற்காக, மத்திய அரசின் வழிகாட்டுதலின்படி, தேசிய பேரிடர் மேலாண்மைச் சட்டத்தின் கீழ், தமிழ்நாட்டில் 25.03.2020 முதல் ஊரடங்கு உத்தரவு அமலில் இருந்து வருகிறது. மாண்புமிகு அம்மாவின் அரசு, இந்த நோய்த் தொற்றிலிருந்து மக்களை காத்து அவர்களுக்கு உரிய நிவாரணங்களை வழங்கி, முனைப்புடன் செயல்பட்டு வருகிறது. அதனால்தான் தமிழ்நாட்டில் நோய்த் தொற்று பரவல் கட்டுப்பாட்டுக்குள் உள்ளதோடு, சிகிச்சைக்குப் பின் குணமடைந்து வீடு திரும்புவோர் சதவிகிதம் நாட்டிலேயே அதிகமாக உள்ளது. மேலும், நோய்த் தொற்றினால் ஏற்படும் உயிர் இழப்பும் குறைவாக இருந்து வருகிறது.

மாண்புமிகு அம்மாவின் அரசு எடுத்து வரும் சிறப்பான நடவடிக்கைகளால், அரசின் நலத்திட்டங்கள் மக்களை பெருமளவில் சென்று சேர்ந்துள்ளதால், பொருளாதார பாதிப்பில் இருந்து மக்கள் பாதுகாக்கப்பட்டுள்ளதோடு, வேலைவாய்ப்பின்மையும் இரண்டே மாதங்களில், ஆறில் ஒரு பங்காக குறைந்துள்ளது எனவும், தனி நபர் வருவாய் படிப்படியாய் உயர்ந்து கொரோனா சூழலால் ஏற்பட்ட பொருளாதார பாதிப்பிலிருந்து தமிழ்நாடு விரைந்து மீண்டு வருகிறது எனவும் ஆய்வறிக்கைகள் தெரிவிக்கின்றன.

நான் பல்வேறு தினங்களில் நடத்திய ஆய்வுக் கூட்டங்களின் அடிப்படையிலும், மூத்த இந்திய ஆட்சிப் பணி அலுவலர்களைக் கொண்டு அமைக்கப்பட்ட 12 ஒருங்கிணைப்புக் குழுக்களின் கருத்துக்களின் அடிப்படையிலும், பல்வேறு தினங்களில் மாவட்ட ஆட்சியர்களின் காணொலிக் கூட்டத்தில் தெரிவிக்கப்பட்ட கருத்துக்களின் அடிப்படையிலும், மருத்துவ நிபுணர்கள் மற்றும் பொது சுகாதார வல்லுநர்கள் குழுவுடன் நடத்தப்பட்ட கூட்டத்தில் தெரிவிக்கப்பட்ட கருத்துக்களின் அடிப்படையிலும், தமிழ்நாட்டில் 31.08.2020 முடிய ஊரடங்கு உத்தரவு தொடர்ந்து நீட்டிக்கப்பட்டது. எனினும், பொதுமக்களின் வாழ்வாதாரத்தை கருத்தில் கொண்டும், பொருளாதாரத்தை மீட்டெடுக்கும் நோக்கத்திலும், பல்வேறு பணிகளுக்கு வரைமுறைகளுடன் அனுமதி அளிக்கப்பட்டுள்ளது.

பல்வேறு தினங்களில் நான் நடத்திய ஆய்வுக் கூட்டங்களின் அடிப்படையிலும், 29.08.2020 அன்று நடத்தப்பட்ட ஆய்வுக் கூட்டத்தில், மாவட்ட ஆட்சித் தலைவர்கள் தெரிவித்த கருத்துகளின் அடிப்படையிலும், மருத்துவ நிபுணர்கள் மற்றும் பொது சுகாதார வல்லுநர்களுடன் நடத்தப்பட்ட ஆலோசனைகளின் அடிப்படையிலும், மூத்த அமைச்சர்களுடன் கலந்தாலோசித்தும், கொரோனா வைரஸ் நோய்த்தொற்றை தடுப்பதற்காக தேசிய பேரிடர் மேலாண்மைச் சட்டத்தின் கீழ், **31.08.2020 முடிய தமிழ்நாடு முழுவதும் தற்போதுள்ள பொது ஊரடங்கு உத்தரவு, ஏற்கெனவே நடைமுறையில் உள்ள பல்வேறு கட்டுப்பாடுகளுடனும், தளர்வுகளுடனும், 30.09.2020 நள்ளிரவு 12 மணி வரை மேலும் நீட்டிப்பு செய்யப்படுகிறது. எனினும் பொருளாதாரத்தை மீட்டெடுக்க வேண்டிய அவசியத்தை கருத்தில் கொண்டும், நோய்த் தொற்றின் தன்மையை கருத்தில் கொண்டும்,** தமிழ்நாடு முழுவதும் **நோய் கட்டுப்பாட்டு பகுதி** தவிர (Except Containment Zones) மற்ற

பகுதிகளில் ஏற்கெனவே அனுமதிக்கப்பட்ட பணிகளுடன் கீழ்க்காணும் பணிகளுக்கும் 01.09.2020 முதல் அனுமதி அளிக்கப்படுகிறது:

- **தமிழ்நாடு முழுவதும் மாவட்டங்களுக்கு இடையே E-Pass இன்றி பொதுமக்கள் பயணிக்க அனுமதிக்கப்படுகிறது.** எனினும், வெளிநாடு மற்றும் வெளிமாநிலங்களில் இருந்து விமானம், இரயில் மற்றும் இதர வாகனங்களின் மூலம் **தமிழ்நாட்டிற்குள் வருவதற்கு E-Pass நடைமுறை தொடரும்.** ஆதார், பயணச் சீட்டு மற்றும் தொலைபேசி/ அலைபேசி எண்ணுடன் E-Pass விண்ணப்பித்த அனைவருக்கும் Auto generated முறையில் கணினி மூலமே சுய அனுமதி உடனடியாக பெறும் வகையில் E-Pass வழங்கப்படும்.

- **அனைத்து வழிபாட்டுத் தலங்களிலும், பொதுமக்கள் தரிசனம் அனுமதிக்கப்படுகிறது.** இதற்கென நிலையான வழிகாட்டு நடைமுறைகள் (Standard Operating Procedure) அரசால் வெளியிடப்படும். இதன் மூலம் ஒரு நாளைக்கு தரிசனத்துக்கு வரும் அதிகபட்ச பக்தர்களின் எண்ணிக்கையை நிருணயம் செய்வதுடன், வழிபாட்டு தலங்களில் உள்ளேயும் கர்ப்பகிரகம் போன்ற புனித இடத்திற்கும் (Sanctum sanctorum) ஒரே நேரத்தில் குறிப்பிட்ட எண்ணிக்கையில் மட்டுமே பக்தர்கள் செல்ல அனுமதிக்கப்படுவர். வழிபாட்டுத் தலங்களுக்கு பொதுமக்கள் தரிசனம் இரவு 8.00 மணி வரை மட்டும் அனுமதிக்கப்படும்.

- **மாவட்டத்திற்குள்ளான பொது மற்றும் தனியார் பேருந்து போக்குவரத்து, சென்னையில் பெருநகர பேருந்து போக்குவரத்து சேவை 01.09.2020 முதல், நிலையான வழிகாட்டு நடைமுறைகளுடன்** (Standard Operating Procedure) **செயல்பட அனுமதிக்கப்படுகிறது.**

- **பெருநகர சென்னையில் மெட்ரோ இரயில் போக்குவரத்து 07.09.2020 முதல்** இதற்கென வகுக்கப்படும் நிலையான வழிகாட்டு நடைமுறைகளுடன் (Standard Operating Procedure) செயல்பட அனுமதிக்கப்படுகிறது.

- **வணிக வளாகங்கள் (Shopping Malls), அனைத்து ஷோரூம்கள் (Show Rooms) மற்றும் பெரிய கடைகள் (Big format stores) 100 சதவிகித பணியாளர்களுடன்,** மத்திய அரசின் குளிர்சாதன வசதி குறித்த வழிகாட்டு நடைமுறைகளை பின்பற்றியும், நிலையான வழிகாட்டு நடைமுறைகளை (Standard Operating Procedure) பின்பற்றியும் இயங்க அனுமதிக்கப்படுகிறது. எனினும், வணிக வளாகங்களில் (Shopping Malls) உள்ள திரையரங்குகள் இயக்க தடை தொடரும்.

- சென்னை உட்பட தமிழ்நாடு முழுவதும் அனைத்து கடைகளும் இரவு 8.00 மணி வரை இயங்க அனுமதிக்கப்படும்.

- அரசால் ஏற்கெனவே வெளியிடப்பட்ட நிலையான வழிகாட்டு நடைமுறைகளைப் பின்பற்றி, உணவகங்கள் மற்றும் தேநீர் கடைகள் காலை 6 மணி முதல் இரவு 8 மணி வரை இயங்க அனுமதிக்கப்படுகிறது. பார்சல் சேவை இரவு 9 மணி வரை இயங்க அனுமதிக்கப்படுகிறது.

- சென்னை உட்பட தமிழ்நாடு முழுவதும் உள்ள தொழிற்சாலைகள் மற்றும் தகவல் தொழில்நுட்ப நிறுவனங்கள் 100 சதவிகித பணியாளர்களுடன் இயங்க அனுமதிக்கப்படுகிறது. எனினும், தகவல் தொழில்நுட்ப நிறுவனங்கள், தவிர்க்க இயலாத

பணிகள் மேற்கொள்ளும் பணியாளர்களை தவிர பிற பணியாளர்களை வீட்டிலிருந்தே பணிபுரிய ஊக்குவிக்க கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

- **தங்கும் வசதியுடன் கூடிய ஹோட்டல்கள், ரிசார்ட்டுகள், கேளிக்கை விடுதிகள் (Recreation clubs) மற்றும் பிற விருந்தோம்பல் சேவைகள் (Clubs)** நிலையான வழிகாட்டு நடைமுறைகளை (Standard Operating Procedure) பின்பற்றி **இயங்க அனுமதிக்கப்படுகிறது.**
- உடற்பயிற்சி மற்றும் அனைத்து விளையாட்டு பயிற்சிகளுக்காக, **பூங்காக்கள் மற்றும் விளையாட்டு மைதானங்கள்** நிலையான வழிகாட்டு நடைமுறைகளை (Standard Operating Procedure) பின்பற்றி **திறக்க அனுமதிக்கப்படுகிறது. எனினும், விளையாட்டு மைதானங்களில் பார்வையாளர்களுக்கு அனுமதி கிடையாது.**
- **திறன் மற்றும் தொழில் பயிற்சி நிறுவனங்கள்** நிலையான வழிகாட்டு நடைமுறைகளை (Standard Operating Procedure) பின்பற்றி 21.09.2020 முதல் **திறக்க அனுமதிக்கப்படுகிறது.**
- தற்போது 50 சதவிகித பணியாளர்களுடன் இயங்கும் **அரசு அலுவலகங்கள், 01.09.2020 முதல் 100 சதவீத பணியாளர்களுடன் இயங்கும். எனினும், தனியார் மற்றும் அரசு அலுவலகங்களிலும், தொழிற்சாலை போன்ற பணியிடங்களிலும், கொரோனா தடுப்பு அலுவலர் ஒருவரை (Nodal Officer) தொடர்பு அலுவலராக நியமித்து,** முறையாக வழிகாட்டு நெறிமுறைகளை பின்பற்றுவதையும், நோய்த் தொற்று உள்ளவர்கள் அலுவலகத்திற்கு வருவதை தவிர்க்கவும், அறிகுறி உள்ளவர்களை உடனுக்குடன் பரிசோதனை செய்வதை உறுதிப்படுத்தவும் உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

- **வங்கிகள் மற்றும் அதைச் சார்ந்த நிறுவனங்கள் 100 சதவிகித பணியாளர்களுடன் இயங்குவதற்கு அனுமதிக்கப்படுகிறது.**
- **நீலகிரி மாவட்டத்திற்கும், கொடைக்கானல், ஏற்காடு போன்ற அனைத்து மலை வாசஸ்தலங்களுக்கும், வெளியூர் சுற்றுலா பயணிகள் செல்லுவதை கட்டுப்படுத்த மாவட்ட ஆட்சித் தலைவர் அனுமதியுடன்** E-Pass **பெற்று செல்ல அனுமதிக்கப்படுவர்.**

- **திரைப்படத் தொழிலுக்கான படப்பிடிப்பு களுக்கு உரிய வழிகாட்டி நெறிமுறைகளுக்கு உட்பட்டு, ஒரே சமயத்தில் 75 நபர்களுக்கு மிகாமல் பணி செய்ய அனுமதி அளிக்கப்படுகிறது. படப்பிடிப்பின் போது பார்வையாளர்களுக்கு அனுமதி கிடையாது.**
- **ஞாயிற்றுக்கிழமைகளில் அமல்படுத்தப்பட்டு வந்த முழு ஊரடங்கு, செப்டம்பர் மாதம் முதல் ரத்து செய்யப்படுகிறது.**
- மாநிலங்களுக்கு இடையேயான இரயில் போக்குவரத்து அனுமதிக்கப்பட்ட தடங்களில் மட்டும் செயல்படும். எனினும், மாநிலத்திற்குள் பயணியர் இரயில்கள் செயல்பட 15.09.2020 வரை அனுமதியில்லை. 15.09.2020க்குப் பிறகு, தமிழ்நாட்டிற்குள் பயணியர் இரயில்கள் அனுமதிப்பது பற்றி, சூழ்நிலைக்கேற்ப முடிவு எடுக்கப்படும்.
- விமானப் போக்குவரத்து மூலம் பயணிக்கும் வெளிநாட்டுப் பயணிகள் மற்றும் உள்ளூர் பயணிகள், இரயில் போக்குவரத்து மூலம் பயணிக்கும் பிற

மாநில பயணிகள், தனிமைப்படுத்துதல் மற்றும் கொரோனா நோய்த் தொற்றை கண்டறிதலுக்கான புதிய நடைமுறை வெளியிடப்படும். (Protocol for Quarantine and testing).

- தற்போது நாள்தோறும் சென்னை விமான நிலையத்தில் வெளி மாநிலங்களில் இருந்து 25 விமானங்கள் தரையிறங்க அனுமதித்துள்ள நிலையில், இனி 50 விமானங்கள் வரை தரையிறங்க அனுமதிக்கப்படுகிறது. இது தவிர கோயம்புத்தூர், திருச்சிராப்பள்ளி, மதுரை, தூத்துக்குடி, சேலம் ஆகிய விமான நிலையங்களில் விமானங்கள் தரையிறங்க தற்போது அனுமதிக்கப்பட்டுள்ள நிலை தொடரும்.

பொது

- மாநிலம் முழுவதும் குற்றவியல் நடைமுறைச் சட்டம் பிரிவு 144இன் கீழ் பொது இடங்களில் ஐந்து நபர்களுக்கு மேல் கூடக் கூடாது என்ற தடை உத்தரவு தொடர்ந்து அமலில் இருக்கும்.

- தமிழ்நாடு முழுவதும் நோய்க் கட்டுப்பாட்டு பகுதிகளில் (Containment Zones) தற்போதுள்ள நடைமுறைகளின்படி, எந்த விதமான தளர்வுகளுமின்றி ஊரடங்கு முழுமையாக கடைபிடிக்கப்படும்.

ஏற்கெனவே நடைமுறையில் உள்ள கீழ்காணும் செயல்பாடுகளுக்கான தடைகள், மறு உத்தரவு வரும் வரை தொடர்ந்து அமலில் இருக்கும்:–

- பள்ளிகள், கல்லூரிகள், ஆராய்ச்சி நிறுவனங்கள் மற்றும் அனைத்துக் கல்வி நிறுவனங்கள். எனினும், இந்நிறுவனங்கள் இணைய வழிக் கல்வி கற்றல் தொடர்வதுடன், அதனை ஊக்குவிக்கலாம்.

- திரையரங்குகள், நீச்சல் குளங்கள், பொழுதுபோக்கு பூங்காக்கள் (Entertainment / Amusement Parks), பெரிய அரங்குகள், கூட்ட அரங்குகள், கடற்கரை, உயிரியல் பூங்காக்கள், அருங்காட்சியகங்கள், சுற்றுலாத் தலங்கள் போன்ற பொதுமக்கள் அதிகம் கூடும் இடங்கள்.

- மத்திய உள்துறை அமைச்சகத்தால் அனுமதிக்கப்பட்ட வழித் தடங்களைத் தவிர சர்வதேச விமான போக்குவரத்திற்கான தடை நீடிக்கும்.

- புறநகர் மின்சார இரயில் போக்குவரத்து (Sub urban trains)

- மதம் சார்ந்த கூட்டங்கள், சமுதாய, அரசியல், பொழுதுபோக்கு, கலாச்சார நிகழ்வுகள், கல்வி விழாக்கள், பிற கூட்டங்கள் மற்றும் ஊர்வலங்கள் நடத்த உள்ள தடை தொடரும்.

பொதுமக்கள் வெளியில் செல்லும்போதும், பொது இடங்களிலும் முகக்கவசம் அணிவது கட்டாயமாக்கப்பட்டுள்ளது. பொதுமக்கள் வீட்டிலும், பணிபுரியும் இடங்களிலும் அடிக்கடி சோப்பை பயன்படுத்தி கை கழுவுவதையும், வெளியிடங்களில் முகக்கவசத்தை அணிந்து செல்வதையும், சமூக இடைவெளியை தவறாமல் கடைபிடித்தும், அவசிய தேவை இல்லாமல் வெளியில் செல்வதைத் தவிர்த்தும், அரசுக்கு முழு ஒத்துழைப்பு நல்கினால் தான், இந்த நோய்த் தொற்றை கட்டுப்படுத்த முடியும்.

மாண்புமிகு அம்மாவின் அரசு அமல்படுத்தி வரும் கட்டுப்பாடுகள் மற்றும் நோய் கட்டுப்பாட்டு பகுதிகளில் மேற்கொள்ளப்பட்டு வரும் தீவிர பரிசோதனைகள் மூலம் நோய்த்தொற்று அதிகரிக்கும் வேகம் குறைந்திருந்தாலும், நோய்த்தொற்றால் பாதிக்கப்பட்டவர்கள் எண்ணிக்கை தொடர்ந்து கணிசமான அளவில் உள்ள நிலையில் மக்களைக் காக்க தற்போதுள்ள ஊரடங்கு நடைமுறையை மேலும் தொடர வேண்டிய நிலையில் அரசு உள்ளது. இதனால் நோய்ப்பரவலை மேலும் பரவுவதை கட்டுப்படுத்த இயலும். எனவே, பொதுமக்கள் அரசு எடுத்துவரும் இத்தகைய முயற்சிகளுக்கு ஒத்துழைப்பு நல்க கேட்டுக் கொள்கிறேன். நோய்த் தொற்றின் போக்கு தொடர்ந்து கண்காணிக்கப்பட்டு, பொதுமக்களின் ஒத்துழைப்பையும், நோய்த் தொற்றின் நிலையையும் கருத்தில் கொண்டு அவ்வப்போது தேவைக்கேற்ப மேலும் தளர்வுகள் வழங்கப்படும் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

கோவிட்-19 நோய்த் தொற்று ஊரடங்கு காலத்தில் தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறையின் செயல்பாடுகள்

இந்தியா மற்றும் தமிழகம் முழுவதும் கோவிட்–19 நோய்த் தொற்று பரவலினால் முற்றிலும் முடக்கப்பட்டது. இம்முடக்கம் விவசாயிகள் மற்றும் நுகர்வோர் மீது கடும் தாக்கத்தை ஏற்படுத்தும் என்பதால் வேளாண்மை உற்பத்தி ஆணையர் மற்றும் முதன்மைச் செயலர் அவர்கள் தலைமையில் முதற்கட்ட ஆலோசனைக் கூட்டம் நடத்தப்பட்டது. அக்கூட்டத்தில் விவசாயிகள் மற்றும் வாடிக்கையாளர்கள் சந்திக்கும் சிக்கல்கள் குறித்தும் தோட்டக்கலைத் துறை எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் குறித்தும் ஆலோசிக்கப்பட்டது.

விவசாயிகள் உச்சகட்ட அறுவடை காலத்தை சமாளிப்பதிலும், அவர்களுடைய விளைப்பொருட்களை சந்தைப்படுத்துவதிலும் சிக்கல்களை சந்திக்கின்றனர். போக்குவரத்து வழித்தடை மற்றும் தடுப்பு நடவடிக்கைகளால் விவசாயிகளின் உற்பத்தித் திறன் குறைந்ததுடன் விளைப்பொருட்கள் விற்பனை செய்வதில் தொய்வும் ஏற்பட்டது. தோட்டக்கலை விளைப்பொருட்களான பழங்கள் மற்றும் காய்கறிகள் அழுகும் தன்மை உடையவை என்பதால், அவை சரியான நேரத்தில் வாடிக்கையாளர்களை அடைய வேண்டியது அவசியம். திருமணம், சுபநிகழ்ச்சிகள் மற்றும் கோவில் திருவிழாக்கள் ஆகியவை முற்றிலும் தடைசெய்யப்பட்டதால், பூ உற்பத்தியாளர்கள் பூக்களை விற்க முடியாமல் தவித்தனர்.

நுகர்வோர் தங்களுடைய தினசரி தேவைகளை பூர்த்தி செய்து கொள்வதிலும், காய்கறிகள் மற்றும் பழங்களை எளிதில் வாங்குவதிலும் சிரமங்களை சந்தித்து வந்தனர். அதனால் விலைவாசி ஏற்றம் மற்றும் விளைப்பொருட்கள் இருப்பு குறித்த மிகப்பெரிய அச்சுறுத்தல் ஏற்பட்டது. இந்த திடீர் எதிர்பாராத ஊரடங்கினால் தோட்டக்கலை விளைபொருட்களின் ஒட்டுமொத்த விநியோக சங்கிலியும் பெரிதாக தாக்கப்பட்டது.

அரசின் அறிவுரை மற்றும் உத்தரவின் படி பல்வேறு மாவட்டங்களில் விவசாயிகளின் பண்ணை அளவிலும் கிராமப்புற மற்றும் நகர்ப்புற நுகர்வோர் அளவிலும் தேவையான பல்வேறு தலையீடுகள் மற்றும் நடிவடிக்கைகள் எடுக்கப்பட்டன.

விளைப்பொருட்களை சந்தைக்கு எடுத்து செல்ல விவசாயிகளுக்கு போக்குவரத்து வசதி ஏற்படுத்துதல்

தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறை விவசாயிகளுக்கு மாநிலத்திற்குள்ளும், வெளிமாநிலத்திற்கும், போக்குவரத்துவசதி ஏற்படுத்தியும், விவசாயிகள் மற்றும் வர்த்தகர்களுக்கு வாகன பாஸ் வழங்கியும் பழங்கள் மற்றும் காய்கறிகளை சந்தைப்படுத்த வழிவகை செய்து, இதன் மூலம் 55,000 மெ.டன் தர்பூசணி, 500 மெ.டன் முலாம்பழம் மற்றும் வாழை போன்ற பழவகைகள் வெளிமாநிலங்களுக்கு அனுப்பப்பட்டுள்ளது. மொத்தமாக, இதுவரை 38,026 வாகனங்களுக்கு பாஸ் வழங்கி அதன் மூலம் 2.09 இலட்சம் மெட்ரிக் டன் பழங்கள் மற்றும் காய்கறிகள் வெளிமாவட்டங்களுக்கும் வெளி மாநிலங்களுக்கும் அனுப்பப்பட்டுள்ளது. இதில் 77,783 மெட்ரிக் டன் காய்கறிகள் மற்றும் பழங்கள்

கேரளா, கருநாடகா மற்றும் ஆந்திரா மாநிலங்களுக்கும் அனுப்பப்பட்டுள்ளன.

சில்லரை விற்பனை மையங்கள்

தமிழகம் முழுவதும் 55 தமிழ்நாடு தோட்டக்கலை வளர்ச்சி முகமை (டான்ஹோடா) விற்பனை மையங்கள் செயல்பட்டு வருகின்றன. தோட்டக்கலை துறையினால் உருவாக்கப்பட்ட விவசாய ஆர்வலர் குழு, விவசாய உற்பத்தியாளர் குழு மற்றும் உழவர் உற்பத்தியாளர் அமைப்பு ஆகியோரிடமிருந்து விளைபொருட்கள்

நேரடியாக கொள்முதல் செய்து நுகர்வோரின் தேவையை இந்த நெருக்கடியான காலத்திலும் பூர்த்தி செய்து வருகிறது. 45 மெட்ரிக் டன் காய்கறிகள், டான்ஹோடா சில்லறை விற்பனை மையங்களின் மூலம் நகர்புற தொகுப்புகளுக்கு விநியோகம் செய்யப்பட்டுள்ளது.

நகரும் விற்பனை மையங்கள்

மக்கள் வீட்டிலேயே இருக்க அறிவுறுத்தப்பட்டதாலும், விவசாயிகள் சந்தையை அடைய முடியாததாலும், நகரும் விற்பனை மையங்கள் செயல்பட துவங்கியது. மாநகராட்சி, நகராட்சி மற்றும் நகர பஞ்சாயத்துகளிலும் உள்ள அனைத்து வார்டுகளுக்கும் நகரும் விற்பனை மையங்கள் நுகர்வோரின் காய்கறிகள் மற்றும் பழங்களின் தேவையை பூர்த்தி செய்ய ஒதுக்கப்பட்டது.

☛ உழவர் ஆர்வலர் குழு/உழவர் உற்பத்தியாளர் குழுக்கள் தோட்டக்கலை விளைப்பொருட்களின் நேரடி கொள்முதல் மற்றும் விற்பனையில் ஈடுபடுத்தப்பட்டு 10,315 மெட்ரிக் டன் காய்கறிகள் விற்பனை செய்யப்பட்டது.

☛ அனைத்து தோட்டக்கலைத்துறை வாகனங்கள் மற்றும் அலுவலர்களும் இந்த நகரும் விற்பனை மையப் பணிகளில் ஈடுபடுத்தப்பட்டனர்.

☛ அருகாமையில் உள்ள நகரங்கள் மற்றும் குடியிருப்புகளுக்கு டான்ஹோடா நகரும் விற்பனை மையங்கள் மூலம் விவசாயிகளிடமிருந்து 1,468 மெட்ரிக் டன் தோட்டக்கலை விளைபொருட்கள் கொண்டு சேர்க்கப்பட்டது.

☛ மாநிலம் முழுவதும் அரசுத்துறை, விவசாயிகள், உழவர் ஆர்வலர் குழு, உழவர் உற்பத்தியாளர் குழு மற்றும் உழவர் உற்பத்தியாளர் அமைப்பு சார்ந்த வாகனங்கள் மொத்தம் 9,607 நகரும் விற்பனை மையங்களாக உபயோகப்படுத்தப்பட்டது.

ஆன்லைன் விற்பனை

ஊரடங்கு காலத்தில் வீட்டிலேயே மக்கள் இருக்க அறிவுறுத்தப்பட்டதால், வயதானவர்கள் வெளியே வரமுடியாததாலும், அருகில் சில்லரை விற்பனை ஏதும் இல்லாததாலும் பழங்கள் மற்றும் காய்கறிகள் வழங்கும் ஆன்லைன் விற்பனை வலைதளம் தேவைப்பட்டது. ஆதலால், ஏற்கெனவே செயல்பாட்டில் இருந்த இ–தோட்டம் வலைதளம் மூலம் பழங்கள் மற்றும் காய்கறிகளை நுகர்வோரின் தினசரி உணவு தேவையை பூர்த்தி செய்யும் வகையில் அவர்களுக்கு வீட்டிற்கே சென்று விநியோகம் செய்யப்பட்டது.

☛ கிண்டி, செம்மொழி பூங்கா, மாதவரம் மற்றும் சித்தலப்பாக்கம் ஆகிய 4 இடங்களில் விநியோக மையங்கள் அமைக்கப்பட்டு செயல்படுத்தப்பட்டது.

☛ இ–தோட்டம் வலைதளத்தில் பெற்ற 20,826 ஆன்லைன் ஆர்டர்கள் மூலம், 405 மெட்ரிக் டன் தோட்டக்கலை விளைபொருட்கள் விவசாயிகளிடமிருந்து நேரடியாக கொள்முதல் செய்யப்பட்டு நுகர்வோருக்கு வழங்கப்பட்டுள்ளது.

☛ நகர்ப்புற தொகுப்புகளில் மக்கள் தொகை மற்றும் தாக்கம் அதிகமாய் இருப்பதாலும், அருகில் உற்பத்தி மையங்கள் இல்லாததாலும், இ–தோட்டம் உற்பத்தியாளர் விற்பனை செய்வதற்கும், நுகர்வோர் விளைபொருட்களை வாங்குவதற்கும் பாலமாக செயல்பட்டது.

☛ ஆன்லைனில் விளைபொருட்களின் விலை வெளியிடப்பட்டதால் சந்தையில் உள்ள மற்ற விற்பனையாளர்களுக்கு அளவுகோலாக விளங்கியதுடன், விளை பொருட்களில் விலையை, சீரான நிலையில் வைக்க உதவியது.

☛ அதனைத் தொடர்ந்து, இ–தோட்டம் ஆன்லைன் விநியோகம் இந்திய தபால் துறை, ஜொமேடோ, டன்ஜோ மற்றும் ஸ்விகி ஆகிய அமைப்புகளுடன் இணைந்து மேற்கொள்ளப்பட்டது

மொத்தவிலை பழச்சந்தை

அதிக கோவிட்–19 பாதிக்கப்பட்டவர்கள் கண்டறியப்பட்டதால் கோயம்பேடு சந்தை மூடப்பட்டு, சென்னை பெருநகர் வளர்ச்சிக் குழுமம், மாதவரம் பேருந்து நிலையத்தில் புதிய தற்காலிக மொத்த விலை பழச்சந்தை தொடங்கப்பட்டது.

☛ ஆரம்ப கட்டத்தில் வியாபாரிகள் தங்கள் விளைபொருட்களை பழச்சந்தைக்கு கொண்டு வர தயக்கம் காட்டினர். பழச்சந்தையை செயல்படுத்த எழுந்த கோரிக்கையின்படி தோட்டக்கலைத் துறை மற்றும் டான்ஹோடா மாதவரம் தற்காலிக பழச்சந்தையில் 10 கடைகளை எடுத்து விவசாயிகளிடமிருந்து பழங்களை கொண்டு வர ஆரம்பித்தது.

☛ அதனைக்கண்டு மற்ற வியாபாரிகளும் தங்களது விளைபொருட்களை கொஞ்சம் கொஞ்சமாக எடுத்த வர ஆரம்பித்து, சந்தை முழுவீச்சுடன் செயல்படுவது உறுதி செய்யப்பட்டது.

☛ விவசாயிகளிடமிருந்தும் தேசிய வேளாண்மை கூட்டுறவு சந்தைப்படுத்துதல் கூட்டமைப்பிடமிருந்தும் நேரடியாக 130 மெட்ரிக் டன் பழங்கள் கொள்முதல் செய்யப்பட்டு மொத்த வியாபாரிகள் மற்றும் சில்லரை வியாபாரிகளுக்கும் நியாய விலையில் விற்பனை செய்யப்பட்டது.

மொத்தவிலை காய்கறி சந்தை

கோயம்பேடு சந்தை மூடப்பட்டதால், திருமழிசையில் மாற்றும் காய்கறி சந்தை அமைக்க இடம் தேர்வு செய்யப்பட்டது. தற்காலிக சந்தை அமைக்கப்பட்டு

கொண்டிருந்த இடைப்பட்ட நேரத்தில் ஒரு வார காலம் மொத்த விலை காய்கறி சந்தை இல்லாமல் இருந்தது. அக்காலகட்டத்தில் நுகர்வோருக்கு காய்கறிகள் கிடைக்க வழிவகை செய்யும் பொருட்டு, மாதவரம் தோட்டக்கலை பூங்கா வளாகத்தில் தற்காலிக மொத்த விலை காய்கறி சந்தை அமைக்கப்பட்டு, மொத்த வியாபாரிகளுக்கும் சில்லரை வியாபாரிகளுக்கும் விற்பனை செய்யப்பட்டது. 315 மெட்ரிக் டன் காய்கறிகள் கொண்டு வரப்பட்டு மொத்த வியாபாரிகள், சில்லரை வியாபாரிகள் மற்றும் அடுக்குமாடி குடியிருப்பு வாசிகளுக்கும் நியாயமான விலையில் விற்பனை செய்யப்பட்டது.

வேளாண் பொறியியல் துறை மற்றும் தோட்டக்கலைத் துறையின் வாகன பயன்பாடு

வேளாண் பொறியியல் துறையின் பல்நோக்கு வாகனங்களும் தோட்டக்கலைத் துறையின் கீழ், உள்ள வாகனங்களும் விளைபொருட்களை கொண்டு செல்ல பயன்படுத்தப்பட்டது. உழவர் ஆர்வலர் குழுக்கள், உழவர் உற்பத்தியாளர் நிறுவனங்கள் போன்ற பல்வேறு

தோட்டக்கலைத் திட்டங்களின் பயனாளிகளிடமிருந்து காய்கறிகள் கொள்முதல் செய்து ரூ.100 மதிப்புள்ள தளைகளாக மாவட்டம் முழுவதும் தோட்டக்கலைத் துறை அதிகாரிகள் விற்பனை செய்து வருகின்றனர். கோவிட்–19 ஊரடங்கு காலத்தில் மட்டும் சுமார் 2,75,06,200 எண் காய்கறி தளைகள் மூலம் 1,26,412 மெட்ரிக் டன் காய்கறிகள் விற்பனை செய்யப்பட்டுள்ளது

சிறு காய்கறிகள்

மேற்கண்ட நடவடிக்கைகள் மூலம் விவசாயிகள் விளைபொருட்களை விற்பனை செய்வதில் இருந்த

சிக்கல்கள் களையப்பட்டன. குறைந்த தேவை உள்ள காய்கறிகளான சாம்பல் பூசணி, பூசணி, முட்டைக் கோஸ், குடைமிளகாய் போன்றவற்றையும் விவசாயிகளுக்கு அடிப்படை ஆதரவு தரும் வகையில் டான்ஹோடா கொள்முதல் செய்தது.

அதுமட்டுமல்லாது, தமிழகத்தில் விளைவிக்கப்படும் உதிரி பூக்கள் வீணடைவதை தவிர்த்து அவற்றை வாசனை திரவியப்பொருட்கள் தயாரிக்கும் தொழிற்சாலைகளுக்கு அனுப்ப விவசாயிகளுக்கு தோட்டக்கலைத் துறை உதவி வருகிறது. இதுவரை, 1,417 மெட்ரிக் டன் மல்லிகை மலர்கள் தொழிற்சாலைகளுக்கு அனுப்பப்பட்டுள்ளது. மேலும், 1,154 மெட்ரிக் டன் மாம்பழங்கள் பழ பதனிடும் தொழிற்சாலைகளுக்கு தோட்டக்கலைத் துறையினரால் அனுப்பப்பட்டுள்ளது.

அதிக விளைச்சல் உள்ள இடத்தில் இருந்து தேவையான இடங்களுக்கு கொண்டு செல்வதன் மூலம், விவசாயிகளுக்கு காய்கறிகள் வீணாவதை தடுப்பதுடன் வாழ்வாதாரம் காக்கப்படுகிறது. மேலும், நுகர்வோருக்கு குறைந்த விலையில் காய்கறிகள் கிடைக்கிறது. இவ்வாறு துறையின் நடவடிக்கையால் காய்கறி மற்றும் பழங்கள் அபரிவிதமான விலையேற்றம் கட்டுக்குள் கொண்டு வரப்பட்டுள்ளது.

மேற்கண்ட பல்வேறு செயல்களின் மூலம் தோட்டக்கலைத்துறை விவசாயிகளுக்கும் நுகர்வோருக்கும் பாலமாக அமைந்து பழங்கள் மற்றும் காய்கறிகளின் விலையை சீர்ப்படுத்தி இருதரப்பினருக்கும் பயனளித்தது.

முயற்சி திருவினை ஆக்கும்

ஒரு அரசன் போட்டி ஒன்றை அறிவித்தான். கோட்டைக் கதவைக் கைகளால் திறந்து தள்ள வேண்டும். வெற்றி பெற்றால் நாட்டின் ஒரு பகுதி தானமாக வழங்கப்படும். தோற்றால் தோற்றவனின் கை வெட்டப்படும். இதனால், மக்கள் பலவாறாக யோசித்து, பயம் கொண்டு யாரும் போட்டியில் கலந்து கொள்ளவில்லை. ஒரே ஒரு இளைஞன் மட்டும் போட்டியில் கலந்து கொள்ள முன் வந்தான்.

“போட்டியில் தோற்று விட்டால் கைகளை வெட்டி விடுவார்கள். உன்னுடைய எதிர்காலம் என்னவாகும் ?” என்று அரசன் கேட்டான். அதற்கு அந்த இளைஞன் சொன்னான், “ஐயா வென்றால் நானும் ஒரு அரசன், தோற்றால் கைகள் தானே போகும். உயிரில்லையே” என்று கூறி விட்டு கோட்டைக் கதவை இளைஞன் தள்ளினான்.

என்ன அதிசயம்! கதவு சட்டெனத் திறந்து கொண்டது. ஏனென்றால், கோட்டைக் கதவுகளில் தாழ்ப்பாள் போடப்படவில்லை. திறந்துதான் இருந்தது. பல பேர் இப்படித் தான் இருக்கிறார்கள். தோற்று விடுவோமோ, எதையாவது, இழந்து விடுவோமோ என்று எதற்கும் முயற்சிக்காமலேயே விட்டு விடுகிறார்கள்.

நம்புங்கள்! முயற்சி திருவினை ஆக்கும்.!!

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **எடப்பாடி கே. பழனிசாமி** அவர்கள் தலைமையில் 21.08.2020 அன்று நாமக்கல் மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலகத்தில் மாவட்ட வளர்ச்சித் திட்டப் பணிகள் மற்றும் கொரோனா நோய்த் தடுப்புப் பணிகள் குறித்து நடைபெற்ற ஆய்வுக் கூட்டத்தில் ஆற்றிய உரையிலிருந்து...

நாமக்கல் மாவட்டத்திற்கு ஒரு அரசு மருத்துவக் கல்லூரியை அறிவித்தது மாண்புமிகு அம்மாவின் அரசு தான்

தமிழக அரசு நாமக்கல் மாவட்டத்திற்கு அதிகத் திட்டங்களை அறிவித்து செயல்படுத்தி வருகிறது. இதில், சில திட்டப்பணிகள் முடிவுற்று பயன்பாட்டிற்கு வந்திருக்கின்றன. சில பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. இந்த மாவட்டத்தில் பல்வேறு நகரங்களுக்கும், கிராமங்களுக்கும் குடிநீர் வேண்டுமென்ற கோரிக்கையின் அடிப்படையில், நாமக்கல் நகரத்திற்கான குடிநீர் திட்டப் பணிகள் நடைபெற்று வருகின்றன. இன்னும் சில மாதங்களில் அப்பணிகள் நிறைவு பெற்று மக்கள் பயன்பாட்டிற்கு கொண்டு வரப்படும். காவேரியிலிருந்து பாதுகாக்கப்பட்ட தண்ணீர் திருச்செங்கோட்டிற்கும், அதைச்சுற்றியுள்ள பகுதிகளுக்கும் கொண்டு வருவதற்கான திட்டப் பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. பள்ளிப்பாளையத்திலும் குடிநீர் திட்டத்திற்கு நிதி ஒதுக்கீடு செய்து பணிகள் துரிதமாக நடைபெற்று வருகிறது. இராசிபுரம் பகுதியில் இருக்கும் குடிநீர் பிரச்சினையை தீர்ப்பதற்கான திட்டங்கள் பரிசீலனையில் உள்ளது என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

காவேரி ஆற்றின் குறுக்கே ஈரோட்டையும், பள்ளிப்பாளையத்தையும் இணைக்கும் வகையில் கூடுதலாக கட்டப்பட்டுள்ள புதிய பாலத்தினை நானே நேரடியாக வந்து திறந்து வைத்தேன். SPB காலனி இரயில்வே கீழ்ப்பாலம், இரயில்வே உயர்மட்டப் பாலமாக கட்டப்பட்டுள்ளது.

பரமத்திவேலூரிலிருந்து திருச்செங்கோடு வரை பிரம்மாண்டமான வகையில் சாலை வசதிகளை செய்து கொடுத்துள்ளோம். அதேபோல, திருச்செங்கோட்டிலிருந்து நாமக்கல் வரையிலான சாலையை நான்கு வழிச்சாலையாக உருவாக்கித் தந்திருக்கிறோம். திருச்செங்கோட்டிலிருந்து இராசிபுரம் வரையிலும், அங்கிருந்து மல்லிக்கரை வரையுள்ள சாலையையும், நாமக்கல்லிலிருந்து மோகனூர் வரையுள்ள சாலையும் விரிவாக்கம் செய்யப்பட்டுள்ளன.

இன்னும் புதிய சாலைகள் அமைக்கப்படவுள்ளன. திருச்செங்கோட்டிலிருந்து சங்ககிரி வழியாக ஓமலூர் வரையுள்ள சாலையை நான்கு வழிச்சாலையாக விரிவுபடுத்துவதற்கு அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது. திருச்செங்கோட்டிலிருந்து பள்ளிப்பாளையம் வழியாக ஈரோடு செல்கின்ற சாலையையும் புதிதாக அமைக்க இருக்கின்றோம். அங்கு கூட குறுகலாக இருக்கும் இடங்களில் உயர்மட்டப்பாலம் வேண்டும் என்று மாண்புமிகு அமைச்சர்கள் கோரிக்கை வைத்ததன் அடிப்படையில், சுமார் 3.40 கிலோ மீட்டர் நீளத்திற்கு உயர்மட்டப் பாலமும் அந்த சாலையில் அமைக்கப்படுகிறது. அதேபோல, பேப்பர் மில்லுக்கு செல்கின்ற இரயில்வே கடவின் குறுக்கே ஒரு கீழ்ப்பாலம் கட்டுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகிறது. நாமக்கல்லிலிருந்து முசிறி வரையுள்ள சாலையையும், நாமக்கல்லிலிருந்து சேந்தமங்கலம் வரை சாலையையும் விரிவாக்கம் செய்வதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. அதுமட்டுமல்லாமல், நகரத்தில் போக்குவரத்து நெரிசலை தவிர்க்க நாமக்கல்லில் புறவழிச் சாலை அமைக்கின்ற பணியும் தொடங்க இருக்கின்றது. திருச்செங்கோடு நகரத்தில் புறவழிச்சாலை அமைப்பதற்காக நிலம் எடுக்கும் பணி நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. இராசிபுரத்தில் புறவழிச்சாலை அமைக்க ஏற்கெனவே ஒரு பகுதியில் நிலம் எடுக்கப்பட்டிருக்கிறது. மீண்டும் கூடுதலாக புறவழிச் சாலை அமைக்க நிலம் எடுக்கின்ற பணி நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

நாமக்கல் மாவட்டத்திற்கு அரசு சட்டக் கல்லூரியை உருவாக்கித் தந்ததும் மாண்புமிகு அம்மாவின் அரசு தான். மலைவாழ் மக்கள் நிறைந்த சேந்தமங்கலம் பகுதியில் அங்குள்ள மாணவர்கள் உயர்கல்வி படிப்பதற்காக கலை மற்றும் அறிவியல் கல்லூரி அமைக்கப்பட்டு, அதற்கான கட்டடங்களையும் நானே திறந்து வைத்தேன். இவ்வளவு பணிகள் இந்த மாவட்டத்தில் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மல்லசமுத்திரம், எலச்சிப்பாளையம் மற்றும் பரமத்தி ஊராட்சி ஒன்றியங்களைச் சார்ந்த 724 குடியிருப்புகளுக்கு கூட்டுக் குடிநீர்த் திட்டத்தில் ரூ.250 கோடி மதிப்பீட்டில் நிறைவேற்றுவதற்கு அரசால் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. 'ஜல்ஜீவன் மிஷன்' திட்டத்தின் கீழ், 2020–2021ஆம் ஆண்டில் 46 ஊராட்சிகளில் 146 குக்கிராமங்களுக்கு ரூ.19 கோடி மதிப்பீட்டில் வீடுகளுக்கு குடிநீர் வழங்கும் திட்டத்திற்கு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டிருக்கிறது.

மகளிர் சுயஉதவிக் குழுக்களுக்குத் தேவையான கடனுதவிகள் வழங்கப்பட்டிருக்கின்றன. வேளாண்மைத் திட்டத்தைப் பொறுத்தவரை, பயிர்க் காப்பீட்டுத் திட்டத்தின் மூலம் ரூ.141 கோடி இழப்பீடாகவும், நுண்ணீர்ப் பாசனத் திட்டத்தின் கீழ், நான்கு ஆண்டுகளில் ரூ.107 கோடி மானியமாகவும் இந்த மாவட்ட விவசாயிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது. மேலும், 2020–2021ஆம் ஆண்டிற்கு சுமார் ரூ.78 கோடி நுண்ணீர் பாசன திட்டப் பணிகளுக்காக வழங்க திட்டமிடப்பட்டுள்ளது.

தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியத்தின் மூலம் நாமக்கல் மாவட்டத்தில் சுமார் 1,648 அடுக்குமாடிக் குடியிருப்புகள் கட்டுவதற்கு ரூ.133.44 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. திருச்செங்கோடு மற்றும் இராசிபுரம் நகராட்சிகளில் 1,052 அடுக்குமாடிக் குடியிருப்புகள் கட்டுவதற்கு ரூ.92.09 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. ஏழை, எளிய மாணவர்கள் தரமான கல்வி கற்பதற்கு ஏதுவாக பள்ளிகளின் தரம் உயர்த்தப்பட்டுள்ளன. மூன்றாண்டுகளில் மட்டும் 8 நடுநிலைப் பள்ளிகளை உயர்நிலைப் பள்ளிகளாகவும், 2 உயர்நிலைப் பள்ளிகளை மேல்நிலைப் பள்ளிகளாகவும் இந்த மாவட்டத்தில் தரம் உயர்த்தப்பட்டுள்ளது.

இவ்வாறு நாமக்கல் மாவட்டத்தில் பல்வேறு திட்டங்களை மாண்புமிகு அம்மாவின் அரசு செயல்படுத்திக் கொண்டிருக்கிறது. மாண்புமிகு அமைச்சர்கள், மாண்புமிகு நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்களும் வைத்த கோரிக்கைகளில் பெரும்பாலானவை நிறைவேற்றப்பட்டுள்ளன. முக்கியமாக, நாமக்கல் மாவட்டத்திற்கு ஒரு அரசு மருத்துவக் கல்லூரியை அறிவித்த அம்மாவின் அரசு, அதற்கான கட்டடங்கள் கட்டுவதற்கு தேவையான நிதி ஒதுக்கப்பட்டு, பணிகள் தொடங்கப்பட்டுள்ளன என்ற மகிழ்ச்சியான செய்தியையும் தெரிவித்துக் கொள்கிறேன். ஒரு மாவட்டத்திற்குத் தேவையான அனைத்துத் திட்டங்களையும் வழங்கிய ஒரே அரசு மாண்புமிகு அம்மாவின் அரசுதான் என்பதை பெருமையோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

நீங்கள் மகத்தான பணிகளைச் செய்யப் பிறந்தவர்கள் என்பதில், நம்பிக்கை கொள்ளுங்கள் நிமிர்ந்து நின்று துணிவுடன் நடைபோடுங்கள்.

– சுவாமி விவேகானந்தர்

நாமக்கல் மாவட்ட வளர்ச்சிப் பணிகள்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **எடப்பாடி கே. பழனிசாமி** அவர்கள் 21.08.2020 அன்று நாமக்கல் மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலகத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில், வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை, மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை, நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை, ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை ஆகிய துறைகளின் சார்பில் ரூ.14.44 கோடி மதிப்பீட்டிலான 26 முடிவுற்ற திட்டப் பணிகளை திறந்து வைத்து, பொதுப்பணித் துறை (நீர்வள ஆதாரம்), மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை, தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறை ஆகிய துறைகளின் சார்பில் ரூ.137.65 கோடி மதிப்பீட்டில் 130 புதிய திட்டப் பணிகளுக்கு அடிக்கல் நாட்டினார்கள்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **எடப்பாடி கே. பழனிசாமி** அவர்கள் 21.08.2020 அன்று நாமக்கல் மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலகத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில், பயனாளிகளுக்கு அரசு நலத்திட்ட உதவிகளை வழங்கினார்கள். உடன் மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் திரு.பி.தங்கமணி, மாண்புமிகு சமூகநலம் மற்றும் சத்துணவு திட்டத்துறை அமைச்சர் டாக்டர் வெ.சரோஜா, நாடாளுமன்ற மற்றும் சட்டமன்ற உறுப்பினர்கள், நாமக்கல் ஆட்சித்தலைவர் திரு.கா.மெகராஜ், இ.ஆ.ப., மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உள்ளனர்.

படமும்! செய்தியும்

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தின் வாயிலாக மொழிபெயர்ப்பு நூல்கள் வெளியீடு

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **எடப்பாடி கே. பழனிசாமி** அவர்கள் 07.09.2020 அன்று தலைமைச் செயலகத்தில், தமிழ் வளர்ச்சித் துறையின் கீழ், செயல்படும் உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தின் வாயிலாக, பதினெண்கீழ்க்கணக்கு நூல்களில் தெரிவு செய்யப்பட்ட 1,837 பாடல்கள், பிரெஞ்சு மற்றும் ஜெர்மன் ஆகிய மொழிகளில் மொழிபெயர்ப்பு செய்து, நூல்களை வெளியிட்டார்கள்.

இணையவழி பட்டமளிப்பு விழா

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **எடப்பாடி கே. பழனிசாமி** அவர்கள் 24.08.2020 அன்று தலைமைச் செயலகத்தில், சவீதா மருத்துவம் மற்றும் தொழில்நுட்ப அறிவியல் நிறுவனத்தின் பதினைந்தாவது இணையவழி பட்டமளிப்பு விழாவில் காணொலி மூலமாக முதன்மை விருந்தினராக கலந்து கொண்டார்கள்.

சுமார் 86 ஆண்டுகள் பழமை வாய்ந்த கட்டளை மேட்டுவாய்க்கால் புனரமைக்க ரூ.335.50 கோடி ஒதுக்கி பணிகளை துவக்கி வைத்து, விவசாயிகளின் விடிவெள்ளியாக திகழும் தமிழக முதல்வர்

கரூர் மாவட்டம் ஆயத்த ஆடை உற்பத்திக்கும், பேருந்து கட்டுமானத்திற்கும், கொசுவலை மற்றும் போர்வைகள் உற்பத்திக்கும் பெயர் பெற்ற மாவட்டம் என்றாலும், விவசாயத்திலும் சிறந்து விளங்கும் மாவட்டமாகத் திகழ்கின்றது.

ஒரு விவசாயக் குடும்பத்தில் பிறந்து வளர்ந்து, தானும் ஒரு விவசாயியாக இருந்து இன்று தமிழ்நாட்டின் முதலமைச்சராக உயர்ந்து, மாண்புமிகு அம்மா அவர்கள் வழியில் நல்லாட்சி நடத்தி, குடிமராமத்து என்ற திட்டத்தை அறிமுகப்படுத்தி, விவசாயிகளின் வாழ்வில் ஒளியேற்றினார்கள்.

நாட்டின் முதுகெலும்பு விவசாயம் என்பதை, மனிதில் கொண்டு, அந்த விவசாயம் செழிக்க தேவையான திட்டங்களை வகுத்து செயல்படுத்தி குடிமராத்து நாயகனாக திகழ்கிறார்.

கரூர் மாவட்டம் கிருஷ்ணராயபுரம் வட்டம் மாயனூர் கிராமத்தில் காவிரி ஆற்றின் குறுக்கே மாயனூர் கதவணை அமைந்துள்ளது. கட்டளை உயர்மட்டக் கால்வாய் மாயனூர் கதவணையின் வலது கரையில் பிரிந்து 62.124 கிலோ மீட்டர் வரை அருகில் உள்ள திருச்சி மாவட்டம் வரை செல்கின்றது.

கட்டளை உயர்மட்டக் கால்வாய் 1934ஆம் ஆண்டு அமைக்கபட்பட்ட சுமார் 86 ஆண்டுகள் பழமையான வாய்க்கால் ஆகும். அத்தகைய பழமையான இந்த வாய்க்காலின் உள் கட்டுமானங்களை சீர்செய்து புனரமைக்க, ரூ.335.50 கோடி ஒதுக்கி புனரமைக்கும் பணியினை மாண்புமிகு முதல்வர் அவர்கள் துவக்கி வைத்திருப்பது கரூர் மற்றும் திருச்சி மாவட்ட விவசாயிகளிடையே மிகுந்த மகிழ்ச்சியினை ஏற்படுத்தியுள்ளது.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் உத்தரவால் புனரமைக்கப்படும் இந்த கட்டளை மேட்டு வாய்க்கால் மூலம், கரூர் மாவட்டத்தில் 20,185 ஏக்கர் நிலங்கள் மற்றும் திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் 3,589 ஏக்கர் நிலங்கள், எனமொத்தம் 23,774 ஏக்கர் நிலங்கள் பாசனவசதி பெறும். எனவே, இத்திட்டத்தால் விவசாயிகள் பெருமகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

கட்டளை மேட்டு வாய்க்கால் மூலம் பாசன வசதிபெறும் விவசாயிகள் இத்திட்டம் பற்றி தெரிவிக்கையில்,

“எனது பெயர் ரெங்கராஜ். நான் ரெத்தினம்பிள்ளை புதுார் கிராமத்தில் சுமார் ஒரு ஏக்கர் பரப்பில் வாழை பயிரிட்டுள்ளேன். கட்டளை மேட்டு வாய்க்காலில் வரும் நீரை நம்பிதான் எங்க விவசாயம் இருக்கு. எங்க பகுதியில் குடிமராமத்து திட்டம் சிறப்பாக செஞ்சி இந்த கட்டளை மேட்டு வாயக்கால் தூர்வாருனாங்க. தண்ணீரோட

கரூர் மாவட்ட விவசாயிகள் நன்றி தெரிவித்து பெருமிதம்!

ரெங்கராஜ்

போக்குக்கு இடஞ்சலா இருந்த செடி கொடியெல்லாம் எடுத்து சுத்தமாக்குனாங்க. இப்ப தண்ணீர் வாய்க்காலில் நல்லா ஓடுது. இப்ப இந்த வாய்க்கால சீர் செய்ய பணம் ஒதுக்கி அந்த வேலைய முதல்வர் ஆரம்பிச்சிருக்காருனு சொன்னாங்க. மனசுக்கு ரொம்ப சந்தோசமா இருக்கு. இந்தக் கால்வாய்யை நிரந்தரமா சரி பண்ணிட்டா இந்த பக்கம் மட்டுமில்ல, கரூரிலிருந்து திருச்சி வரைக்கும் உள்ள விவசாயிக மனசெல்லாம் குளிர்ந்துபோகும். விவசாயத்துக்கு தேவையான தண்ணீர் போதுமான அளவு கிடைக்கும். என்னப்போல ஏழை விவசாயிகள் வயித்துல பால்வாக்குறமாதிரி திட்டங்கள கொடுக்கின்ற நம்ம முதலமைச்சர் அய்யாவுக்கு நாங்க ரொம்ப நன்றிக்கடன்பட்டிருக்கோம்'' என்றார்.

கணக்குப்பிள்ளையூரைச் சேர்ந்த
திரு.ராசுப்பிள்ளை என்பவர் தெரிவிக்கையில்,

ராசுப்பிள்ளை

“எனக்கு வயசு 68. ஆனா கட்டள மேட்டு வாய்க்காலுக்கு 80 வயசுக்கு மேலங்க. அவளோ பழமையாக வாய்க்காலுங்க. இத்தனை வருசமா இந்த வாய்க்கால்ல வரும் தண்ணிய நம்பித்தான் விவசாயம் செஞ்சிட்டிருக்கோம். தண்ணீர் பத்தாம விவசாயம் அழிஞ்சி போயிடுமோ என்று என்னப்போல மூத்த விவசாயிங்க வெளியில் சொல்ல முடியாத துயரத்துல இருந்தோமுங்க. அப்பதான் நம்ம முதல்வர் அய்யா குடிமராமத்து என்ற திட்டத்தை அறிவிச்சி எங்க மனச குளிரவச்சாரு. அவரும் ஒரு விவசாயி என்பதால், என்னப்போல உள்ள விவசாயிகளுக்கெல்லாம் ரொம்ப பெருமையா இருக்குதுங்க. விவசாயிக்கெல்லாம் விடிவெள்ளியாக இருக்காரு. ரொம்ப பழைமையான இந்த கட்டளை வாய்க்கால் புனரமைக்க, திட்டம் வகுத்து முதல்வர் அய்யா அறிவிச்சது எங்க வாழ்நாள் முழுவதும் மறக்க முடியாதுங்க. அவரு நூறு வருஷம் நல்லா இருக்கனும்ங்க'' என்றார்.

ரதினாதன்பட்டியைச் சேர்ந்த
திருமதி கோப்பாயி என்ற விவசாயி தெரிவிக்கையில்,

கோப்பாயி

“எங்க ஊருப் பக்கம் வாழை, உளுந்து, கரும்பு, வெத்தலை பயிர் செய்கிறோம். வானம்பாத்த பூமியும் இருக்கு. வாய்க்காலை நம்பியிருக்க பூமியும் இருக்கு. நாங்க இந்த கட்டளை மேட்டு வாய்க்காலதான் காலம் முழுதும் நம்பியிருக்கோம். குடிமராமத்து திட்டத்தில் கட்டளை வாய்க்கால் தூர்வாருனப்ப வழக்கமா 7 நாளுல கடைமடைக்கு வர நீர் 2 நாளில் வந்துடுச்சி. இப்ப இந்த வாய்க்காலை நிரந்தரமா சுத்தம் செய்து, நல்லா தண்ணீர் ஓடுற மாதிரி செய்யணும்னு நம்ம முதலமைச்சர் சொன்னது, எங்க மக்களுக்கெல்லாம் ரொம்ப சந்தோசம். விவசாயிக்கு உரிய மரியாதை கிடைக்காம இருந்த காலம் போயி, இப்போ எங்க முதலமைச்சரே விவசாயினு சொல்றது எங்களுக்கெல்லாம் மனசு ரொம்ப பூரிப்பாக இருக்கு. அவரு நல்லா இருக்கனும், என்னை மாதிரி விவசாயிகளின் மனம் அறிந்து செயல்படும் அவருக்கு எங்க நன்றியை தெரிவிக்கிறோம்''.

K.பாவேந்தன்
செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்,
கரூர் மாவட்டம்.

பேரறிஞர் அண்ணா அவர்களின் பிறந்த தினத்தையொட்டி, 131 தமிழக காவல்துறை மற்றும் சீருடை அதிகாரிகள்/ பணியாளர்களுக்கு அண்ணா பதக்கங்கள் வழங்க மாண்புமிகு தமிழக முதலமைச்சர் ஆணை



தமிழ் நாட்டில் காவல் துறை, தீயணைப்பு மற்றும் மீட்புப்பணித்துறை, சிறைத்துறை, ஊர்க்காவல் படை, தமிழ்நாடு விரல்ரேகைப் பிரிவு மற்றும் தடய அறிவியல் துறைகளில் சிறப்பாக பணியாற்றிய அதிகாரிகள் மற்றும் பணியாளர்களை அங்கீகரிக்கும் வகையிலும் மற்றும் பணியில் ஈடுபாடு மற்றும் அர்ப்பணிப்புடன் பணிபுரிந்ததை பாராட்டும் வகையிலும், ஒவ்வொரு ஆண்டும் செப்டம்பர் 15ஆம் நாள் பேரறிஞர் அண்ணா அவர்களின் பிறந்த நாளன்று தமிழக முதலமைச்சரின் பதக்கங்கள் அறிவிக்கப்பட்டு, வழங்கப்பட்டு வருகின்றன.

இந்த ஆண்டு, காவல் துறையில் காவல் கண்காணிப்பாளர் முதல் முதல்நிலை காவலர் வரையிலான 100 அதிகாரிகள் / பணியாளர்களுக்கும், தீயணைப்பு மற்றும் மீட்புப் பணித்துறையில் துணை இயக்குநர் முதல் தீயணைப்பு வீரர் நிலை வரையிலான 10 அதிகாரிகள்/ பணியாளர்களுக்கும், சிறைத்துறையில் உதவி சிறை அலுவலர் முதல் முதல்நிலை சிறைக்காவலர் வரையிலான 10 அதிகாரிகள் / பணியாளர்களுக்கும், ஊர்க்காவல் படையில் மண்டல தளபதி முதல் ஊர்க்காவல் படை வீரர் வரையிலான 5 அதிகாரிகள் / பணியாளர்களுக்கும், விரல்ரேகைப் பிரிவில் 2 துணை காவல் கண்காணிப்பாளர்களுக்கும் மற்றும் தடய அறிவியல் துறை பிரிவில் 2 அதிகாரிகள் முறையே உதவி இயக்குநர்/ அறிவியல் அலுவலர் ஆகியோருக்கு அவர்களின் மெச்சத்தகுந்த பணியினை அங்கீகரிக்கும் வகையில் “மாண்புமிகு தமிழக முதலமைச்சரின் அண்ணா பதக்கங்கள்” வழங்கிட முதலமைச்சர் அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள். பதக்கங்கள் பெறுகின்றவர்களுக்கு அவரவர் தம் பதவிக்கேற்றவாறு, பதக்க விதிகளின்படி வெண்கல பதக்கம் மற்றும் ஒட்டுமொத்த மானியத் தொகையும் அளிக்கப்படும்.

மேலும், தமிழக முதலமைச்சரின் வீரதீர செயலுக்கான தீயணைப்புத் துறை பதக்கம், 15.08.2020 அன்று திருநெல்வேலி சேவியர் காலனியில் உள்ள 70 அடி உயர மாநகராட்சி நீர்நிலைத் தொட்டி மேலிருந்து குதித்து தற்கொலை செய்து கொள்ள முயற்சித்த திரு. எஸ்.கணேசன் (வயது 45) என்பவரை காப்பாற்றியதற்காக, அம்மாவட்டம், பாளையம்கோட்டை தீயணைப்பு மற்றும் மீட்புப் பணி நிலையத்தைச் சார்ந்த திருவாளர்கள் எஸ்.வீரராஜ், நிலைய அதிகாரி மற்றும் எஸ்.செல்வம், தரம் உயர்த்தப்பட்ட முன்னணி தீயணைப்பு வீரர் ஆகியோருக்கு வழங்கப்படுகிறது. இருவருக்கும் தலா ரூ.5 இலட்சம் பண வெகுமதி வழங்கப்படும்.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பின்னர் நடைபெறும் விழா ஒன்றில், பதக்கங்கள் அறிவிக்கப்பட்டுள்ளவர்களுக்கு இப்பதக்கங்களை வழங்குவார்கள்.

ஆற்றல் வேண்டும்

நாம் எண்ணியதைச் செயல்படுத்த முதலில் ஆர்வம் வேண்டும். ஆர்வம் இருந்தால்தான் நம்பிக்கை பிறக்கும். பிறகு அதற்கான வழி வகைகளை ஆராய வேண்டும். அதைச் செயல்படுத்த ஆற்றல் வேண்டும். நாம் மட்டும் ஆற்றல் பெற்றால் போதாது. அந்த ஆற்றல் மற்றவர்களுக்கும் வரும்படி செய்ய வேண்டும். இத்தனைக்கும் பிறகுதான் நாம் எண்ணிய எண்ணத்தைச் செயல்படுத்த முடியும்.

– அறிஞர் அண்ணா

படமும்/ செய்தியும்

தந்தை பெரியார் அவர்களின் 142ஆவது பிறந்தநாள் விழா

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **எடப்பாடி கே. பழனிசாமி** அவர்கள் 17.09.2020 அன்று தமிழ்நாடு அரசின் சார்பில், தந்தை பெரியார் அவர்களின் 142ஆவது பிறந்தநாளையொட்டி சென்னை, அண்ணா மேம்பாலம் அருகில் உள்ள தந்தை பெரியார் அவர்களின் திருவுருவச் சிலைக்கு அருகே வைக்கப்பட்டுள்ள திருவுருவப் படத்திற்கு மலர் தூவி மரியாதை செலுத்தினார்கள். இந்த நிகழ்ச்சியில், மாண்புமிகு துணை முதலமைச்சர் திரு. **ஓ. பன்னீர்செல்வம்**, மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள், மாநில திட்டக் குழு துணைத் தலைவர், நாடாளுமன்ற மற்றும் சட்டமன்ற உறுப்பினர்கள், தலைமைச் செயலாளர் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

மேகதாது அணை கட்டுவதற்கு ஒரு போதும் தமிழ்நாடு அரசு அனுமதிக்காது

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **எடப்பாடி கே. பழனிசாமி** அவர்கள் 15.09.2020 அன்று சட்டமன்றப் பேரவையில், மேகதாது அணை விவகாரம் குறித்து மாண்புமிகு எதிர்கட்சி துணை தலைவர் அவர்களுக்கு அளித்த விளக்கம்

மாண்புமிகு பேரவை தலைவர் அவர்களே,

உச்ச நீதிமன்றம் ஏற்கனவே தெளிவான தீர்ப்பை வழங்கி இருக்கிறது. நமக்கு வழங்கப்பட வேண்டிய நீர் முழுமையாக வழங்கப்பட வேண்டும். அதுமட்டுமல்ல, இந்த நீரை தடுக்கவோ, திருப்பி அனுப்பவோ கூடாது என்று உச்ச நீதிமன்றத்தில் தெளிவான தீர்ப்பு வழங்கப்பட்டு இருக்கிறது என்பது மாண்புமிகு எதிர்கட்சி துணை தலைவர் அவர்களுக்கு நன்றாக தெரியும். இது குறித்து மூன்று, நான்கு முறை மேலாண்மை ஆணையத்திடம் அவர்கள் கொண்டு வந்தார்கள். நாம் கடுமையான ஆட்சேபணை செய்த நிலையில், அதிலிருந்து நீக்கப்பட்டு இருக்கிறது. இது குறித்த வழக்கும் உச்ச நீதிமன்றத்திலே இருக்கிறது. ஆகவே, அவர்கள் எந்த வகையிலும் மேகதாது அணை கட்டுவதற்கு ஒருபோதும் தமிழ்நாடு அரசு அனுமதிக்காது என்பதை திட்டவட்டமாக மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு எதிர்கட்சி துணை தலைவர் அவர்களுக்கு தெரிவித்துக் கொள்கின்றேன். நம்முடைய உரிமையை நிலைநாட்டுவதற்கு உச்ச நீதிமன்றத்தின் தீர்ப்பு முழுமையாக நமக்கு சாதகமாக இருக்கிறது என்பதையும் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு எதிர்கட்சி துணை தலைவர் அவர்களுக்கு தெரிவித்துக் கொள்கின்றேன். ●

தமிழரசு

R.N.I. No. 21446/70 Regn. No. TN/CCN/643/18-20
& WPP No. TN/PMG (CCR) 518/18-20

Date of Publication : 2nd week of every month
Date of Posting : 27th - 30th of every month

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **எடப்பாடி கே. பழனிசாமி** அவர்கள்
15.09.2020 அன்று சட்டப்பேரவையில், தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி எண் 110இன் கீழ்,
முதலமைச்சரின் உதவி மையம் மற்றும் ஒருங்கிணைக்கப்பட்ட
குறைதீர்ப்பு மேலாண்மைத் திட்டம் குறித்து உரையாற்றினார்கள்.

Published by Dr. P. SANKAR, IAS, on behalf of Information and Public Relations Department
Government of Tamil Nadu, Secretariat, Fort St. George, Chennai - 600 009 and Printed by: T. Suyambulingom at TAMILARASU PRESS,
Rajiv Gandhi Salai, Taramani, Chennai - 600 113. Editor: Dr. P. SANKAR, IAS